GOKULAM

கோகுலம்

எப்ரல் '97 ரூ. 5.00



அசத்துகிறான் அர்ஜுன்!

INDIA'S LARGEST SELLING COMICS

DIAMOND COMICS





NEW AMAR CHITRAKATHA

- **Panchatantra**-Crows & Owls
- **Panchatantra**-The Brahmin & Goat
- **Chaitnya Maha Prabhu**
- **Rana Sanga** • **Shivaji**
- **Rana Pratap**

JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postag Stamps worth Rs. 10/-

We shall be offering six books every month. To get a rebate of **Rs. 4/-and Free postag (approx. Rs. 7/-)** you'll have to order six books at a time in a month. In case these books ar not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comic titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six book at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choic Card then you need not send us the card back. In case you do not like the books then yo send us the names of atleast 7 books of your choice so that we can send you 6 books of yo choice available with us at that time.

Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of th benefits. I have read all your rules and shall abide by these.I promise to accept the V.P. eve month.

NAME ______________________

ADDRESS ______________________

____

POST OFFICE ______________ PIN CODE ______________

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ______________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

Send Rs. 10/- advance & get your books by V.P.P.

DIAMOND COMICS PVT. LTD. X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE-2, NEW DELHI-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimb **Hyderabad** : • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore** : Sapna Book Stall, Gandhi Nagar, • A.K. Agencies, Rajaji Nagar • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road. **Calicut** : Remami Agencies P.O. Araskinar Calicut • Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut



கோகுலம்

ஏப்ரல் 1997
மலர்: 15
இதழ்:3

உயிர்களிடத்தில் அன்பு வேணும்- தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும்

- பாரதியார்



அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்:

இந்த இதழ் உங்கள் கைகளில் தவழும்போது, ஆண்டுத் தேர்வுகள் எல்லாம் முடியும் நிலையில் இருக்குமே? கோகுலம் வாசகர்கள் அனைவருமே திட்டமிட்டுப் படிப்பவர்கள். அதனால். எல்லோருமே நன்றாகத் தேர்வுகளை எழுதி மேல் வகுப்புக்குச் செல்ல வேண்டும் என வாழ்த்துகிறேன்.

அண்மையில் பிருந்தாவனக் கவியரங்கத்தில் வெளியான ஒரு பாடல், அதை எழுதிய தம்பியின் சொந்தப் படைப்பு அல்ல என்பது தெரிய வந்துள்ளது. இம்மாதிரி மற்றவர் எழுதியதைத் தன்னுடைய படைப்பாக அனுப்பி வைப்பது பெருந்தவறு. ஆசிரியருக்கு எப்படித் தெரியப் போகிறது என்று எண்ணலாம். ஆசிரியரை வேண்டுமென்றால் ஏமாற்றி விடலாம். பல்லாயிரக்கணக்கான வாசகர்களை ஏமாற்றவே முடியாது. இனி, பிருந்தாவனக் கவியரங்கத்திற்குப் பாடல்களை அனுப்பும்போது அவை தங்கள் சொந்தக் கற்பனையே என்பதற்குக் கண்டிப்பாக உறுதி அளிக்க வேண்டும். இம்மாதிரி உறுதிமொழி இல்லாது வருபவை பரிசீலினைக்கு ஏற்கப்படமாட்டா.

1997 ஜனவரி இதழிலிருந்து கோகுலத்தில் 16 பக்கங்களைக் குறைத்து விட்டது குறித்து தம்பி, தங்கைகள் சிலர் வருத்தம் தெரிவித்து எழுதியிருக் கிறார்கள். பெற்றோர்கள் சிலரும் "80 பக்க கல்கி மூன்றே ரூபாய்தான்; ஆனால் அதே 'கல்கி' நிறுவனத்திலிருந்து வெளி வரும் 80 பக்க கோகுலத்தின் விலை மட்டும் ஐந்து ரூபாயா?" என்று சண்டை போட்டுக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்!

'கல்கி' பத்திரிகையின் விலை, என்றுமே மூன்று ரூபாயாக இருந்து விட முடியாது என்பது ஒரு புறமிருக்க, ஒரு பத்திரிகையின் உயிர்நாடி அதில் இடம் பெறும் விளம்பரங்களே. 'கல்கி' இதழில் விளம்பரங்கள் இருப்பதைக் கவனித்திருப்பீர்கள். அந்த மாதிரியான விளம்பரப் பக்கங்கள் கோகுலத்திற்குக் கிடைப்பதில்லை. தயாரிப்புச் செலவினங்களோ மாதா மாதம் கூடிக் கொண்டே போகிறது. எனவே வேறு வழியில்லாமல் பக்கங்களைக் குறைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

மலையாளத்திலும், கன்னடத்திலும், தெலுங்கிலும் வெளிவரும் சிறுவர் பத்திரிகைகள் பல லட்சக்கணக்கில் விற்பனையாகின்றன. கோகுலம் தரமான சிறுவர் இதழ் என்று பாராட்டுகிறார்களே தவிர, குழந்தைகளுக்கு வாங்கித் தரத் தயங்கும் நிலை தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளது.

இந்த நிலை மாற வேண்டும். மாதம் ஒரு முறை ஒரே ஓர் கப் காப்பி சாப்பிடுவதைத் தியாகம் செய்தால்கூட நம் குழந்தைகளுக்குப் பெருமகிழ்ச்சி தரக்கூடிய கோகுலத்தை வாங்கித் தரலாம் என்ற எண்ணம் எல்லாப் பெற்றோர்களுக்கும் ஈஸ்வரன் அருளால் ஈஸ்வர ஆண்டில் ஏற்பட வேண்டுவோம்!

அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்!

அன்புடன்

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)



பத்து வயது பலே சேம்பியன்!



• அர்ஜுன் மிஸ்ரா

• மாஸ்டர் திலீப்குமாருடன்...

பள்ளி மாணவ மாணவியரிடையே மறைந்து கிடக்கும் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் அமைப்புகளில், சென்னை நகரத்தில் இயங்கும் டான்பாஸ்கோ அதலெடிக் சங்கம் சிறப்பான இடத்தை வகிக்கிறது. அண்மையில் இது நடத்திய பள்ளிகளுக்கு இடையேயான அதலெடிக் போட்டிகளில் நகரத்தின் பிரபல பள்ளிகள் பலவும் கலந்து கொண்டன. மாணவ மாணவியரிடையே மறைந்து கிடக்கும் விளையாட்டுத் திறமைகள் பல வெளிப்பட்டன.

11 வயதுக்கு உட்பட்ட சிறுவர் பிரிவில் உயரம் தாண்டும் போட்டியில் பத்தே வயது நிரம்பிய அர்ஜுன் மிஸ்ரா அதிக உயரம் தாண்டி வெற்றி பெற்றான். இந்த உயரம் தாண்டும் விளையாட்டில் இவன்தான் சேம்பியன்!

அர்ஜுன்மிஸ்ராவைச் சந்திக்க அவன் படிக்கும் பத்மா சேஷாத்ரி பாலபவன் பள்ளிக்குச் சென்றோம். அவனுக்குப் பயிற்சி அளித்த பள்ளியின் பி.டி. டைரக்டர் திரு. திலிப்குமார் எங்களை வரவேற்றார். பாதி விளையாட்டில் அப்படியே ஓடி வந்திருந்த சிறுவன் ஒருவனை எங்களுக்கு அறிமுகப்படுத்தி, "இந்தச் சிறுவன் தான் உயரம் தாண்டும் சேம்பியன் அர்ஜுன் மிஸ்ரா" என்றார்.

கேள்விகளுக்குப் பதிலளித்த போதிலும் சிறுவனின் மனம் பாதியில் விட்டுவிட்டு வந்திருந்த விளையாட்டிலேயே இருப்பதைக் காட்டியது!

அர்ஜுன் மிஸ்ராவின் பெற்றோர் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். தந்தை ஓ.பி. மிஸ்ரா, பாரத் ஓவர்சீஸ் வங்கி மேலாளர். இரண்டு ஆண்டுகளாகத்தான் சென்னையில் இருக்கிறார்கள். இதற்கு முன்பு பாங்காக், சண்டிகர் போன்ற இடங்களில் இருந்தவர். மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊர் மாற்றல் பணி என்பதால் நிலைத்து ஓர் ஊரில் இருக்க முடியாது.

அர்ஜுன் மிஸ்ராவும் அவன் தம்பி கௌடில்யா மிஸ்ராவும் இரட்டையர்கள். இருவரும் ஒரே பள்ளியில், ஒரே வகுப்பில், ஒரே பிரிவில் படிக்கிறார்கள். இருவருமே படிப்பிலும் சரி, மற்ற விளையாட்டுகளிலும் சரி தனியான ஆர்வம் காட்டுபவர்கள்.

பள்ளியின் பி.டி. டைரக்டர் திரு. திலீப்குமார் அர்ஜுன் மிஸ்ராவின் வெற்றியைப் பற்றி விளக்கினார்.

"எங்கள் பள்ளி இன்டோர் கேம்ஸில் பல குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்ற பெருமைக்கு உரியது. டேபிள் டென்னிஸில் இந்தியாவுக்காக விளையாடிய சேட்டன் பி. பாபர் இங்கு தயாரானவரே. இதே போல் கே. ஆர். ஷரத், அகில இந்திய அளவில் ஜூனியரில் 2-ஆம் இடத்தில் இருப்பவர்.

ஏ. ஷரத்கமால் மாநில அளவில் சப்ஜூனியரில் முதல் இடத்திலும், ஜூனியரில் 2-வது இடத்திலும் இருப்பவர். இப்பொழுது 9-ஆவது படிவத்தில் படித்து வருகிறார். திறந்தவெளி ஆட்டப் பந்தயங்களில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றிருப்பது இதுவே முதல் முறை. இத்தனைக்கும் டான்பாஸ்கோ போட்டிகளில் கலந்து கொள்ள மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தது பத்து நாட்கள்தான். ஆர்வம் இருந்ததால் உடனே பிடித்துக் கொண்டார்கள். உயரம் தாண்ட மூன்று பேர்களுக்குப் பயிற்சி தந்தோம். அர்ஜுன் மிஸ்ரா 1.10 மீட்டர் தாண்டி சாம்பியன் இடத்தைப் பெற்றான். இரண்டாம் இடம் வேறு பள்ளிக்கு. மூன்றாவது இடத்தைப் பெற்ற H. FAZIL எங்கள் பள்ளியின் 5-வது வகுப்பு மாணவனே" என்று பெருமையுடன் கூறினார் திலீப்குமார்.

உயரம் தாண்டுவதில் சேம்பியனாகி விட்ட அர்ஜுன்மிஸ்ரா எல்லா விளையாட்டுகளிலும் ஆர்வம் காட்டுகிறான். கிரிக்கெட்டில் அளவிட முடியாத ஆர்வம்.

ஒரு முழுமையான பி.டி. டைரக்டரான திலீப்குமார், திறமையான பயிற்சியாளர் பட்டியலில் சிறப்பான இடத்தைப் பெற்றவர். 17 ஆண்டுகளாக இதே பள்ளியில் விளையாட்டுப் பிரிவைக் கவனித்து வருபவர். இந்தப் பள்ளியின் தலைவரும் டைரக்டருமான திருமதி. ஒய்.ஜி. பார்த்தசாரதி அவர்கள் பாரம்பரியமிக்க கலைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். விளையாட்டுத் துறையிலும் பள்ளி சாதனை புரிய வேண்டும் என்பதில் குறியாக இருப்பவர். பள்ளியின் தலைவரான திருமதி பாக்யலக்ஷ்மி கைலாசம், துணைத் தலைவரான திருமதி புஷ்பா பாலஜெகம் இருவரும் திலீப்குமார் எடுக்கும் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்புத் தருகிறார்கள். இருந்தாலும் சப்-ஜூனியர் அளவில் சிறுவர்களைத் தயார் செய்வது என்பது அத்தனை எளிதல்ல. பாதுகாப்பு, பயிற்சி முடிந்து வீட்டுக்குப் பத்திரமாக அனுப்பும் பணி போன்ற பல பிரச்னைகள் உள்ளன. எத்தனை பயிற்சி அளித்திருந்த போதிலும், சரியாக போட்டி தினத்தன்று கண்டிப்பாக வருபவர்கள் என்று கூற முடியாது. இத்தனை இடையூறுகளையும் கடந்து வெற்றி பெறுவது என்பது சாதாரணமான காரியம் அல்ல. இந்தச் சாதனையை சிறுவர்கள் அர்ஜுன் மிஸ்ராவும், H. Fazil லும் நிகழ்த்தியிருக்கிறார்கள். இதற்காகப் பள்ளி நிர்வாகத்தை எத்தனை பாராட்டினாலும் தகும். அர்ஜுன் மிஸ்ராவும், H. Fazil லும் ஜூனியர் அளவிலும், சீனியர் அளவிலும் அகில இந்திய அளவில் இடம்பிடித்து இப்பள்ளிக்கு மேலும் பெருமையைச் சேர்ப்பார்கள் என்பதில் ஐயம்
இல்லை. இப்பொழுதே பாராட்டி வைப்போம்.


- ரே

அட்டை வண்ணப்படம் : ஸ்ரீஹரி

கோகுலம்

ஏப்ரல் 1997

இந்த இதழில்....



தேடித் தேடி - உதயை. மு. வீரையன், பக். 80 ரூ. 15/- மக்கள் பதிப்பகம், 31, வேங்கடேசன் தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.

கோடீஸ்வரரின் ஒரே மகளான சிறுமி ராணி மலையனூர் மலையடிவார சாரணர் முகாமில் இருந்து கடத்தப்படுவதை, சாரண மாணவன் பாண்டியன் கவனித்து, அவளைக் காக்கப் பின் தொடர்கிறான். இருவரும் படிப்படியாக புதுப்புது ஆபத்துகளில் சிக்கி மீள்வதுதான் கதை. ராணியைத் திரும்ப ஒப்படைக்க கொள்ளைக்காரன் மலையப்பன் இரண்டு லட்ச ரூபாய் கேட்கிறான், அவனை இறுதியில் இன்ஸ்பெக்டர் பிடித்து விடுகிறார்.

ராணிக்கும், அவளைத் தேடிக் கொண்டு போகும் பாண்டியனுக்கும், அவர்களுக்கு உதவ முன்வரும் காட்டுவாசிகளுக்கும், சாமியாருக்கும், கொள்ளைக்காரன் மலையப்பன் கொடுக்கும் துன்பங்கள், கொலை முயற்சிகள், அவைகளிலிருந்து அவர்கள் இருவரும் தப்புவது ஆகியவை, நாவலை நன்கு நடத்திச் செல்கின்றன.

செய்யும் தொழிலே தெய்வம், வி. ஆர். வரதராஜன், பக். 80, ரூ. 14/- திருமலைதாசன் பதிப்பகம், 52, வி.சி. கார்டன் முதல் சந்து, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 600 028.

நல்ல நெறிகளைப் பதியவைக்கும் பத்துச் சிறு கதைகள். சாதாரண விவசாயியின் மகன் முருகேசனுக்கு ஆதரவு காட்டி, மனம் தளர விடாமல் ஊக்குமூட்டி, அவனை ஐ.ஏ.எஸ். அதிகாரியாக உயர்த்த உதவும் இட்லிக்கார கருப்பாயி (செய்யும் தொழிலே தெய்வம்); மண்ணெண்ணெய் விளக் கொளியில் படித்து பெரும் பதவிக்கு உயரும் தமிழ் வண்ணன் (பொறுத்தார் பூமியாள்வார்); உயர மானவன் என்ற ஆணவத்தால் அறிவு தடுமாறி ஆலமரத்தால் மனம் திருந்தும் பனைமரம் (அவமானம்); தன் புகழ் பாட மறுக்கும் புலவர்களை சவுக்கால் அடித்துத் தன் முடிவைத் தேடிக் கொள்ளும் மன்னன் (மன்னனும் மாசு அறக் கற்றோனும்); நல்லவன் வேடம் கலைந்து சுயநல வடிவம் வெளிப்படத் தலைகுனியும் இதய வேந்தனும் (சூழ்ச்சியின் வீழ்ச்சி); தன் கொடிய பணத் தாசைக்கு தன் குழந்தையே பலியாகி விட்டதை அறிந்த பிறகு மனம் மாறும் (சுந்தர்லாலும்); ஏழைக் குழந்தைகளிடம் மாசற்ற அன்பு காட்டும் முனுசாமித் தாத்தா (தெய்வநெஞ்சம்); தன் கருமித் தனத்தால்; சுயநலத்தால் எல்லாம் இழக்கும் மங்களநாயகன் (பாடுபட்டுத் தேடி) பாத்திரங்களும் குழந்தைகளுக்கு நல்வழிகாட்டும் படைப்புகள்.

பாரதிகண்ட கடவுளின் குழந்தை, வே. இரா. சிவஞானவள்ளல், பக். 96, ரூ. 20/- அமிர்தம் பதிப்பகம், 15, முத்துப்பிள்ளை தெரு, வ.உ.சி. நகர், வேலூர் - 632 001.

சிறுவர்க்காகப் பாடல்கள் எழுதிப் பண்பட்ட கவிஞரின் பார்வையில் பாரதியின் படைப்புகள் அலசப்படுகின்றன. சிறுவர் நோக்கில் பாரதியின் பாடல் அடிகள், வசன நடைகள் ஆய்வு செய்யப் பட்டு, பல பொருள்களில் தோரணமாகத் தரப்பட் டுள்ளது. பெரியவர்கள் நோக்கிலேயே பாரதியைக் காணாமல் சிறுவர் நோக்கில் படைப்புகள் ஆய்வு செய்யப்பட்டு ஐந்து கட்டுரைகளாக வழங்கப்பட் டுள்ளது புதுமையாகவும், பெருமையாகவும் உள்ளது. இந்த ஆய்வு பாப்பா பாடல்களுக்கு அப்பாலும் விரிந்துள்ளது திகைப்பைத் தருகிறது. பாரதியைக் கரைத்துப் பிழிந்து, வடிகட்டி, குழந்தைகளுக்காகத் தந்துள்ளார். கடின உழைப்பு. ஆதரிக்க வேண்டிய படைப்பு.

விடுதலை வேண்டி., அழ. கிருஷ்ணமூர்த்தி

(அழகி), பக். 64, ரூ. 10/- எம்.சி. ஜெயப்பிரகாசம், அறிவுப்பாசறை வெளியீட்டகம், மம்சாபுரம் - 626 110.

விடுதலைப் போராட்டத்தின் ஒரு நிகழ்ச்சியை உயிராகக் கொண்டு, அதன் பின்னணியில் படைக்கப்பட்ட நாவல். நாவலின் கதாநாயகன் பூங்குளம் பண்ணையாரிடம் பணியாற்றும் இளைஞன் காளையா, ஆங்கில ஆட்சியாளரின் தாசராகிய பண்ணையாரின் நீர்ப்பாசனக் குளத்தை யாரோ வெள்ளம் வந்த ஆபத்துக் காலத்தில் வெட்டி, பண்ணையாரின் விளைநிலங்களை மண்மேடாக்கி, பழியை காளையாவின் தலையில் போட்டு விடுகிறார்கள். உண்மை ஊழியனான காளையா தற்செயலாக, யூகத்தின் பெயரில் ஒரு நாயைப் பிடித்து வைக்கிறான். பண்ணையார் விசாரிக்க, நாயைக் கொண்டு குற்றவாளியைப் பிடித்து வருவதாக காளையா சபதம் போடுகிறான். காளையா நாயைத் தேடுவதும், அந்த முயற்சியில் வீரன் வாஞ்சிநாதன் உதவுவதும், ஆங்கில ஆட்சியாளர்கள் காளையாவைத் துரத்துவதும், காளையா வாஞ்சியின் உதவியால் தப்பி புதுவை மண்ணை மிதித்து, வாஞ்சியின் தியாகத்தை அறிந்து கண் கலங்குவதும்தான் கதை. அடுத்து என்ன நடக்குமோ என்ற துடிப்பைப் படிப்பவர்களிடம் ஏற்படுத்தியபடி. கதை விறுவிறுப்பாகச் செல்கிறது.

இந்தப் புத்தகத்தில் இன்னும் இரண்டு கதைகள் உள்ளன. வீரசிவாஜியின் மதநல்லிணக்கத்தின் உயர்வைக் குறிக்கும் "மின்னல் வீரன்", முதல் விடுதலைப் போரை 1857-ல் துவக்கி வைத்த பெருமைக்குரிய "பவிலியா" நிகழ்ச்சிகளை விளக்கும் "ஜகதீசபுரிச் சிங்கம்.

நீலன்மலை அதிசயம், ஜெ. எத்திராஜன், பக். 80 ரூ. 19/- சாரதா நூலகம், ஏ. ரூவரசம்பேட்டை பிரதான சாலை, கிருஷ்ணாநகர், சென்னை - 600 091.

ஆதரிப்போர் இன்றி அல்லல்படும் முருகன் என்ற அனாதைச் சிறுவன், ஆதரவு கிடைக்கும் இடங்களில் ஏற்படும் பகை, வெறுப்பு, விபத்து காரணமாகத் துரத்தப்பட்டு துன்பப்படுகிறான்; இல்லை தானே வெளியேறி விடுகிறான். காட்டிக் கொடுத்த குற்றத்திற்காகத் திருடன் ஒருவனுடைய பகையையும் தேடிக் கொள்கிறான். சிறுவன் ஆதரவு தேடி அலைவதும், துன்பங்கள் தொடர்வதும்தான் கதை. இதன் ஊடேதான் கதை வளர்கிறது. சிறுவனால் சிறைக்கு அனுப்பப்படும் திருடன், திருந்தி, தான் கற்ற பொம்மை செய்யும் கலையைப் பயன்படுத்தி, சிறுவர்கள் படிக்க வேண்டி நீலமலை மேல் அமைக்கப்பட்டு பாழடைந்து கிடக்கும் இலவசப் பள்ளியைப் புதுப்பித்து சிறுவன் முருகனின் விருப்பத்திற்கு ஏற்ப மீண்டும் திறக்கிறான்.

கதை விடுவிடுவென்று படிப்பவரை நிற்க விடாமல் நடைபோடுவது சிறப்பாக உள்ளது.


என்ன ஒற்றுமை? — போட்டி முடிவு

ஆப்ரஹாம்லிங்கன், இராமகிருஷ்ண பரமஹம்சர், ஜார்ஜ்வாஷிங்டன், சரோஜினி நாயுடு, மொரார்ஜிதேசாய் ஆகியவர்களின் படங்களைக் கொடுத்து, இவர்களுக்குள் உள்ள ஒற்றுமை என்ன என்று கேட்டிருந்தோம். பல துறை புகழ்பெற்றவர்களான இவர்கள் ஐவரும் பிப்ரவரி மாதம் பிறந்தவர்கள் என்பதுதான் ஒற்றுமை.

குலுக்கல் முறையில் ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. எஸ். சுதாகரன், திருவிடைமருதூர்.
2. கா. உமாபதி, தேவனூர் புதூர்.
3. சிவ அகோர சக்திவேல் முருகன், கோவை - 1.
4. எஸ். ஜவஹர், ருமேஷ், அம்மன்பாளையம், சேலம் மாவட்டம்.
5. இ. பால்ராஜ், கேசவனேரி, நெல்லை மாவட்டம்.
6. சி. பத்மாவதி, பொன்னேரி.
7. ச. தேன்மொழி, திருப்பராயத்துறை.
8. வி. காஜாமைதீன், திருச்சி - 8.
9. அ. மேரி அருள் பிரியா, மூல்கில்தரைப்பட்டு.
10. சி.கண்ணன், மதுரை - 2.
11. கே. பத்மாவதி, கோவை - 4.
12. பத்ம சிவாஜி, நீடாமங்கலம்.
13. ஜி. சுரேந்திரநாத், கிருஷ்ணகிரி.
14. அ. ஸ்ரீகாந்த், நெய்வேலி - 3.
15. இ. எழிலரசி, புதுச்சேரி - 10.
16. தி. பேபி சுகுணா, சென்னை - 61.
17. எஸ். சிவகாமி, சிதம்பரம் - 1.
18. சு. அபிதா, சென்னை - 33.
19. ரா. விஜயலட்சுமி, குன்றக்குடி - 6.


பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.



எங்கள் ஊரில் நடந்தது!

யார் விசில் ஊதுவாங்க?

என் தங்கை பையன் ஹரிகணேஷ், எல்.கே.ஜி. படிக்கிறான். குடும்பத்தினருடன் மிக நன்றாகப் பழகுவான். நாங்கள் வெளியூர் சென்றால் கூட எங்களுடன் வந்துவிடுவான். பேருந்தில் செல்லும் போதெல்லாம் அவன்தான் கண்டக்டரிடம் பணம் கொடுத்து டிக்கெட் வாங்குவான். ஊரின் பெயரை மட்டும் நாங்கள் சொல்லுவோம். ஸ்டாப்பிங் வந்ததும், விசில் ஊதும் சத்தத்தைக் கேட்டு "இது எந்த ஊர்?" என்று கேட்பான். விசில் ஊதினால் வண்டி நிற்கும் என்பது அவனுக்கு நன்கு தெரியும். ஒரு நாள் ரயிலில் போய்க் கொண்டிருந்தோம். ரயிலில் ஏறி



அமர்ந்ததும், "நான்தான் டிக்கெட் எடுப்பேன். பணம் கொடு" என்றான். இதில் முன்னாடியே டிக்கெட் வாங்கணும். டிக்கெட் இங்கு எடுக்க முடியாது. பஸ் மாதிரி இதில் கண்டக்டர் எல்லாம் கிடையாது" என்று சொன்னேன். உடனே அவன் "அப்படின்னா யார் விசில் ஊதுவாங்க?" என்று கேட்டான் அப்பாவித் தனமாக.

மேலப்பாதி, என். ராஜலெட்சுமி.



என்ன ரேங்க்?

எங்கள் வீட்டிற்கு மின்சார அளவைக் குறிப்பதற்காக மின் அலுவலர் வந்திருந்தார். மீட்டரைப் பார்த்து நோட்டில் குறித்துக் கொண்டு, பதிய வைத்துத் தருவதற்காக வீட்டில் உள்ள மின் அட்டையைக் கேட்டார். நான் எடுத்துக் கொடுத்து கட்டணத்தை எழுதி வாங்கினேன். அருகில் இருந்த என் அக்கா பையன் பாலகுமார், "அது என்ன மாமா எழுதி வாங்கினீர்கள்?" என்று கேட்டான். அதற்கு நான், புரியும் படியாக, "நீ பள்ளிக்கூடத்தில் தேர்வு எழுதினால் மார்க்கைக் குறித்து வைத்து ரேங்க் கார்டு தருகிறார்களே இல்லையா? அதுபோல், எவ்வளவு யூனிட் கரண்ட் நமக்கு செலவாகி இருக்கிறது என்பதையும், அதற்கு எவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்பதையும் எழுதித் தருவார்கள்" என்றேன். உடனே அவன் "அப்படின்னா இந்த மாசம் என்ன ரேங்க்? காட்டுங்க பார்க்கலாம்?" என்று

கேட்டான்.
மேலப்பாதி, எஸ். நாகராஜன்



வாடிக்கை

மன்னார்குடியிலிருந்து தனியார் பேருந்தில் ஒரு அலுவலக நாளில் காலை நேரத்தில் பயணம் செய்தேன். திருமண நாள் என்பதால் ஓரளவு கூட்டம் இருந்தது. மேலும் வாடிக்கையாக அதே பேருந்தில் பயணம் செய்பவர்கள் ஆங்காங்கே ஏறிக் கொண்டிருந்தனர். அவர்களெல்லாம் கண்டக்டரிடம் பயணச் சீட்டு பெற்றுக் கொண்டு இடையில் நின்று கொண்டிருப்பவர்களைக் கடந்து ஒவ்வொருவரும் குறிப்பிட்ட இருக்கைக்கருகில் நின்று கொண்டனர். போகப்போக அமர்ந்திருப்பவர்கள் ஒவ்வொருவராய் இறங்க, அருகில் நின்ற அத்தனை வாடிக்கை பயணிகளும் அமர்ந்து விட்டனர்! மற்ற பயணிகள் நின்றபடியே இருந்தனர். இது எப்படி சாத்தியம் என்பதை அறியும் பொருட்டு அப்பயணிகளுள் ஒருவரிடம் மெல்லப் பேச்சு கொடுத்து விபரம் கேட்டேன். அவர் கூறியதாவது 'நாங்கள் டிக்கெட் வாங்கும் போதே எந்தெந்த இருக்கை எந்தெந்த ஊரில் காலியாகும் என்பதை சங்கேத மொழியில் நடத்துனர் தெரிவித்து விடுவார். அதன்படி அந்தந்த இடங்களுக்கு நாங்கள் நின்று கொண்டு காலியானதும் சென்று அமர்ந்து விடுவோம்" என்றார். இது எப்படி இருக்கு?

மன்னார்குடி, மு.தனகோபாலன்

எதிரொலி வானொலி

அக்காவும், அக்கா பையனும் சமீபத்தில் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தனர். ஒரு நாள் டி.வி. நிகழ்ச்சி ஒன்று முடிந்தவுடன், திடீரென்று நான்கு வயது அக்கா பையன் ஹரீஷ் என்னிடம் வந்து, "சித்தி, டி.வி.யை முதல்ல கண்டுபிடிச்சாங்களா?, ரேடியோவை முதல்ல கண்டு பிடிச்சாங்களா?" என்று கேட்டான்.

"ஏண்டா இப்படிக் கேட்கிறே?" என்று கேட்டதும் அவன் "எதிரொலி கேட்டான், வானொலி படைத்தான்னு பாடித்து. அப்படீன்னா, முதல்ல டி.வி.ல எதிரொலி நிகழ்ச்சியைக் கேட்டுட்டு



அப்புறம்தான் ரேடியா படைச்சிருக்காங் கன்னு தானே ஆகிறது?" என்று கேட்கவும் நாங்கள் திகைத்தோம்.

சென்னை - 97, சு.கௌரி.

இதுக்கா வாடகை?

பெற்றோர் தங்கையோடு அரையாண்டு விடுமுறையில் கோவை சென்றி




ருந்தோம். நாங்கள் கோவையை அடையும் போது இருட்டி விட்டது. அதனால் ஒரு லாட்ஜில் அறை எடுத்துக் கொண்டு தங்கினோம். லாட்ஜ் மேனேஜர் எங்களி டம் "எத்தனை நாள் தங்கப் போகிறீர் கள்?" எனக் கேட்டுத் தெரிந்து கொண்டு. அட்வான்ஸாக 500 ரூபாய் தருமாறு கூறி னார். அப்பா தந்தார்.பின்னர் இரண்டா வது மாடிக்குச் செல்ல லிப்டில் ஏறி னோம். அது சிறிய லிப்ட் ஆதலால் இட நெருக்கமாக இருந்ததது. உடனே என் தங்கை அப்பாவிடம் "அப்பா இந்த அறைக்கா வாடகையாக 500ரூபாய் கட்டினீர்கள்!"என்று கேட்டாள்.

டி.மரவக்காடு, சி.சித்தார்த்தா.

இரத்த ஓட்டம்

ஒருநாள் என் ஐந்து வயதுத் தம்பி, காலில் இறுக்கமாகத் துண்டைக் கட்டிக் கொண்டு விளையாடிக் கொண்டிருந் தான். நான் அவனை அழைத்து, "இது மாதிரி துண்டை இறுக்கமாக் கட்டிக்



கொண்டு விளையாடினால் 'இரத்த ஓட் டம் தடைப்படும்' என்று கூறினேன். அவனும் 'சரி' என்று கூறிவிட்டுச் சென்று விட்டான். அன்று இரவு உறங்கும் போது உயரமான தலையணையை வைத்துப் படுத்திருந்தேன். அதைப் பார்த்த தம்பி, "இப்படி உயரமான தலையணையை வைத்து உறங்கினால் இரத்த ஓட்டம் சீராகச் செல்லாது?" என்று கூறினான். என்னால் பதில் எதுவும் கூற முடிய வில்லை. அதற்கு மாறாக அவனை மன தாரப் பாராட்டினேன்.

ஈரோடு, ச.மகேஷ்.

தண்ணிமோரு

எங்க வீட்டில் 'மோரையும்



தயிரையும் 'மோரு', 'தயிரு' என்று சொல் வோம். அதே மாதிரி 'தண்ணீர்' என்பதை 'தண்ணி' என்றும், 'முகர்ந்து' எடு என் பதை 'மோரு' என்றும் சொல்வோம். ஒரு நாள் என் அண்ணன் மோர் சாதம் சாப் பிட்டுக் கொண்டிருக்கும் போது 'தண்ணி மோரு' என்றார். நான் உடனே வேகமாக, தண்ணி மோரு' இல்லை. தண்ணீர் கொஞ்சம் தான் ஊற்றினேன், கெட்டி மோருதான்" என்றேன். அண்ணன் சிரித்த வாறே, "நான் மோர் பற்றிச் சொல்ல வில்லை. பானையிலிருந்து குடிப்பதற்கு தண்ணீர் முகர்ந்து எடு என்பதைத்தான் 'தண்ணி மோரு' என்றேன்" என்றார். விஷயம் புரிந்து விழுந்து விழுந்து சிரித் தோம்.

சிவயோகபுரம், வ.அடைக்கம்மை.



"ஃபுட்பால் பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்லு?"
"உணவுபால்! இதில் பசும்பால், எருமைப்பால், ஆட்டுப்பால் எல்லாம் அடங்கும். பால் ஒரு முழுமையான உணவு. இதில் இனிப்பு கூடச் செய்யலாம்!"

- கு. அருணாசலம்

புத்தாண்டுப் போட்டி!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

காட்சி – 1

ஷகீலா : அமுதா! இன்னிக்கு நீ கொண்டு வந்த சர்க்கரைப் பொங்கல் 'ஏ' ஒன்!

அமுதா : திறந்த வெளியிலே, அதுவும் இந்த நிலா வெளிச்சத்திலே சாப்பிடறதே ஒரு தனி மகிழ்ச்சிதான்!

ஷகீலா : அடுத்த நிலாச் சாப்பாட்டை பீச்சுலே வச்சுப்போம்; என்ன?

அமுதா : அப்படியே வைச்சுப்போம். அதோ பாரேன்! நிலாவுக்குக் கீழே அந்த மேகக் கூட்டம் காத்துபட்டு அலையற அழகைப் பாரேன்!

ஷகீலா : (மௌனம்)

அமுதா : ஷகி...! என்ன இது? திடீர்னு உன் கண்லே தண்ணி வரது? ஏன் அழறே ஷகி?

ஷகீலா : நான் போட்டியிலே... போட்டியிலே தோத்துப் போயிட்டேன் அமுதா?

அமுதா : போட்டியா?

ஷகீலா : ஆமாம்! ஆண்டு விழாவுக்காக எங்க பள்ளிக்கூடத்துலே இந்த வாரம் நிறையப் போட்டி நடத்திக்கிட்டு வராங்க! கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி எல்லாம் வச்சாங்க! இன்னிக்கு நடந்த ஓவியப் போட்டியிலே ஜெயிச்ச பொண்ணுக்கு, நிலாவும் மேகமும் போட்ட பெரிய படத்தைப் பரிசா கொடுத்தாங்க! எனக்கு அந்தப் பரிசு கிடைக்காம போயிட்டுதேன்னுதான் வருத்தமா இருக்கு!

அமுதா : இதுக்குப் போயா இப்படி வருத்தப்படறே?

ஷகீலா : ஒவ்வொரு வருஷமும் புத்தாண்டை ஒட்டி நடக்கும் பல போட்டிகள்லே நானும் விடாம கலந்துக்கிட்டு வரேன். ஆனால் இதுவரைக்கும் ஒரு பரிசு கூட வாங்காததை நினைக்கிறப்போ எனக்கே வெட்கமா இருக்கு! பரிசு வாங்க ஆசையாயிருக்கு. ஆனா திறமைதான் இல்லே! நாளைக்கு மறுநாள் கூட ஒரு போட்டி இருக்கு. கடைசி போட்டி...

அமுதா : அது என்ன போட்டி?

ஷகீலா : பேச்சுப் போட்டி! இதுலே கலந்துக்கக்கூட எனக்குத் தயக்கமா இருக்கு அமுதா!

அமுதா : ம்... ஆமாம் பேச்சுப் போட்டிக்கு என்ன தலைப்பு கொடுத்திருக்காங்க?



ஷகிலா : 'நன்றி மறந்த தோழி!' இதுதான் தலைப்பு!

அமுதா : ஷகி! உன்னை பலமுறை நான் நல்லா கவனிச்சிருக்கேன்... கவலைப் படாம போட்டியிலே கலந்துக்க... இந்த முறை பரிசு கண்டிப்பா உனக்குத்தான்.

காட்சி – 2

அமுதா : வா... ஷகி! நாளை மறுநாள் தானே பேச்சுப் போட்டி?

ஷகிலா : ஆமாம் அமுதா! நீ சொன்ன படி நிச்சயமா கலந்துக்கப் போறேன். உங்க வீட்லே டேப்ரிக்கார்டர் இருக்கா?

அமுதா : ஓ! 'டூ-இன்-ஒன்'னே இருக்கே! அதோ... இப்பக் கூடப் பாடிக் கிட்டுத்தான் இருக்கு! எதுக்குக் கேட்கறே?

ஷகிலா : வரப் போற "உலகப் புத்த நாள்" பத்தி, என் தங்கை கமலா வானொ லியிலே ஒரு கவிதை படிக்கப் போறா. இன்னிக்கு மாலை நிகழ்ச்சியிலே ஒலிபரப் பாறது. எங்க வீட்டு டூ-இன்-ஒன் ரிப்பேர்! அதுலே ரேடியோவும் பாடாது; ரிகார்டும் ஆகாது; அதனால உங்க வீட்டு டூ-இன்-ஒன்னைத் தர முடியுமா?

அமுதா : வந்து... உனக்கு அதைக் கொடுக்க முடியாது ஷகி!

ஷகிலா : ஏன் அமுதா? ப்ளீஸ்!

அமுதா : அது புது டூ-இன்-ஒன்!

ஷகிலா : நான் பத்திரமா திருப்பிக் கொடுத்துடறேன். ப்ளீஸ்! ப்ளீஸ்!

அமுதா : இல்லே... நான் கொடுக்க மாட்டேன்! கொஞ்சம் இரு வரேன்! (உள்ளே சென்று திரும்பி வந்து) ம்... இந்தா ஷகி! இது உங்க வீட்டு புது கேமரா! போன வாரம், உன் தங்கை கமலா கிட்டேந்து வாங்கிக்கிட்டு வந்தேன். இப்போ உங்கிட்டே திருப்பிக் கொடுக் கறேன்.

ஷகிலா : (அதிர்ச்சியுடன்) அமுதா... நீயா இப்படி நடந்துக்கறே? என்னால நம் பவே முடியல்லே! வரேன்!

காட்சி - 3

கமலா : என்ன அக்கா டூ-இன்-ஒன் கிடைச்சுதா?

ஷகிலா : இல்லை கமலா! அமுதாக்கு என் மேல என்ன கோபம்னு தெரியல்லே! தரமாட்டேன்னு மறுத்துட்டா!

கமலா : இது என்ன?

ஷகிலா : நம்ம வீட்டு காமிரா!

கமலா : ஓ! அமுதா நம்மகிட்டேந்து போன வாரம் வாங்கிக்கிட்டு போனாளே, அதுவா?

ஷகிலா : ஆமாம்! இந்தா, இதை பத் திரமா எடுத்து வை.

கமலா : அக்கா, அமுதாவுக்கு கொஞ்ச மாவது நன்றி இருக்கா? நம்மகிட்டேர்ந்து மட்டும் காமிராவை வாங்கிக்கிட்டு போயி ருக்கா... அவ 'டூ-இன்-ஒன்'னை மட்டும் தரக்கூடாதாக்கும்! சே! என்ன தோழி இவள்!

ஷகிலா : கவலைப்படாதே கமலா! நன்றி கெட்ட அந்த அமுதாவுக்கு சரியான பாடம் கற்பிக்கறேன்.

காட்சி – 4

(பேச்சுப் போட்டி மேடையில்)

நடுவர் : மாணவிகளே! பெற்றோர்



கனே! கடந்த ஒரு மணி நேரமாக இங்கு நடந்த பேச்சுப் போட்டியில் பல மாண விகள் பங்கேற்றார்கள். ஒருசில மாணவி கள்தான் கருத்தையொட்டி, உணர்ச்சியு டன், மேற்கோள்காட்டி, நமது கரவொ லியைப் பெற்றனர். எல்லோரையும் விட மிகச் சிறப்பாக ஒரு சிறுமி பேசினாள். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற திருக்குறளை எடுத்துக்காட்டி மிக அழகாகப் பேசி நம்மைக் கவர்ந்தாள். அவள்தான் இன்றைய போட்டியில் முதல் பரிசு பெறுகிறாள்! ஷகிலா! நீதான் அந்தச் சிறுமி! மேடைக்கு வா! வாழ்த்துகள்!

(கரவொலி)

அமுதா : ஷகி! ஷகி! வாழ்த்துகள்!

ஷகிலா : ஓ! அமுதாவா...! அமுதா, இப்பத்தான் செய்நன்றி பத்தி பேசிட்டு



பரிசு வாங்கிண்டு வரேன்! நன்றி இல்லாதவங்க நட்பு எனக்குத் தேவையில்லை. நீ போகலாம் அமுதா! எனக்காக அங்கே என் தோழிகள் காத்திருக்காங்க.. வரேன்!

காட்சி – 5


அமுதா : கமலா! கமலா!

கமலா : ஓ! அமுதாவா? நீ ஏன் இங்கே வந்தே?

அமுதா : இந்த 'டூ-இன்-ஒன்'னைக் கொடுத்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன்... இதுலே நேற்று முன்தினம் நீ பாடின பாட்டை ரிகார்டு பண்ணியிருக்கேன்! போட்டுக் கேளு!

கமலா : இல்லே... நீ பொய் சொல்றே? உன்னை நம்பக் கூடாது!

அமுதா : உண்மையாத்தான் கமலா... வாங்கிப் போட்டுப்பாரு. உண்மை புரியும்!



"'போய்'க்கு கால் இல்லேன்னு எப்படிச் சொல்றே...?"

"கால் இருந்தா 'போய்' ஆய்டுமே...!"

– பொன். குமார்

உன் அக்கா ஷகிலா இந்தப் பேச்சுப் போட்டியிலேயாவது வெற்றி பெறணும்னு நினைச்சேன்! அதனால்தான் நேற்று முன்தினம் உன் அக்கா வந்து இதைக் கேட்டப்போ, 'கொடுக்க முடியாது'ன்னு சொல்லித் திருப்பியனுப்பிச்சுட்டேன்.

கமலா : நீ சொல்றது எதுவும் எனக்குப் புரியல்லே!

அமுதா : புரியும்படியா சொல்றேன். ஷகிலா இதை இரவல் கேட்க வந்தப்போ 'திடீர்'னு எனக்கு ஒரு யோசனை வந்தது!

கமலா : என்ன யோசனை?

அமுதா : உன் அக்கா ஷகிலா தனக்குக் கோபம் வந்துட்டா வக்கீல் மாதிரி நல்லா வாதாடுவா! இது எனக்குத் தெரியும்! அதனால 'அவ கோபத்தைக் கிளறிவிட்டா கோபத்தோடு போட்டியிலேயும் ரொம்ப நல்லா அழுத்தம் திருத்தமா பேசுவா... பரிசு வாங்குவா'ன்னு நினைச்சேன்! அதனாலதான் உங்க காமிராவைத் திருப்பிக் கொடுத்ததுக்கு நன்றியும் சொல்லல்லே... என்னோட 'டூ-இன்-ஒன்'னையும் தர மறுத்தேன். என் நம்பிக்கை வீண் போகலே.

கமலா : அப்படீன்னா நீ நடந்துக்கிட்டது அத்தனையும் வெறும் நடிப்பா?

அமுதா : ஆமாம்! நானும் போட்டியைப் பார்க்கப் போயிருந்தேன். வேணுமின்னே முதல் வரிசையிலே அவள் கண்ணில் படும்படி பார்வையாளரா உட்கார்ந்து அவள் கோபத்தைத் தூண்டி விட்டேன். என்னைப் பார்த்த ஷகிலா, நான் நினைச்சபடியே கோபம் கொந்தளிக்க போட்டியிலே நல்லா பேசினா! பாராட்டும் பரிசும் கிடைச்சுட்டுது!

ஷகிலா : அமுதா! இப்ப உன்னை நம்பறேன்... உன் சமயோசித நடிப்பாலதான் எங்கக்காவுக்குப் பரிசு கிடைச்சிருக்கு... சந்தேகமில்லை!

அமுதா : ஆனா ஷகிலா இதை நிச்சயம் நம்ப மாட்டா! என் மேல ரொம்ப கோபத்தோடு இருக்கா! இந்த டூ-இன்-ஒன் உங்க வீட்லேயே இருக்கட்டும்! நானே வந்து மெதுவா வாங்கிக்கறேன். வரேன்!

ஷகிலா : (வந்து கொண்டே) அமுதா... நில் அமுதா! என்னை மன்னிச்சுடு!

அமுதா : ஷகி! வந்து...

ஷகிலா : நீ கமலாகிட்டே சொன்னதையெல்லாம் வெளி வராந்தாவிலே மறைஞ்சு கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். நீ நன்றி மறக்கல்லே. நான்தான் நன்றி மறந்துட்டேன். இந்தப் பேச்சுப் போட்டியிலே வெற்றியடைஞ்சதுக்கு நீதான் காரணம்கிறதை இப்போ தெரிஞ்சுக்கிட்டேன். இது தெரியாம நீ என்னை வாழ்த்த வந்தப்போ விரட்டற மாதிரி பேசிட்டேன்... என்னை மன்னிச்சுடு அமுதா!

அமுதா : அதெல்லாம் இருக்கட்டும்! கமலா அன்னிக்கு வானொலியிலே படிச்ச "உலகப் புத்தக நாள்" பற்றிய கவிதை ரொம்ப நல்லாயிருந்தது. வா. மறுபடியும் போட்டுக் கேட்கலாம்.

கேட்காமலேயே...!

வகுப்பில் அதிகம் பேர் இருக்க மாட்டார்களே என்ற சந்தேகம் புருஷோத்தமனுக்கு இருந்தது. ஆனால் வகுப்புக்குள் நுழைந்து பார்த்தால், வகுப்பில் பாதிக்கு மேல் நிரம்பியிருந்தது.

மழையைச் சாக்காக வைத்து, பள்ளிக்கு 'மட்டம்' போடுகிற பிள்ளைகள் அதிகம் பேர் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டான். முதல் மணி அடிப்பதற்குள் ஏறக்குறைய எல்லாப் பிள்ளைகளுமே வந்து விட்டார்கள். அதை எண்ணிப் பார்த்த போது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தன்னைப் போலவே படிப்பில் ஆர்வமும் அக்கறையும் காட்டுகிற பிள்ளைகள் அதிகம் பேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களும் தன்னைப் போலவே, ஏதாவது கொண்டு வந்திருப்பார்களா?

யாரையும் எதையும் கேட்காமல், கண்களாலேயே துழாவிப் பார்த்தான். யாரும் எதுவும் கொண்டு வந்திருப்பதாகத் தோன்றவில்லை! தனக்கு ஏற்பட்டதைப் போல அப்படி ஓர் எண்ணம், வேறு யாருக்குமேவா ஏற்பட்டிருக்காது?

ஒருவேளை தான் கொண்டு வந்திருப்பதைப் பார்த்து, மற்றவர்கள் கேலி செய்வார்களோ? தன்னை விடவும் கூடுதலாக, எல்லோரும் பாராட்டும்படியாக அவர்கள் கொண்டு வந்திருப்பார்களோ? அவர்கள் வைத்திருப்பது தனக்குத்தான் தெரியவில்லையோ?

வெகுவாகக் குழம்பிக் கொண்டான் புருஷோத்தமன். அந்த நேரத்தில் பள்ளியின் முதல் மணி ஒலித்தது.

இரண்டாவது மணி ஒலிப்பதற்குள், வகுப்பு ஆசிரியர் வந்து விட்டார்.

“மணிவேலன் பள்ளிக்கு வரவில்லை இல்லையா?” என்றார் ஆசிரியர் மாணவர்களைப் பார்த்து.

“ஐயா! இந்த மழையிலே அவன் வீட்டுச் சுவர் இடிஞ்சி விழுந்து, அவனுக்கும் அவன் அம்மாவுக்கும் பலத்த காயம் ஏற்பட்டிடுச்சிங்க. ரெண்டு பேரும் ஆஸ்பத்திரியிலே இருக்காங்க!” என்றான் முருகையன்.

அவன் பக்கத்தில்தான் வகுப்பில் மணிவேலன் அமர்ந்திருப்பான். முருகையன் வீடும் மணிவேலன் இருந்த தெருவில்தான் இருக்கிறது.



“நானும் கேள்விப்பட்டேன். நானும் மருத்துவமனைக்குப் போய்ப் பார்த்தேன். உங்களுக்கெல்லாம் தெரியுமோ, தெரியாதோ என்றுதான் கேட்டேன்!” என்றார் ஆசிரியர்.

“நாங்க கூடப் போய்ப் பார்த்தோம் ஐயா” என்று மூன்று நான்கு மாணவர்கள் எழுந்து சொன்னார்கள்.

“என்ன புருஷோத்தமா! உனக்கு விஷயம் தெரியாதா? மணிவேலன் உன் நெருங்கிய நண்பனாச்சுதே!” என்றார் ஆசிரியர்.

“பார்த்திருந்தால்தான் சொல்லியிருப்பானே ஐயா? இவன் எப்பவுமே இப்படித்தான். தான் உண்டு, தன் வேலை

பூவை அமுதன்

யுண்டுன்னு இருப்பான்'' என்றான் மாணிக்கம்.

''இந்த மாணிக்கம் இப்படித்தான் ஐயா... யாரையாவது குறைசொல்லிக் கிட்டேயிருப்பான்'' என்றான் வேலு.

"இப்போது நீ செய்வதும் அதுதானே?" என்று சற்றுக் கோபமாகக் கடிந்து கொண்டார் ஆசிரியர்.


எல்லோரும் வேலுவைப் பார்த்துச் சிரித்தார்கள். புருஷோத்தமன் அமைதியாகவே இருந்தான்.

"குற்றம் கண்டுபிடித்துக் குறைகூறுவது சுலபம். நம்மை யாரும் குற்றம் சொல்லாத படி நடந்து கொள்வது அவ்வளவு எளிது இல்லை. மணிவேலனுக்கு ஏற்பட்ட ஆபத்து, வெளியிலே தெரியக் கூடியதாக இருந்தது. சில பேருக்கு அது தெரியாமலும் இருந்திருக்கலாம். இன்னும் யார் யாருக்கு இந்த மழையாலே எப்படியெல்லாம் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டு இருக்கோ... நமக்குத் தெரியுமா?" என்று சொல்லிக் கொண்டே புருஷோத்தமனுக்கு அருகில் வந்து நின்றார் ஆசிரியர்.

மெதுவாக எழுந்தான் புருஷோத்தமன். ஆசிரியர் முகத்தைப் பார்த்தான். அவன் கண்கள் கலங்கியிருந்தன. ஆசிரியர் அன்போடு அவன் தோளிலே கையை வைத்தார்.

"ஏன் வருந்தப்படுகிறாய்?" என்று கேட்டார்.

"ஐயா! எங்க குடிசை வீடு, தெருக் கோடியிலே ஒதுக்குப்புறமாயிருக்கிற களத்துமேட்டுப் பக்கம், ஒரு ஓரமாயிருக்கு. பக்கத்திலே வயல்வெளி. இந்த மழையிலே எங்க குடிசையைச் சுற்றி நிறையத் தண்ணி வந்திட்டது. அப்பாவே கூட வெளியே போகப் பயப்பட்டார். மூணு நாலடி உயரத்துக்கு வெள்ளம் போய்க்கிட்டிருக்குன்னு அப்பா சொன்னார். எங்க குடிசைக்குள்ளேயே ஒரு அடிக்கு மேலே தண்ணி புகுந்திட்டது. சாமானை எல்லாம் மூட்டை முடிச்சுகளா சேர்த்துக் கட்டிப் பரண் மேலே வைச்சு நாங்களும் ஏறிக்கிட்டோம். ரெண்டு நாள் அப்படியிருந்தோம். சரியாச் சாப்பிடவும் வழியில்லே. துளி தூக்கமும் கிடையாது. மணிவேலன் வீடு இடிச்சு, மருத்துவமனையிலே இருப்பதைக் கேள்விப்பட்டோம். நான் ஓடிப் போய்ப் பார்க்கணுமின்னு துடிச்



சேன். ஆனால், அப்பா என்னைத் தடுத் திட்டாரு...."

சற்று நேரம் மௌனமாகவே இருந் தான் புருஷோத்தமன்.

"ஏன் சொல்லேன்! காரணம் என்ன?" என்று அவன் தோள்களைச் சிறிதே உலுக் கியபடி கேட்டார் ஆசிரியர்.


"மணிவேலன்... எனக்கு மாமன் மகன் தான் ஐயா... அப்பாவுக்கும் மாமாவுக்கும் ஏதோ நிலத் தகராறு. அதோட நாங்க குடிசை வீட்டிலே ஏழைகளா வாழறது மாமாவுக்குக் கேவலமாம். எங்கேயாவது ஒழிஞ்சி தொலையுங்களேன்... இந்த ஊரிலேயே இருந்துகிட்டு எங்கே எதிரி லேயே கூலி வேலை செஞ்சிக்கிட்டு எங்க சொந்தக்காரன்னு சொல்லிக்கிட்டு எங்க கௌரவத்தைக் கெடுக்கணுமான்னு மாமா அடிக்கடி அப்பாவுடன் சண்டை போடுவார். நாங்க ரெண்டு பேரும் பழ கறது கூட மாமாவுக்குப் பிடிக்காது. என் கூடச் சேரக் கூடாதுன்னு எத்தனையோ முறை மாமா மணிவேலனைத் திட்டியிருக் காரு. அதனாலேதான்...!"

ஆசிரியர் ஆறுதலாக அவன் முதுகில் தட்டி இருக்கையில் அமர்த்தி விட்டுக் கரும்பலகையருகே வந்து நின் றார்.

"கேட்டீர்களா, பெரியவர்கள் சிலர் எப்படி நடந்து கொள்கிறார்கள் என் பதை? ஆனால் மணிவேலனையும் புரு ஷோத்தமனையும் பாராட்ட வேண்டும். பெரியவர்களுக்கிடையே மனக்கசப்பு இருந்தாலும் அவர்கள் நண்பர்களாகத் தானே பழகுகிறார்கள்! விஷயம் இப்படி யிருக்க, உண்மை தெரியாமல் ஒருவரையும் குறைகூறக் கூடாது இல்லையா? என்ன, மாணிக்கம் அப்படித்தானே? என்ன வேலு, நீ என்ன சொல்கிறாய்?" என்று குறும்பாகக் கேட்டார் ஆசிரியர்.

அவர்கள் இருவரும் வெட்கத்தால் தலைகுனிந்தனர். புருஷோத்தமன் மெது வாக ஆசிரியர் அருகே வந்தான். ஆசிரி யர், "என்ன தம்பி?" என்று கேட்டார்.

புருஷோத்தமன் தன் பையிலிருந்து அந்த மண் உண்டியை மெதுவாக



"அள்ள அள்ள 'அன்னம்' குறை யாத மணிமேகலையின் 'அட்சய பாத்திரத்துக்கு' ஈடாக எதையாவது சொல்ல முடியுமா?"

"முடியும் சார்! 'அடி' கொடுக்க கொடுக்க தேயாத உங்க 'பிரம்பு' சார்!

— கு. அருணாசலம்

வெளியே எடுத்தான். அவர் முன் நீட் டினான்.

"ஐயா! நான் வானொலியிலே செய்தி கேட்டேன். மழையால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு எல்லோரும் முடிந்த அளவுக்கு உதவி செய்யணும்னு சொன்னாங்க. இந்த உண்டியிலே நான் சேர்த்து வச்ச காசு இருக்கு. எவ்வளவுன்னு எனக்குத் தெரி யாது. இதை அப்படியே வெள்ள நிவா ரண நிதியிலே சேர்த்திடணும்னு நினைக் கிறேன். எனக்கு எப்படிச் செய்யறதுன்னு தெரியாது. ஆசிரியரிடத்திலே கொடுத் தால், சேர வேண்டிய இடத்திலே சேர்ந்திடும் இல்லையா?"

புருஷோத்தமனை ஆச்சரியமாகப் பார்த்தார் ஆசிரியர்.

"என்ன, நீங்கள் எல்லாம் கூட வானொலிச் செய்தியைக் கேட்டு இருப் பீர்களே! தினச் செய்தித்தாள்களி லும் படித்திருப்பீர்களே! இப்படி எந்த வகை யிலாவது உதவி செய்ய வேண்டுமென்று... வேறு யாருக்காவது தோன்றியிருக்கிறதா?" பேசிக் கொண்டே மற்ற மாணவர்களின்

முகங்களைப் பார்த்தார் ஆசிரியர்.

"ஐயா! நாளைக்கு நான் பணம் கொண்டு வர்றேன். கேட்டால் அப்பா நிறைய கொடுப்பார்" என்றான் ஒருவன். அவனை அடுத்து மற்ற மாணவர்களும் எழுந்து சொன்னார்கள்.

"சரி இருக்கட்டும். நீங்கள் உங்கள் பெற்றோர்களைப் பெரியோர்களைக் கேட்டு உதவி செய்வதாகச் சொல்கிறீர்கள்; மகிழ்ச்சி! ஆனால், ஏழை மாணவன் புருஷோத்தமன், யாரும் சொல்லாமலேயே யாரையும் கேட்காமலேயே தான் சேமித்து வைத்த உண்டியலைக் கொண்டு வந்திருக்கிறான் இல்லையா? உண்மையிலே அவனுக்கு நல்ல உள்ளம் தானே? அதை நாம் பாராட்ட வேண்டும்தானே!"

ஆசிரியர் அவ்வாறு கேட்டதும், "உண்மையிலேயே நல்லவன் ஐயா புருஷோத்தமன். மண் உண்டியை மழையிலேயிருந்து பாதுகாத்து, வெள்ளத்தாலே பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவணும்னு கொண்டு வந்திருக்கானே! மழையாலே பாதிக்கப்பட்டு, வெள்ளம் வந்த குடிசைக்குள்ளே இருந்த பையனுக்கு இருந்த நல்ல புத்தி, பெரிய பெரிய வீடுகள்ளே மழை ஆபத்து ஏதும் இல்லாமே வசதியா இருந்த எங்கள் யாருக்குமே இல்லாது போச்சே!" என்று உண்மையாகவே வேதனையோடு கூறினான் வெள்ளைச்சாமி என்ற மாணவன்.

அவன் தந்தையார் பெரிய பணக்காரர். அந்த ஊரிலே பாதி நிலம் அவருக்குச் சொந்தம். அவர் நிலத்திலே கூலி வேலை செய்து வருபவர்தான் புருஷோத்தமனின் தந்தை.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று சொல்வார்கள். உண்டி என்ற சொல்லுக்கு உணவு என்று ஒரு பொருள் உண்டு. இப்படிப் பணம் சேர்க்கும் பொருளையும் உண்டி என்று சொல்வார்கள். புருஷோத்தமனின் உண்டி மண் உண்டிதான். ஆனால் இவன் மனம் பொன் மனம். இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்" என்று ஆசிரியர் கூறிக் கொண்டிருக்கும்போதே குறுக்கிட்டான் ஒரு மாணவன்.

"புருஷோத்தமன் ஏழைப் பையன். அவன் ஏன் ஐயா... உண்டியிலே காசு சேர்த்து வந்தான்?"

புருஷோத்தமனே அவனுக்குப் பதில் சொன்னான்.

"என்னிடத்திலே தமிழ் அகராதியும் இல்லை; இங்கிலீஷ் டிக்ஷனரியும் இல்லை. அட்லாஸ் கூடக் கிடையாது. தினமும் ஐந்து ஐந்து திருக்குறளாவது படிக்கணும்னு எனக்கு ஆசை. திருக்குறள் புத்தகம் இல்லை. அப்பாவுக்கு எல்லாத்தையும் வாங்கித் தர வசதியில்லே. நான் மத்தவங்களுக்கு உதவியா கடைக்குப் போய் வருவேன். மாவு மிஷினுக்குப் போய் வருவேன். அவங்க சில்லறை கொடுப்பாங்க. அதையெல்லாம்தான் சேர்த்து வந்தேன்."


ஆசிரியர் இருக்கையை விட்டு எழுந்து சென்று புருஷோத்தமனை அணைத்துக் கொண்டார்.

"நீ விரும்புகிற நூல்களையெல்லாம் உனக்கு நான் அன்பளிப்பாகத் தருகிறேன்" என்று மகிழ்ச்சியோடு கூறினார். அந்த மகிழ்ச்சி அந்த வகுப்பு மாணவர்களின் கரவொலியாக எதிரொலித்தது.

"கண்ணை மூடிக்கிட்டு கடவுள்கிட்ட என்ன வேண்டிகிட்ட?"

"அடுத்த குடியரசு தினமாவது சனி, ஞாயிறு தவிர மற்ற நாட்கள்ல வரணும்னு தான்தான்.

–அ.பேச்சியப்பன்



மீண்டும்..



காட்டாட்சியை வோட்டாட்சியாய் மாற்றிய பெருமை சிங்கருக்கு உண்டு.

குடியாட்சியில் அவருக்கு எவ்வளவு பிடிப்பு என்பது அவர் பெயரை மாற்றிக் கொண்டதிலேயே தெரியும். சிங்கராஜா என்பதை 'சிங்கர்' என்று மாற்றினார் – சாதாரண குடிகளில் ஒருவர் போல்!

காட்டின் குடி விலங்குகள் எல்லாம் எல்லாவற்றிலும் சமமாய்ப் பங்கு பெற வேண்டும். உணவு, உடை, இருப்பிடம், கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்பு எல்லாம் கிடைக்க வழிசெய்ய முயல வேண்டும் என்று சிங்கர் நினைத்தார். நினைத்ததை முடித்தார்.

எப்படி?

சிரத்திலிருந்த கனத்த கிரீடத்தை இறக்கி வைத்தார். சிம்மாசனத்திலிருந்து முழங்காலைப் பிடித்துக் கொண்டு கீழே இறங்கி விட்டார்.

விலங்குகள் அனைத்துக்கும் பேதமின்றி வாக்குரிமையை வள்ளல் போல வழங்கினார். தேர்தல் வைத்தார்.

இப்படிப்பட்ட அரிய ஞானம் சிங்கருக்கு ஏற்படக் காரணமே புலியார்தான்.

"அரசே, வேட்டையாடி உணவு தேடுவதிலிருந்து குட்டி போட்டு வளர்ப்பது வரை பிறரை ஏவாமல் அவரவரே செய்யும் பெருமை பெற்றவர்கள் நம் விலங்கினத்தவர். இதில் ராஜா என்ன, குடி விலங்கு என்ன? எல்லாம் ஒரே இனம்; ஒரே மதம்தானே?

"எனவே குடிவிலங்குகளே ஆளட்டும் என்று விட்டு விட்டால் அவர்களுக்கும் மகிழ்ச்சி; தங்களுக்கும் புகழ். அதோடு, நாம் சொல்வதை இந்தக் காலத்தில் எவன் கேட்கிறான்? மரியாதையை முழுதுமாக இழக்குமுன் காட்டாட்சியை விலங்கினக் குடியாட்சியாய் மாற்றி விட்டால், வேலையும் குறையும், வீண் வழக்குகளைத் தீர்த்து வைக்கும் தலைவலியும் போகும்."

அனுபவசாலியான புலியாரின் யோசனை சிங்கருக்கும் பிடித்திருந்தது. உடனே அதை ஏற்றுச் செயல்பட்டார்.

இதன்பின் தேர்தல் நடந்து முடிந்து பெரும்பான்மைக் கட்சித் தலைவரிடம் ஆட்சியைத் தந்தார் சிங்கர்.

ஆனால், குடிவிலங்குகள் சிங்கரை விடுவதாயில்லை – 'குடியரசுத் தலைவராக இருக்க வேண்டும்' என்றன. அது மட்டுமல்ல, அரச பரம்பரையினர்மட்டும்தான் வருங்காலத்தில் குடியரசுத் தலைவர் பதவி வகிக்க வேண்டும் என்றும் உறுதியாக சட்டம் போட்டு விட்டார்கள்.

சிங்கர் தயங்கினார்.

புலியார், ''பரவாயில்லை, ஏற்றுக் கொள்ளுங்கள். கௌரவப் பதவிதான் –

அழகி

பொறுப்பில்லை. எது நடந்தாலும் உங்களை யாரும் திட்ட மாட்டார்கள்" என்றார்.

சிங்கர் தலையசைத்து விட்டார். குடியரசுத் தலைவர் ஆனார்.

அப்படி ஆகியும், ஆட்சி செய்த விலங்குகளின் ஆலோசனையை விட புலியாரின் ஆலோசனைதான் மேல் என்று அறிந்தார் சிங்கர். அதனால் அவரை எப்போதும் தம்முடனேயே வைத்துக் கொண்டார்.

மலைப் பொந்துக்கு தவமியற்றத் தாம் போக விருப்பதாகச் சொன்ன புலியாரின் கனவு பலிக்கவில்லை. சிங்கருடன் கூடவே இருக்க நேர்ந்தது.

அமைச்சராக இருந்தபோது துறவு மனம் கொண்டிருந்தவர் புலியார். அது வளர்ந்து கொண்டே வந்தது. அதன் காரணமாகவே சிங்கரிடம் எளிமை, பிறர் நலம் பேணல், அனைவருக்குமான சம நீதி – இவைகள் பற்றியெல்லாம் பேசி வந்திருக்கிறார் புலியார்.


வயதானதாலும், அடங்காப்பிடாரி குடி விலங்குகளால் அவஸ்தைப்பட்டு வந்ததாலும் சிங்கர் எப்பொழுதடா ஆட்சியை அடுத்த வாரிசிடம் சேர்ப்பது என்று ஏற்கனவே சிந்தித்துக் கொண்டிருந்தார். ஆனால் வாரிசு இல்லை. அதனால், ஆட்சியுரிமை பற்றி உள்காட்டுக் கலகமே வெடித்து விடும் நிலை.

புலியார் விலங்கினக் குடியாட்சி யோசனையைக் கூறவே 'நல்லவேளை' என்று அதற்கு ஏற்பாடு செய்து விட்டார் சிங்கர்.

ராஜா பதவியில் இருந்தபோதே சிங்கருக்கு ஆடம்பரம் பிடிக்காது. அரசருக்குரிய அணிமணிகள் கூடப் பூண மாட்டார். வேறுவழியில்லையே என்றுதான் அரச முடியைத் தலையில் மாட்டிக் கொண்டு கழுத்து வலிக்கச் சுமந்து திரிந்தார்.

இப்போது பொறுப்பு எல்லாம் கழிந்த நிலையில் ஹாயாகத் தம் படுக்கைத் திண்டில் சாய்ந்து கொண்டிருந்தார் சிங்கர்.

ஆனால் அது நீடிக்கவில்லை.



அவசர அவசரமாகப் புலியார் பாய்ந்து ஓடி வந்தார்.

"அரசே, காட்டாட்சியை மாற்றி விலங்கின நாட்டாட்சியை அவர்கள் கையில் கொடுத்தோமே, எல்லாம் பாழ்! நாம் நினைத்தது ஒன்று, நடப்பது வேறு. புரட்டு, பொய், பித்தலாட்டம்தான் புதிய ஆட்சியில் கண்ட பலன்."

கீழே ஏதோ சத்தம் கேட்டது. சிங்கம் எழுந்து பார்த்தார். கீழே விலங்குகளின் பெருங் கூட்டம்!

"குடியரசுத் தலைவர் வாழ்க! எங்கள் சிங்கர்

வாழ்க!'' என்ற கோரஸ் கிளம்பியது.

முன்கால் ஒன்றைத் தூக்கி, ''அமைதி அமைதி'' என்றார் சிங்கர்.

"அமைதி இல்லை அரசே. அதைத்தான் கூற வந்தோம்."

"வாக்குரிமை தந்தீர்கள். வாழ்வையே அது போக்கி விடும் போலிருக்கிறது அரசே!"

வரிசையாக விலங்குகள் சிங்கரைப் பேச விடாமல் தடுத்தன.

புலியார் உறுமினார்.

''விலங்கின குடிகளே! உங்களுக்கு மன்னர் செய்த ஏற்பாட்டில் குறையில்லை. நன்மை செய்தவரின் மனம் புண்படப் பேசாதீர்கள். குறைகளை நேரடியாய் அப்படியே தெரிவியுங்கள். முன்னுரை வேண்டாம்."



புள்ளிமான்கள் தனியே ஒதுங்கின. இவ்விதமே விலங்கினங்கள் தனித்தனிக் கூட்டமாய் ஒதுங்கி நின்று தம் குறைகளைக் கூற ஆயத்தமாயின.

"ஆண்டாண்டுக் காலம் புல்நிலங்களை எங்களுக்கும் எங்கள் போல புல்மேயும் இனங்களுக்கும் சத்துணவுக்காக ஒதுக்கிப் பாதுகாத்தீர்கள், அரசே! அவற்றின் புல் இன்று எங்களுக்கு உணவாகாமல் வெளிநாடுகளுக்கு மருந்து டானிக் உற்பத்திக்காக ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாங்கள் பட்டினி கிடக்கிறோம். உணவில்லாமல் பலர் எங்களில் செத்துப் போனார்கள். புல்மேயாத் தாய்மான்களிடம் பாலில்லை. மான் குட்டிகள் பல மடிந்து போயின."


– இவ்வாறு மான்கள் கூறின.

யானைகள் வந்தன. துதிக்கைகளால் சலாமிட்டன.

"நாங்கள் உணவுத் தட்டுப்பாட்டால் துன்பப்படுகிறோம். எத்தனை பெரிய உடம்பு எலும்புக்கூடாக இளைத்திருப்பதைப் பாருங்கள். நாங்கள் இலை தழை சாப்பிட முடியாமல் காடழித்து கஞ்சாச் செடிகளைப் பயிரிடுகிறார்கள். அதையும் வெளிநாட்டுக்கு அனுப்பத்தான். இதை விட ஆபத்தும் உண்டு. எங்கள் எலும்புகளையும் கூட வெளிநாடுகளுக்கு அனுப்ப எங்களையே கொல்ல ஆரம்பித்து விட்டார்கள்'' என்றன.

பாம்புகள் கூட்டமாக நெளிந்து வந்து முறையிட்டன.

"புலிகளையே தோல் உரித்து தோல்களை வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்களே! எங்களை சும்மா விடுவார்களா? ஆயிரக்கணக்கில் எங்களைக் கொன்று தோலை ஏற்றுமதி செய்து கொள்ளையடிக்கிறார்கள். வெளியே தலை காட்ட முடியவில்லை. படமெடுத்து ஆட



''எங்க அப்பா எனக்கு ஒரு 'கூடைப்பந்து' வாங்கிக் கொடுத்திருக்கார்டா.''

''கூடை நிறையப் பந்தை வச்சுக்கிட்டு என்னடா செய்வே?''

— சீர்காழி வி. ரேவதி

முடிவதில்லை!"

''இப்படிப்பட்ட கொடுமைகளை எல்லாம் மனிதர்களல்லவா செய்வார்கள்? நம்மினக் குடியாட்சியாளர்களா செய்கிறார்கள்?" என்றார் வியப்புடன் சிங்கர்.

"ஆம் ஆம்" என்று அலறின எல்லா விலங்குகளும்.

"மருந்துக்கு என்று தேனடைகளையும், குருவிக் கூட்டையும் புற்றை இடித்து எறும்பு சேர்க்கும் புல்லரிசியையும் கூடக் கொண்டு போய் விடுகிறார்கள் நம் குடியரசு ஆட்சியாளர்கள்."

"என்ன!" என்று ஆச்சர்யத்தால் ஒரு மீட்டர் அளவுக்கு வாய் பிளந்தார் சிங்கர். திறந்த வாயை மூட முடியவில்லை! அது அப்படியே விரிந்திருந்தது!

புலியார்தான் சொன்னார், முறையிடக் கூடியிருந்த விலங்குகளைப் பார்த்து :

"அருமைக் குடிகளே, மன்னர் ஆவன செய்வார். மனம் வெதும்பிப் போன அவர் யோசித்து, முடிவுகாண சற்று அவகாசம் தாருங்கள். அவர் மூட முடியாத வாயைச் சரிசெய்ய உடனே வைத்தியரை நாட நீங்கள்தான் ஒத்துழைக்க வேண்டும்."

உடனே கூட்டம் கலைந்தது.

விலங்கினக் குடியாட்சி உண்மையில் சிங்கரே எதிர்பாராத அளவில் புதுமையானதுதான். இதற்குக் காரணமே புலியார் கூறிய யோசனைதான்!

"புலியாரே, என்னய்யா - புரட்சி அது இதுன்னீர்? கடைசியில் எல்லாம் ஒரே புரட்டலா இருக்கே? விலங்குகளைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. இவர்களுடைய குறையைப் போக்க என்னமாவது பண்ணியாக வேண்டாமா?" என்று கர்ஜனை புரிந்தார் சிங்கர்.

புலியார் புன்னகைத்தார்.

"அரசே, கவிபாரதி புரட்சி என்ற சொல்லை எவ்வளவு புனிதமானதாகப் படைத்தாரோ அதே அளவு விலங்கினக் குடிகளுக்கெல்லாம் நீங்கள் கொண்டு வந்த ஆட்சியும் புனிதமானதுதான். புரட்சிகரமானதுதான். அதில் சந்தேகமில்லை."

"இந்தப் புகழுரையைக் கேட்டுப் புளித்துப் போயிற்று. மீண்டும் விலங்குகளுக்கு நன்மை செய்ய ஏதாவது வழி இருக்கா?"

''இருக்கிறது அரசே. தங்களுக்கும் தங்கள் பரம்பரைக்கும் குடியரசுத் தலைமைப் பதவி நிரந்தரம் என்று சட்டமே இயற்றினார்கள் அல்லவா? சட்டமியற்றிய போதே அதனுடன் எந்த ஆணையையும் போடும் தனி அதிகாரம் தங்களுக்குண்டு என்று ஒரு பிரிவை நான் சேர்த்து விட்டேன். அத்துடன் இச்சட்டத்தை விலங்கினக் குடிப் பிரதிநிதிகள் மாற்ற முடியாது என்றும் எழுதி விட்டேன்.''

"எப்போது?"

"சட்டமாக்கு முன் என்னிடம் சரி பார்க்கச் சொன்ன போது"

"சபாஷ் - இதற்குத்தான் சரியான அமைச்சர் வேண்டுமென்பது! சரி உடனே தக்க ஆணைகளை எழுதுங்கள். நிலைமையை உடனே சரிசெய்ய வேண்டும்."

முதல் ஆணை சிங்கர் மீண்டும் சிங்கராஜா ஆகும் ஆணை.

உடனே அரசு நிர்வாகம் அனைத்தும் அவர் கையில்! ஒரே இரவில் விலங்கின குடியாட்சி அவைகள் கலைக்கப்பட்டன.

குடியாட்சியால் விளைவித்த தீமைகளுக்கு விடைகொடுக்கப்பட்டு மீண்டும் காட்டு நிர்வாகம் சிங்கரின் ஆட்சிக்குள் வந்து, விலங்குகளின் நலன்கள் காக்கப்பட்டன.

வள்ளியப்பா
நினைவுச் சிறுகதைப் போட்டியில்
மூன்றாவது பரிசு பெறும்
முதல் கதை



தடைகளைத் தாண்டி...

எம். தங்கராசு

நவீனாவை உங்களுக்குத் தெரியுமா? பனிரெண்டாம் வகுப்பு மாணவி அவள். பெயருக்கு ஏற்றபடி நவீனா மிக மிக நவீனமானவள்! அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற பழமொழிக்கேற்ப முகத்தில் எப்பொழுதும் புன்னகை பூத்திருக்கும்; என்ன செய்யலாம் என்ற துடிதுடிப்புடன் காணப்படுபவள். அவளைப் பார்த்தாலே சுறுசுறுப்பு வந்து விடும். அழகு மிக்கவள். அன்பு மிக்கவள். இவ்வளவுக்கும் அவளுடைய தந்தை தொழிற்கூடத்தில் ஒரு சாதாரணத் தொழிலாளிதான். கஷ்டப்படும் குடும்பம். அவரது மாத வருமானம் குடும்பச் செலவுக்குப் போதாது. ஆதலால் நவீனாவின் அம்மா அவ்வப்பொழுது ஏதாவது சிறு தொழில் செய்து குடும்பத்தின் செலவைச் சமாளித்து வந்தாள். நவீனாவின் பாட்டி, தாத்தாவும் அவர்களுடன் இருந்தனர். குடும்பத்தின் சுமை தாங்கமுடியாத அளவுக்கு இருந்தது. எனவே போராட்டம்தான். எப்படியோ குடும்பம் போராடிக் கொண்டே ஓடிக் கொண்டிருந்தது.


இருந்தால் ஏழையாக இருக்கணும் அல்லது பெரிய பணக்காரியாக இருக்க வேண்டும். இரண்டும் இல்லாமல் இப்படி இரண்டும் கேட்டான் நடுத்தரக் குடும்பத்தில் வந்து பிறந்து விட்டோமே என்ற ஏக்கம் நவீனாவின் மனதில் இருந்து கொண்டே இருந்தது. குடும்பச் சுமையைத் தாங்கிக் கொண்டு திண்டாடியபடி அப்பா அவளைப் படிக்க வைத்தார். நவீனாவும் குடும்பத்தின் கஷ்டம் தெரிந்தவளாக ஓய்வு நேரங்களில் அம்மாவோடு சேர்ந்து வேலை பார்த்து வந்தாள்.

நவீனா நன்றாகப் படிப்பவள். வகுப்பில் அவள்தான் முதல் மதிப்பெண் பள்ளியில் கூட முதல் மாணவி அவள் தான். பதினொன்றாம் வகுப்பு வரை அவள்தான் முதல் மதிப்பெண் பெற்று வந்தாள். அவ்வளவு திறமைசாலி. பள்ளியில் எந்தப் போட்டியிலும் அவளுக்குத் தான் முதல் பரிசு.

ஆனால் விளையாட்டில் நவீனாவுக்கு அதிக ஆர்வமில்லை. மற்ற போட்டிகளில் ஆர்வம் காட்டிப் பரிசு பெற்று பள்ளியில் ஆசிரியர், மாணவர் என எல்லோரது பாராட்டையும்

பெற்றவள் நவீனா.

பள்ளியில் காலாண்டுத் தேர்வு தொடங்கியது. பரீட்சையின் போது படிக்க முடியாமல் நவீனாவுககுப் பல இடையூறுகள் வந்தன. நவீனா அதையெல்லாம் சமாளித்துப் படித்தாள். எப்படியும் 200க்கு 200 வாங்க வேண்டும் என்ற வேகம் அவளுக்கு இருந்தது. ஒரு வழியாகப் பரீட்சை முடிந்து விடுமுறையும் கூடக் கழிந்தது. காலாண்டுத் தேர்வின் விடைத் தாள்கள் கொடுக்கப்பட்டன. எப்போதும் போலவே நவீனா வகுப்பிலும் பள்ளியிலும் முதலாவதாக வந்திருந்தாள். ஆனாலும் திட்டமிட்ட படி அவளால் 200க்கு 200 வாங்க முடியவில்லை.



நவீனாவின் பக்கத்து வீடு புவனாவினுடையது. புவனாவும், நவீனாவுடன்தான் படித்தான். சுமராகத்தான் படிப்பாள். ஆனால் வசதியான குடும்பம். தன் மகளை விட, நவீனா அதிக மார்க் வாங்குவது புவனாவின் தாய்க்குப் பிடிக்கவில்லை. எந்த வகையில லெல்லாம் நவீனாவைப் படிக்க விடாது பண்ணலாம் என்று யோசித்தான். ஒரு நாள் காலை ஏழு மணி இருக்கும், நவீனா படித்துக் கொண்டிருந்தாள். புவனாவின் தாய் வானொலியின் சத்தத்தை அதிகரித்தாள். நவீனாவால் முழு கவனத்தைச் செலுத்திப் படிக்க முடியவில்லை. புவனாவின் வீட்டு வானொலி அலறியதைத் தொடர்ந்து தெருவில் உள்ள மற்ற வீடுகளிலும் வானொலிச் சத்தம் உரக்கக் கேட்க ஆரம்பித்தது. "நம்ம வீட்டிலும் வானொலி உரக்கப் பாடட்டும். வைடா உரக்க" என்றார் நவீனாவின் எதிர்வீட்டு ஏகாம்பரம்.

இதேபோல் இரவு வந்துவிட்டால் தொலைக்காட்சி சத்தம் காதைத் துளைத்தது! நவீனா வீட்டில் தொலைக் காட்சிப் பெட்டியும் இல்லை, வானொலிப் பெட்டியும் இல்லை. அவர்கள் வீட்டுக்கு மின்சாரம் வந்தே மூன்று மாதம்தான் ஆகிறது.


நவீனாவினால் காலையிலும் சரி, மாலை, இரவிலும் சரி வீட்டில் படிக்க முடிய வில்லை. இரவுப் பள்ளியில் படிக்கலாம் என்று சென்றாள். ஆனால் அங்கு நண்பர் களின் தொல்லை! படிக்கிறோம் என்று அரட்டை மாநாடே நடந்தது! இத்தனை தடைகளிலும் இலட்சிய வெறியோடு மனம் தளராமல் படித்தாள் நவீனா.

அரை ஆண்டுத் தேர்வு ஆரம்ப மானது. காலாண்டைவிட அதிக இடை யூறுகள். நவீனா குடியிருக்கும் தெருவில் ஒரு புதிய டீக்கடை திறந்திருந்தார்கள். அதிலும்கூட சதா ஒலிபெருக்கிதான். நவீ னாவால் படிக்க முடியவில்லை. எல்லா முனைகளிலும் எதிர்ப்புத்தான்!

நவீனாவின் துன்பத்தைக் கண்டு மன மிரங்கிய வகுப்பாசிரியை தனது வீட்டில் படிக்க அனுமதித்தார். அருகே திருமண மண்டபம் இரவு முழுக்க ஒலிபெருக்கி வைத்து சினிமா பாட்டைப் போட்டு படிக்க முடியாமல் பண்ணினார் கள். நவீனா நேராகவே திருமண வீட்டுக்காரர்களைச் சந்தித்து, பத்து மணிக்கு மேல் "இப்படி ஒலிபெருக்கி வைக்கக் கூடாது. அது சட்டப்படி குற்றம்" என்று கூறிப் பார்த்தாள். எல்லோ ரும் அவளை கிண் டலடித்துச் சிரித் தார்கள். அவர்கள் யாருமே கேட்பதாகத் தெரியவில்லை. நவீனா மனம் வெறுத் துப் போனாள்.

பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல் லவா? ஒருநாள் புவனா விடம் "வானொலியின் சத்தத்தைக் குறைவாக வையுங்களேன்" என்று கெஞ்சிப் பார்த்தாள். "உங்கள் வீட்டிலும் வானொலிப் பெட்டி இருந்தால் இன்னும் சத்த மாக வை. வானொலியின் சத்தத்தைக் குறைப்பதும், அதிகப்படுத்துவதும் எங்கள் இஷ்டம்" என்றாள். கடுகடுப்புடன் புவனா. காலாண் டைவிட, அரையாண்டில் நவீனாவின் மதிப்பெண்கள் குறைந்திருந்தன. அப்படி இருந்த போதிலும் நவீனாதான் முதல்!

இந்தச் சூழ்நிலையில் பன்னிரண்டாம் வகுப் பிற்கான இறுதிப் பொதுத் தேர்வு கள் ஆரம்பித்தன. முதலில் தமிழ், ஆங்





இரத்ததான சாதனை!

ஈராக் நாட்டைச் சேர்ந்த சால்மன் அபு தான் என்பவர் சமீபத்தில் இரத்த தானம் செய்வதில் உலக சாதனை புரிந்துள்ளார். கடந்த 8 ஆண்டுகளில் 435 பாட்டில் இரத்தத்தை அவர் தானம் செய்துள்ளார்!

ஏ. ராகவேந்திரா,
திருவாரூர்.



புத்திசாலிக் குஞ்சு!

புதர் வான்கோழி என்ற பறவையின் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளி வந்த உடனேயே பறந்து தானாகவே இரை தேட ஆரம்பித்து விடும். கெட்டிக்காரப் பறவை!

எஸ். விஜயாசீனிவாசன்,
திருச்சி - 14.



ஆறுதல் டெலிபோன்!

மேற்கு ஜெர்மனியில் "மன ஆறுதல் தொலைபேசி" என்று ஓர் இயக்கம் உள்ளது. இந்த சர்வீஸுக்கு 25 டெலிபோன் இணைப்புகள் உண்டு. இதில் ஏதாவது ஓர் இணைப்புக்கு டெலிபோன் செய்து மனக்கவலை, துயரம், துன்பம் குறித்து முறையிட்டால் ஆறுதலும், யோசனைகளும் கூறுவார்கள்!


அ.முஸ்தபா
கக்கோலம்.

லம் ஆகிய தேர்வுகளை இடையூறுகளுக்கிடையேயும் நன்றாக எழுதி முடித்தாள் நவீனா. அடுத்த இரண்டு நாட்கள் விடுமுறையாக இருந்தன. அடுத்த பாடமாகிய இயற்பியலைப் படிக்க விடுமுறை இருந்தது. இந்த அழகில் மருத்துவம் பார்த்துக் கொள்ள அவள் வீட்டிற்கு உறவினர்கள் வேறு வந்து சேர்ந்தார்கள். நவீனாவின் தந்தைக்கோ பணப் பிரச்சனை. அம்மாவுக்கோ திண்டாட்டம். இத்தனை தடைகளுக்கு இடையே நவீனா மூச்சுப் பிடித்து மனம் தளராமல் படித்தாள். இந்த சந்தடியில் கோவில் திருவிழாவுக்காக ஒலிபெருக்கி வைத்தார்கள்! எல்லாம் சேர்ந்து கொண்டன. நவீனா பெரிய போராட்டமே நடத்திப் படித்தாள்!

ஒரு வழியாகத் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. பட்டபாட்டுக்கு ஏற்ற பயன் இருந்தது. மாவட்டத்திலேயே முதல் மதிப்பெண் பெற்றிருந்தாள் நவீனா! அதற்காக நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பரிசை வழங்கி அவளைப் பாராட்டிப் பேசினார்.


நவீனாவையும் பேசுமாறு அழைத்தார்கள். நவீனா மைக்கைக் கையில் பிடித்தாள். தான் படிக்க இடமின்றிப் பட்ட துன்பங்களை நினைத்துக் கொண்டாள். அத்தனை இடையூறுகளுக்கு இடையே தான் படிக்க நடத்திய போராட்டங்களை எண்ணினாள். அவைகளையெல்லாம் கோர்வையாக விவரித்தாள். "என் போன்ற ஏழைகள் படிக்க வேண்டும் என்று உண்மையாகவே எண்ணினீர்கள் என்றால், தேர்வு காலங்களிலாவது தொலைக்காட்சி, ஒலிப்பெருக்கி சத்தங்களை குறைக்கச் செய்ய வேண்டும்'' என்று மாவட்ட ஆட்சியரை வேண்டிக் கொண்டாள்.

நவீனாவின் கோரிக்கையை உடனே கவனிப்பதாகவும், மேலும் படிக்க அவளுக்கு அரசு உதவும் என்றும் கூறினார். மாவட்ட ஆட்சித் தலைவர். தடைகளை வென்ற மகிழ்ச்சியோடு வீடு திரும்பினாள்.



கதை அமைப்பு : ரே
சித்திரம் : சசி
வெள்ளி மணி
பண்ணையார் மகன் கோபு, திமிர் பிடித்தவன். ஈவுஇரக்கம் இல்லாதவன்.
ஜிம்மி, அந்தப் பூனையை விடாதே. துரத்து!
மியாவ் கத்துடா! கிளியார் நடுங்குவதை ரசிக்கலாம்!
ஒருநாள் வகுப்பில் –
ஏன் நிக்கறே கோபு? உள்ளே வந்து உட்கார்.
சார். ஒரு வேண்டுகோள்....
சொல்லு கோபு! பாடம் பாதியில நிக்குது....?
எங்கப்பா பெங்களூர்ல ஒரு பண்ணை வாங்கியிருக்கார். நான் போயிருந்தேன். அருமையான தக்காளி. வகுப்பில் எல்லோருக்கும் தரக் கொண்டு வந்திருக்கேன். அனுமதி தாங்க.


தாராளமா அனுமதிக்கிறேன். ஆனா இப்போ இல்லே. இடைவேளையில்...
இடைவேளையில் –
மாம்பழ அளவுக்கு இத்தனை பெரிசா இருக்கே!
எத்தனை சிவப்பு!
வீட்டுக்கு எடுத்துட்டுப் போகப் போறேன்.
நானும்தான்!
நன்றி கோபு!
அடுத்த நாள் வகுப்பில் –
தக்காளியைச் சுவைத்த நண்பர்கள் புகழப் போகிறார்கள்!
ஆனால் –
என்ன கோபு! தக்காளியா அது? புளிப்பில்லே, இனிப்பில்லே! வெறும் மண் மாதிரி இருந்தது...!
ஆமாம். பார்த்தா கண்ணைப் பறிச்சது! வெறும் தண்டம்!
என்ன கோபு! உன் தக்காளி இப்படி ஏமாத்திட்டதே!
போன வாரம் சி. பிரிவு சாந்தி தன் தோட்டத்துல காய்ச்சதுன்னு தக்காளி கொண்டு வந்து கொடுத்தா.
நெல்லிக்கா அளவுக்குத்தான் இருந்தது. ஆனால் எத்தனை ருசியா இருந்தது தெரியுமா? உன் தக்காளி பார்க்க ஷோக்கு. அதோட சரி!
மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பதை உன் தக்காளி நிலைநாட்டி விட்டது!
பெங்களூர் தக்காளி பெருமை இழக்கக் காரணமான சாந்திக்கு தகுந்த தண்டனை தரணும். அப்பத் தான் என் மனசு ஆறும்.


இடைவேளையில் —
நீதானா சாந்தி! என்னமோ எல்லோரும் உன்தோட்டத்துத் தக்காளியைப் புகழோ புகழென்று புகழ்கிறார்களே! உன் தோட்டம் எங்கே இருக்கு? எத்தனை பெரிசு?
எங்க வீட்டுக்கு முன்னால இருக்கும் இடத்தில்தான் சின்னதா தோட்டம் போட்டிருக்கேன். தோட்டம்னு சொல்லும்படியான அளவுக்கு பெரிசு இல்லே கோபு.
பெரிசா இல்லைன்னா என்ன? என் பெங்களூர் தக்காளி முகத்தில் கரியைப் பூசிட்டுதே! உன் தோட்டத்தைப் பார்க்க வரலாமா?
தாராளமா வா கோபு.
இன்னிக்கே வரேன்.
அன்று மாலை சாந்தி வீட்டுக்கு கோபு வந்தான்
வா கோபு. சொன்னபடி சரியா வந்துட்டியே?
காரணமாத்தான் வந்திருக்கேன். போகப் போகப் புரிஞ்சுப்பே!
இதோ பார்... இதெல்லாம் ரோஜாச் செடி. அது கத்திரிப்பாத்தி.... அந்தப் பக்கம் கீரைப் பாத்தி....


வேலி ஓரமா இருக்கே... அதெல்லாம் கனகாம்பரம்.
தக்காளிச் செடி எங்கே? அதைக் காட்டு முதல்ல...?
இந்தப் பக்கம் பார் கோபு. இதெல்லாமே தக்காளிச் செடிதான்...
நெல்லிக்கா அளவுக்கு ரசகுண்டு மாதிரி இத்துனூண்டா இருக்கே! எல்லாச் செடியிலயும் பழம் இருக்கு போல இருக்கே?
நாளைக்கு எல்லாம் பழுத்திடும் கோபு. பார்க்கத்தான் இது சின்னதே தவிர, ரொம்ப சுவையா இருக்கும்.
ஒரு பழத்தைப் பறித்துத் தத்து –
இந்தா சாப்பிட்டுப் பார்.
எல்லோரும் புகழ்ந்தது உண்மைதான்.... தக்காளி சூப்பர். ஆமாம்... தோட்டக்காரர் எங்கே?
தோட்டக்காரர் வைக்கும் அளவுக்கு எங்களுக்கு வசதி ஏது கோபு?
அம்மா உள்ளேயிருந்து வந்து –
எல்லாம் சாந்தி பாடுபட்டு வைச்சதுதான். பள்ளிக்குப் போகாத நேரமெல்லாம் தோட்டம்தான் பழி...


அப்படியா! உன் உழைப்புக்கு என் பாராட்டு. வரட்டுமா சாந்தி.
கோபு போனதும் –
இவன் ஈவு இரக்கமே இல்லாத கருங்கல் சாந்தி. யாராலும் திருத்த முடியலே. இவன் ஏன் இங்கே வந்தான்னு புரியலையே! காரணம் இல்லாம வரமாட்டான்!
எல்லோருமே எப்பவுமே கெட்டவங்களா இருக்க மாட்டாங்கம்மா.
நீ சொல்றபடி இருந்தா நல்லதுதான். ஆனா எனக்கு நம்பிக்கை இல்லை....
அடுத்த நாள் மாலை –
கோபு! ஆட்டுக்குட்டி அழகா இருக்கே! வளர்க்கப் போறியா?
ஆமாம். வளர்க்கத்தான் இதை சந்தையில் விலைக்கு வாங்கிக் கிட்டுப் போறேன்.
இதுக்கு என்ன பெயர் வைக்கப் போறே கோபு?
எனக்கு ஒன்றும் தெரியலே. நீதான் நல்ல பெயரா வையேன்?
வெள்ளிமணின்னு வைச்சா பொருத்தமா இருக்கும்.
சரி. அப்படியே வை.





என்கிட்டே ஒரு அழகான பாசி மணிமாலை இருக்கு. நுனியில ஒரு சலங்கை கூட இருக்கு. அதை இந்த வெள்ளிமணி கழுத்துக்குப் போட்டால் ரொம்ப அழகா இருக்கும். இது தலையை அசைக்கும்போ தெல்லாம் சலங்கை சத்தம் கேட்கும்?
என்னவோ பண்ணு. இப்போ ஆளை விடு.
கொஞ்சம் இரு கோபு. தினமும் நான் இதோட வந்து விளையாடலாமா?
தாராளமா. உனக்காகத்தானே இதை வாங்கியிருக்கேன்?
அப்படியா! உன்னைப் போய் ஈவு இரக்கமில்லாதவன்னு எல்லோரும் சொல்றாங்களே! எத்தனை அநியாயம்?
அவங்களெல்லாம் புத்திசாலி சாந்தி. நீயே புரிஞ்சுப்பே!
மாலை. பண்ணையார் வீட்டில் –
வணக்கம் ஐயா
வணக்கம். வாம்மா சாந்தி. எங்கே இந்தப் பக்கம்?
வெள்ளிமணி கழுத்துல இந்த மாலையைப் போடத்தான் வந்தேன். எங்கே வெள்ளிமணி?
வெள்ளிமணியாவது தங்கமணியாவது? இங்கே எந்த மணியும் இல்லையே?
ஐயா... நம்ம கோபு வாங்கிக்கிட்டு வந்திருக்கும் ஆட்டுக்குட்டிதான் வெள்ளி மணி. அது நான் வைச்ச பெயர்....


அதுவா? அதோ தோட்டத்துல கட்டிப் போட்டிருக்கான் பாரு... இந்த சனியனை எதுக்கு வாங்கிக்கிட்டு வந்திருக்கானோ? இன்னும் என்னென்ன சண்டை வரப் போறதோ... தெரியலையே!
ஐயா, கோபு மாறினால் கூட நீங்களெல்லாம் மாற விட மாட்டீங்க போலிருக்கே?
இல்லேம்மா. எனக்கு அவனைப் பத்தி நல்லா தெரியும். கருணை, இரக்கம் எல்லாமே அவனுக்குத் தெரியாதவை....
தெரியலைன்னா அன்பு காட்டி வளர்க்க இப்படி ஒரு ஆட்டுக்குட்டியை வாங்கிக்கிட்டு வந்திருப்பானா?
அதிசயமா இருக்கும்மா. உண்மையாகவே என் மகன் மாறிட்டான்னா, அதன் பெருமை உனக்குத்தாம்மா. நீ என்ன கேட்டாலும் தரேன்.
என்ன கேட்பது என்பதை யோசிச்சுக்கிட்டு வரேன் ஐயா!
சாந்தி வெள்ளிமணிக்கு மாலை அணிவித்து—
குட்டி ஆட்டுக்குட்டி அழகான ஆட்டுக்குட்டி!



அடுத்த நாள் காலை –
சாந்தி சாந்தி. தோட்டத்தை வந்து பாரேன்...!
சாந்தி பார்த்தாள்
பார்த்துக்கிட்டு நிக்கவா கூப்பிட்டேன்? எடுடி அந்தக் கம்பை. ஆட்டின் காலை முறித்து விடறேன்...
இரும்மா. ஏவியது யாரோ. பாவம் இது என்ன பண்ணும்?
தக்காளிச் செடி எல்லாம் போச்சுடி! இன்னமுமா நியாய அநியாயம் பாக்கறே?
இதற்குள், சாந்தியைப் புரிந்து கொண்ட வெள்ளிமணி –
ம்மே...,
சாந்தி வெள்ளிமணியைத் தூக்கிக் கொண்டு –
கோபு, இதற்காகவா வெள்ளிமணியை வாங்கிக்கிட்டு வந்தே?


ஆமாம், உன் தோட்டம் பாழாகணும். அப்பத்தான் நான் பட்ட அவமானம் தீரும்.
என் தோட்டம் என்ன பாவம் பண்ணினது கோபு!
பெங்களூர் தக்காளியால் எனக்கு வர வேண்டிய பெருமையை உன் தக்காளி அபகரித்துக் கொண்டு விட்டது!
எல்லோருடைய கேலிக்கும் ஆளாகி விட்டேன். இதற்கு உன் தோட்டம்தான் காரணம். அதை இருந்த இடம் தெரியாமல் அழித்தால்தான் எனக்கு அமைதி.
மறுபடி தோட்டம் போட்டால் என்ன பண்ணுவே?
போடக் கூடாது. போட்டா மறுபடி வந்து அழிப்பேன்...
வெள்ளிமணியை வைத்துத்தானே இத்தனை ஆட்டம் போடறே? இதன் காலை ஒடித்து விட்டால் என்ன பண்ணுவே?
இது போனா வேறமணி! அதுவும் போனால் ஏதோ மணி!
வெள்ளிமணியை வளர்க்கறதுக்காக் வாங்கலையா?
நீ ஏமாந்தா நான் என்ன பண்ணுவேன்? என் குறி, உன் தோட்டம்தான். இதற்காக எத்தனை ஆடுகளை வேண்டுமானாலும் வாங்குவேன்.
கேட்டை மூடிப் பூட்டிட்டா என்னடா பண்ணுவே?



என்ன பண்ணுவேனா? தெருவில் இருந்தபடி காம்பவுண்டுச் சுவருக்கு மேல் வெள்ளி மணியைத் தோட்டத்திற்குள் வீசுவேன்... சந்தையில் ஆட்டுக்கா பஞ்சம்?
பலவந்தமாக வெள்ளிமணியைப் பிடுங்கிக் கொண்டு –
இன்னிக்கு இது போதும்... மீதி நாளைக்கு!
சாந்தி, உன் தோட்டத்துல இன்னும் ஒரு வாரத்துக்கு வெள்ளிமணிக்கு வேண்டிய தீனி இருக்கு. தினமும் வருவேன். கேட்டைப் பூட்டி வைச்சால் என்ன பண்ணு வேன்னு ஏற்கெனவே சொல்லிட்டேன். புத்திசாலியா நடந்துக்க....
இவன் மினி ரெளடிம்மா. எதுக்குமே அஞ்சாத அரக்க மனம். அந்த ஆட்டுக்காக நீ எதையும் செய்வேன்னு அவன் புரிஞ்சுக்கிட் டான். அதான் இப்படி ஆட்டி வைக்கிறான். ஆட்டின் மேல் சொந்தக்காரனுக்கு இல்லாத அக்கறை உனக்கு மட்டும் எதுக்கும்மா?
அம்மா, அது பேச இயலாத ஜீவன்மா... அன்பு செலுத்த மட்டும்தான் தெரியும். எதுக்கும் பண்ணையாரிடம் முறையிட்டுப் பார்க்கிறேன்.
சாந்தி நடந்ததை விளக்கினதும் –
எனக்கு என் மகனைத் தெரியும்மா. நீதான் ஏமாந்தே. அடி உதைக்கு அஞ்சாதவன். மறுபடி வந்தா, உடனே சொல்லு. பேசாம வெள்ளி மணியை பிரியாணி வைத்துச் சாப்பிட்டுடறேன்?
ஐயா, அப்படியெல்லாம் அவசரமா எதுவும் பண்ணிடாதீங்க. பாவம் வெள்ளிமணி. ஒரு பாவமும் அறியாதது. பிரியாணி பண்ணிடாதீங்க.
கவலைப்படாதேம்மா. நீ வந்து சொன்னால்தான் பிரியாணி.




அடுத்த நாள் காலை கோபு, வெள்ளிமணியுடன் வந்தான். தோட்டம் பாழானது.
அன்று மாலை –
சாந்தியா! என்னம்மா ஆச்சு உன் தோட்டம்? மினி ரெளடி வந்தானா இன்னிக்கு? பிரியாணி சாப்பிட்டு எனக்கும் நாளாச்சு...?
ஐயா ஐயா... இன்னிக்கு கோபு வரவே இல்லையா. தோட்டம் தப்பிச் சிட்டுது. இனிமே வருவான்னு தோணலே. திருந்திட்டதாகவே நினைக்கிறேன்.
என்னால் நம்ப முடியலே. ஆட்டுக்குட்டியைக் காப் பாத்த நீ பொய் சொல்றே?
இல்லையா. உண்மையாகத் தான் கூறுகிறேன்... கோபு வரவே இல்லை.
அப்படின்னா தினமும் எனக்கு பூஜைக்கு நான்கு ரோஜாப்பூ கொண்டு வந்து கொடு. இது ரோஜா சீசன்தானே? நீ பள்ளிக்குப் போகும் போது தந்தால் போதும். ரோஜா வரலைன்னா, பிரியாணிதான்!
ஐயா, அவசரப்பட்டுடா தீங்க. தினமும் ரோஜா கொண்டு வரேன். கொஞ்சம் பொறுமையா இருங்க....
வில்வண்டி போனது.
வெள்ளிமணி, தோட்டமே பலியானாலும் சரி, உன்னைக் காப்பாற்றியே தீருவேன்!




அடுத்த நாள் காலை –
நேற்று எண்ணினப்போ முப்பது மொட்டு இருந்தது. இப்போ நாலு பூ குறையுதே! நான் வருமுன்பே திருடிக்கிட்டயா? கொண்டா. இல்லே வெள்ளிமணிக்கு சூடு போட்டுடுவேன்...
வேண்டாம் கோபு. வெள்ளி மணியை ஒன்றும் பண்ணிடாதே. நான்தான் பறிச்சு வைச்சுக்கிட்டேன். இது கூட எனக்காக இல்லை....
சரி சரி, இனிமே இந்த மாதிரி திருடாதே!
நான் திருடியாகவே இருக்கட்டும். இப்போ பண்ணையாருக்குக் கொடுக்க ரோஜா வேண்டுமே! உண்டியல காசு இருக்கு. வாங்கித் தந்து விடலாம்.
ஒரு வாரம் ஓடியது. சாந்தியின் தோட்டம் பாலைவனமானது. ரோஜா மட்டுமே சீசன் காரணமாகப் பூத்துக் குலுங்கியது.
அதையும் கோபு விடவில்லை.
நாற்பது பூ. சரியா இருக்கு. இந்தா சாப்பிடு வெள்ளிமணி.
கோபு போனதும் –
ஐயையோ, நேரமாயிடுச்சே! ரோஜாப்பூவை வாங்கித் தாணுமே...?




கடை வீதியில் –
எல்லா ரோஜாப்பூவும் வித்துப் போச்சேம்மா!
இப்பத்தாம்மா இருந்த ரோஜா அத்தனையையும் ஒரு பையன் அள்ளிண்டு போனான். குறுக்கே போனா புடிக்கலாம். நாலு பூதானே? கேட்டுப் பார். தரலாம்.
சாந்தி விரைந்தாள் –
பூ தரலேன்னா, பண்ணையார் பிரியாணி பண்ணிடுவாரே... சாமி... நாலு பூ கிடைக்கும்படி பண்ணி, வெள்ளிமணியைக் காப்பாத்து!
வண்டியைப் பிடித்தாள். வண்டி நின்றது.
ஐயா... ஐயா!
மூட்டை அடுக்குக்குள் இருந்து –
சாந்தியா...! என்ன வேணும்?
ஐயோ... நீயா கோபு! நாலே நாலு ரோஜா தருவியா? சும்மா வேண்டாம். காசு தரேன்...?
உன்னைப் பார்த்தா எனக்கே பாவமா இருக்கு. தரேன். ஆனால் எதுக்குன்னு சொல்லணும். சொல்லு.... ம்?!


சாந்தி கூறினாள் எதையும் ஒளிக்காமல் –
முடித்தபோது –
ஏன் கோபு விசும்பறே? கண்ணிலே நீர்! ஏன் அழறே?
கீழே இறங்கினான் –
உன் தோட்டத்தை அழிக்கவே வெள்ளிமணியை வாங்கினேன். உன் தோட்டத்துக்கு அதனால் அழிவு என்பது தெரிந்த பிறகும் கூட உன் அன்பு மாறவில்லை.
அதன் உயிருக்கு ஆபத்து வராமல் இருக்க என்னவெல்லாம் பண்ணியிருக்கிறாய்! இதுதான் உண்மை அன்பு. என் அன்பு சுயநலம். இருந்தும், நன்றி இல்லாமல் அதன் உயிரை வாங்க அனுமதித்திருக்கிறேன்.
ஐயோ! வெள்ளிமணிக்கு ஆபத்தா! என்ன கோபு?
ஆம் சாந்தி. அமெரிக்காவில் இருந்து திரும்பியுள்ள என் மாமாவுக்கு இன்று அப்பா விருந்தளிக்கிறார். அதற்கு வெள்ளிமணிதான் பிரியாணி...


ஐயோ... வெள்ளிமணி!
பயப்படாதே சாந்தி. இன்னும் நேரம் இருக்கு. காப் பாற்றிடலாம். சீக்கிரம் வண்டியில் ஏறு!
வண்டி விரைந்தது –
விவரம் அறிந்த பண்ணையார் –
ஒரு உயிரைக் காப்பாற்ற நீ இத்தனை பாடுபட்டிருக்கும்போது நான் பிரியாணிக்காக அதைக் கொல்ல இருந்ததை நினைக்கும்போது வெட்கமாக இருக்கிறது. அதோடு கோபுவை நல்லவனாக மாற்றி விட்டாயே! உனக்குப் பெருமை தர வேண்டாமா? இனி என் வீட்டில் புலால் கிடையாது.
சாந்தி, காலையில் உன் வீட்டுக்கு வருவேன். பயப்படாதே! தோட்டத்தை நானே சீர்செய்து தரேன்.
இந்த வெள்ளிமணியையும் அழைத்து வா கோபு. கட்டிப் போட்டு விட்டு தோட்ட வேலையைக் கவனிப்போம்!





ஒன்று சேருங்கள் - போட்டி

இங்கே உள்ள 24 படங்களையும் கவனமாகப் பாருங்கள். இவைகளுள் 12 மூன்றெழுத்துள்ளவை; 12 இரண்டெழுத்துள்ளவை. அது மட்டுமா? இந்த இரண்டெழுத்து உள்ளவற்றோடு, நடுவில் ஒரு எழுத்தைச் சேர்த்தால் அந்த மூன்றெழுத்துள்ளவை கிடைக்கும். உதாரணம் தளை (தாழ்ப்பாள்). இதன் இடையே ஒரு எழுத்தைச் சேருங்கள். ''தவளை'' இப்படி மீதி உள்ள 22 படங்களையும் கண்டு பிடித்து எழுதி முகவரிக் கூப்பனையும் ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்புங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதினால், பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. முடிவு தேதி: 30.4.97.

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை — 600 097.



சிரிப்...



''நம்ம நாட்டுல நிறைய தலைவர்கள் பிறந்ததை நினைச்சு பெருமைப் படறேன்டா!''

''எதனாலடா?''

''அதனாலதானே நமக்கெல்லாம் நிறைய நாள் லீவு கிடைக்குது?''


— ச. சிவக்குமார்.

''அதோ அவன் நம்ம இனம் தானான்னு சந்தேகமா இருக்கு.''

''ஏன் அப்படிச் சொல்றே?''

''சேட்டையையே பண்ண மாட்டேங்கிறானே!''

— கி. மனோகரன்





''கோழி ஏண்டா முட்டையிடுது?''


''ஏன்னா அதுக்கு 1,2,3 தெரியாது.''

—எஸ். யாஸ்மின்


''ரங்கன் என்னைப் பார்த்தான் என்பதை எப்படி ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பே?''

''ரங்க சாமி!''

—எஸ். யாஸ்மின்



உதயன் எங்கே?



8 அறையில் கிடைத்த சாவி

வார்டன் வைரவநாதன் குடியிருந்த வீடும் கருணையில்லத்தின் வளாகத்தினுள்ளேயே இருந்தது. அன்று காலையில் வெளி வராந்தாவில் செய்தித்தாளைப் படித்துக் கொண்டிருந்த வைரவநாதனின் மனம் மிகவும் சோர்ந்து போயிருந்தது. கண்கள்தான் பத்திரிகையில் இருந்தனவே தவிர அவரது உள்ளம் சஞ்சலத்தால் அலை பாய்ந்து கொண்டிருந்தது.

தேனீரை எடுத்து வந்து அவரிடம் நீட்டிய அவரது மனைவி மெதுவாக, "என்னங்க, பூமாவோட படிப்பு விஷயமா என்ன முடிவு செய்தீங்க?" என்று கேட்டாள்.

பத்திரிகையிலிருந்து தலையை நிமிர்த்தித் தன் மனைவியைப் பார்த்த வைரவநாதன், "இன்ஜினியரிங் கல்லூரியில் படிக்க வைக்கிறதுங்கறது என்ன இலேசான காரியமா?.... ஆரம்ப செலவுக்கே நம்மால் நெனச்சுக்கூடப் பார்க்க முடியாது" என்றார் உற்சாகமற்ற குரலில்.

"பிள்ளை ரொம்ப ஆசைப்படறா. இந்தப் படிப்புக்கு இடம் கிடைக்கிறதே குதிரைக் கொம்பா இருக்கு... இந்த வாய்ப்பை விட்டுட்டா அப்புறம் நாமதான் வருத்தப்படப் போறோம்'' என்ற அவரது மனைவியின் குரலில் கவலை பெரிதும் தொனித்தது.

"அம்மாவுக்கு ஆபரேஷனுக்கு உடனே பத்தாயிரம் வேண்டும். அவங்களும் வயிற்றுவலி, வயிற்றுவலின்னு எத்தனை வருஷமா கஷ்டப்படறாங்க...? அதுக்கே பணமில்லாம நான் தவிச்சுட்டிருக்கேன். என்னோட கவலை யாருக்குப் புரியுது?" என்ற வைரநாதன், மீண்டும் பத்திரிகையில் பார்வையை ஓடவிட்டார்.

"நீங்க கோவிச்சுக்கல்லேன்னா நான் ஒன்னு சொல்லட்டுமா?"

"நீ என்ன சொல்லப் போறேன்னு எனக்குத் தெரியும். மேடத்துக்கிட்ட பணம் கேட்டா என்னன்னுதானே?'' என்று மனைவியைப் பார்த்தார் வார்டன்.

"ஆமாங்க, நம்முடைய இந்தக் கஷ்ட நேரத்துல அவங்ககிட்ட கேட்காம, வேற யார்கிட்ட கேட்க முடியும்?... மேடம் ரொம்ப இரக்கக் குணம் உள்ளவங்கன்னு ஊரெல்லாம் பேச்சாயிருக்கு. நீங்க கேட்டா, உங்களுக்கு இரங்கமலா போயிடுவாங்க?"

''யாருமில்லாத அனாதைகளைக் கண்டாத்தான் அவருக்கு இரக்கம் வரும்... நாம போய்க் கேட்டா, தியாக மனம் வேணும், செலவுகளைக் குறைக்கணும் அப்படி இப்படின்னு தத்துவம் பேசுவாங்க... அதோட, இப்ப வெயில் காலம் வேற வந்தாச்சா? தோட்டத்துல இருந்து நயாப் பைசாகூட வருமானம் வராது... இந்த வருஷம் மேலிடத்துல இருந்துகூட உதவிப் பணம் கிடைக்காது போலிருக்கு. இந்த நிலைமையில எப்படிப் போய் உதவி கேட்க முடியும்?'' என்று நம்பிக்கையிழந்தவராகச் சொன்னார் வைரவநாதன்.

ஆனால் அவரது மனையாள் சமாதானமடைந்ததாகத் தெரியவில்லை. "கேட்டுத்தான் பாருங்களேன்? ஊரிலுள்ள எத்தனையோ பிள்ளைகளைப் படிக்க வைக்கறாங்க. நம்ம பிள்ளைகளையெல்லாம் மட்டும் படிக்க வைக்க மாட்டேன்னுடுவாங்களா? எல்லாம், நாம கேட்கிறதுல இருக்கும்" என்று வற்புறுத்தினாள்.

சற்று நேரம் மௌனமாக இருந்த வார்

வி.ர. வசந்தன்

டன், "சரி, கேட்டுப் பார்க்கிறேன்... ஆனா அதையெல்லாம் நம்பிக்கிட்டு இருக்காதே.... அவங்களோட குணம் எனக்குத் தெரியும்" என்றவாறு சலிப்புடன் எழுந்தவர் குளித்து அலுவலகத்திற்குச் செல்லும் பொருட்டு உள்ளே சென்றார்.

அவர் குளிக்கக் கிளம்பிய வேளையில் அழைப்பு மணி "கிண்"ணென்று ஒலிக்கவே, வேகமாகச் சென்று கதவைத் திறந்து பார்த்தார். வெளியே காளிமுத்து நின்று கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்ததும் மிகுந்த பரபரப்படைந்த வைரநாதன் "என்ன காளிமுத்து? என்ன விஷயம்?" என்று இரகசியக் குரலில் கேட்டார்.

அங்குமிங்கும் பார்த்துக் கொண்டே காளிமுத்து, சட்டென்று பைக்குள் கையை விட்டுக் கற்றையாகப் பணத்தை எடுத்து அவரிடம் நீட்டினான். "ஐநூறு ரூபாய் இருக்கு ஸார்" என்றான்.

வைரவநாதன் அதை அவசரம் அவசரமாக வாங்கிக் கொள்ள, அவன், "ஸார், அன்னிக்கு அரை மூட்டை உளுந்தைக் கொண்டு போய்க் கடைக்குப் போட்டதுக்கும், இரண்டு நாளைக்கு முன்னால எடுத்துட்டுப் போன சர்க்கரைக்கும் சேர்த்துக் கொடுத்தான்" என்றான் அடிக்குரலில்.

"சரி, சரி. இதையெல்லாம் அப்புறம் பேசிக்கலாம் காளிமுத்து" என்று உள்ளே திரும்பச் செல்ல முனைந்தார் வார்டன்.

காளிமுத்து தலையைச் சொறிந்தவாறு, "உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லணும்னு நினைச்சேன்" என்றான்.

அவர் தயங்கி நிற்க, அவன் "இந்த மனோகரன் பயல்கிட்ட ரொம்பக் கவனமா இருக்கணும் ஸார். ஏன்னா, அவன் இங்க நடக்கிற எல்லாக் காரியத்தையும் மேடத்துக்கிட்ட போய் சொல்றான், எனக்கு என்னமோ மேடமே அவனை வேவு பார்க்கச் சொல்லி இருக்காங்கன்னு தோணுது" என்று உதட்டைச் சுழித்தான்.

"அப்படியெல்லாம் இருக்காது... நீ வீணா கவலைப்படாதே. நான் எல்லாத்தையும் பார்த்துக்கறேன்" என்றார் வைரவநாதன் அவசரமாக.

"பயப்படலே ஸார்... ஆனால் விஷயம் ரொம்ப மோசமா போய்க் கிட்டிருக்கு. அதுதான் சொன்னேன். நீங்க ஒரு மாசத்துக்கு முந்தி, ஒரு மாட்டை வித்தீங்களே, அதை அவன் இருட்டுக்குள்ளே மறைஞ்சுக்கிட்டு பார்த்துட்டிருந்தான்... அதோட அவன் நடுராத்திரியில அடிக்கடி எழுந்து வெளியே சுற்றுகிறான்னு உதயன் சொல்றான்... அந்த ராத்திரியில அவன் குறிப்பா அங்கே வரணும்னா, மேடம் சொல்லித்தான் வந்திருப்பான்னு எனக்குப் படுது"


அவன் சொன்னதைக் கேட்ட வைரவநாதன் அதிர்ந்து போனார். காளிமுத்து சொல்வதில் உண்மையிருக்கும் என்றே அவருக்கும் தோன்றியது. ஆனாலும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், "சரி சரி, நான் பார்த்துக்கறேன்.. நீ போ" என்றார்.

"ஸார், செலவுக்கு ஒரு நூறு ரூபா வேணும்" என்றான் காளிமுத்து மெதுவாக.

மறுபேச்சில்லாமல் பணத்தைக் கொடுத்து அவனை அனுப்பிவிட்டு அவசரமாகக் குளித்து, உடை மாற்றிக் கொண்டு அவர் தன் அலுவலக அறையை அடைந்தார். காத்திருந்த பணியாளர் அருமைநாயகம், மார்கரெட் அம்மையார் அவரை அவசரமாக அழைப்பதாகத் தெரிவித்தார்.

வார்டனின் மனதுக்குள் "திக்'கென்றது. அவர் மறுபுறமிருந்த திருமதி. மார்கரெட்டின் அறை அழைப்பு மணியை அழுத்த, "எஸ், கம் இன்" என்ற மெல்லிய குரல் கேட்டது. தள்ளு கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தார் வார்டன்.

வரவு செலவு கணக்குப் புத்தகங்கள் மேஜை முழுவதும் பரவியிருக்க, அவற்றைக் கவனித்துச் சரி பார்த்துக் கொண்டிருந்தார் திருமதி மார்கரெட். வார்டன் வந்ததை சற்றும் சட்டை செய்யாமல் தன் கையிலிருந்த சிவப்பு மை பேனாவால் ஆங்காங்கே அடிக்கோடிடுவதும், பக்கத்தில் குறிப்புகள் எழுதுவதும் பின் சிந்தனையில் ஆழ்வதுமாக இருந்த அவர், சற்று நேரத்திற்குப் பின் நிமிர்ந்து, நின்று கொண்டிருந்த வைரவநாதனைப் பார்த்தார்.



அந்தப் பார்வையே அவருக்குத் திகிலை உண்டு பண்ணியது. அதிக கோபத்தில் இருந்தால் மட்டுமே அவர் அப்படிப் பாராமுகம் காட்டுவதுண்டு.

அதிகமாகச் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே விஷயத்துக்கு வந்த திருமதி.மார்கரெட், "மிஸ்டர் வைரவநாதன், போன வருடத்தைவிட இந்த வருடம் செலவு ரொம்பவும் அதிகமாக இருக்கிறதே? இதை நீங்கள் கவனிக்கவில்லையா?" என்று கேட்டார்.


"ஆமாம் மேடம். விலைவாசியெல்லாம் ரொம்ப ஏறியிருக்கு. அதனால செலவு அதிகமாகத்தானே செய்யும்?" என்றார் வார்டன்.

"நான் விலையைப் பற்றிக் கேட்கவில்லை... அளவைப் பற்றிதான் சொன்னேன்... உதாரணமாக, அரிசி நமக்குக் கடந்த வருடத்தில் நானூறு மூடைகள் ஆகி இருக்கிறது. இந்த வருடம் நானூற்று இருபது மூடை கணக்கில் இருக்கிறது... இதைப் போலத்தான் எல்லா தானியங்களும்...இதற்கு ஏதாவது காரணம் சொல்ல முடியுமா?"

"அதைப் பற்றி எனக்கு ஒண்ணும் தெரியாது மேடம்... சமையற்காரனைத் தான் கேட்கணும்" என்றார் வைரவநாதன். தன் முகத்தில் கவிந்திருந்த கலவரத்தை மறைக்க அவர் மிகுந்த சிரமப்பட வேண்டியிருந்தது.

திருமதி மார்கரெட் அவர் முகத்தை நேருக்கு நேர் பார்த்தார். "இதோ பாருங்கள் வைரவநாதன், பொறுப்பான பதவியில் இருந்துகொண்டு, இப்படித் தெரியாதென்னு சொல்லக்கூடாது. அது பொறுப்பற்றவர்கள் பேசுகிற பேச்சு... அது போகட்டும், போன மாதம் ஒரு மாடு செத்துப் போனதா எழுதி இருக்கிறீர்களே?... அதற்கு என்ன செய்தீர்கள்?"

"செத்துப் போன பிறகு என்ன மேடம் செய்ய முடியும்? புதைச்சுட்டோம்"



"அப்படியா! நான் அதைக் கேட்க வில்லை மிஸ்டர் வைரவநாதன். வியாதி வந்த மாட்டுக்கு என்ன வைத்தியம் செய் தீர்கள் என்று கேட்டேன்?

"வெட்னரி டாக்டரை அழைச்சுட்டு வந்து ஒரு வாரம் ரொம்பக் கஷ்டப்பட்டு முயற்சித்துப் பார்த்தோம்... ஆனா பிரயோஜனமில்ல"

"அப்படியா! வைத்தியம் பார்த்த



செலவெல்லாம் கணக்கில் இல்லையே! நீங்கள் கையில் இருந்து கொடுத்தீர்களாக்கும்?"

மார்கரெட் அம்மையாரின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாமல் திணறிப் போனார் அவர். தான் வகையாக மாட்டிக் கொண்டதை உணர்ந்தார். கை கால்கள் நடுங்க ஆரம்பித்தன. "அது, வந்து மேடம்... எழுத மறந்திருப்பேன்... கணக்கை சரி செய்துடலாம்" என்று திணறினார்.

அம்மையாரின் குரல் கடினமாகியது. "கணக்கை எப்படி வேண்டுமானாலும், எப் போது வேண்டுமானாலும் சரி செய்ய முடி யும் என்பது எனக்குத் தெரியும்" என்றார்.

வைரவநாதனுக்குப் புரிந்து போயிற்று. காளிமுத்து சொன்னது உண்மைதான். அந்த மனோகரன்தான் எல்லாவற்றையும் வந்து சொல்லியிருக்க வேண்டும் என்று நினைத்தபோது அவன் மீது கட்டுக்கடங் காத கோபம் வந்தது அவருக்கு.

"மேடம் நீங்க என் மேல அனாவசியமா சந்தேகப்படறீங்க... யாரோ அனாதைப் பசங்க வேணும்னு கோள் சொல்லி இருக் காங்க... என்னுடைய கட்டுப்பாட்டை விரும்பாத எவனோ ஒருத்தன், இப்படி இல்லாத பொய்யெல்லாம் வந்து சொல்லி இருக்கான். நான் உண்மையாத்தான் நடந் துக்கிட்டு இருக்கேன்" என்றார் கோபமாக.

அதைக் கேட்டதும் திருமதி மார் கரெட்டின் முகம் சிவந்தது. வயது முதிர்ந்த அவரது உடல் ஆத்திரத்தில் நடுங் கியது. வைரவநாதனைப் பார்த்து, "யாரை அனாதை கள் என்று சொல்கிறீர்கள்? இந்த இல்லமும், நானும் இருப்பதுவரை இங்கு யாரும் அனாதை இல்லை. நிராதரவாக விடப்படுகிற வர்கள் எல்லோரும் கடவு ளுடைய குழந்தைகள். நாம் அவர்களோட வேலைக்காரர்கள். இதை முதலில் தெரிந்து கொள் ளுங்கள்" என்று கத்தி னார்.

வைரவநாதன் பொறுமையிழந்தவராக, "இந்த நிறுவனத்துக்காக இராப்பகலா உழைக்கிற நான் சொல்றதை நம்ப மாட் டீங்க... ஆதாரமில்லாம யாரோ சின்னப் பயல் சொன்னதைக் கேட்டு, இப்படி எம் மேல கோபப்படறது நல்லாயில்ல மேடம்" என்று குரலை உயர்த்தினார்.

கண்களைச் சுருக்கி அவரை மறுபடி பார்த்த மார்கரெட் அம்மையார், சட் டென்று தன் கைப்பையைத் திறந்து அத னுள்ளிருந்து ஓர் ஒற்றைச் சாவியை எடுத்து மேஜையின் மீது வைத்தார். "இதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

அந்தச் சாவியை உற்றுப் பார்த்த வைர வநாதன் அதிர்ச்சியில் உறைந்து பேச வாய் வராமல் தவித்தார். அவருக்கு வியர்த்துக் கொட்டியது. தலை தன்னையுமறியாமல் தாழ்ந்தது.

"இது தானியங்கள் சேமித்து வைக்கும் அறையின் பூட்டுக்குத் தயாரிக்கப்பட்ட மாற்றுச்சாவி. உங்கள் பொறுப்பில் ஒப் படைக்கப்பட்டுள்ள சாவிக்கு, உங்களது அனுமதியில்லாமல் எப்படி போலிச்சாவி தயாரிக்க முடியும்?"

வார்டன் பேசவில்லை.

"இந்தச் சாவி எங்கிருந்து கிடைத்தது தெரியுமா? காளிமுத்துவின் அறையில். ஆமாம். அவன் இல்லாதபோது, அந்த

அறையைச் சோதனையிடச் சொன்னது நான்தான். சோதனையிட்டது நீங்கள் நினைப்பது போல் அந்த அனாதைப் பையன் மனோகரனேதான்! அவனுக்கிருக்கிற பொறுப்புணர்ச்சிகூட ஊதியம் பெறுகிற உங்களுக்கு இல்லாதது ஆச்சரியந்தான்"

மார்கரெட் அம்மையார் அழுத்தம் திருத்தமாகப் பேசியதைக் கேட்டு நடுநடுங்கிப் போன வைரவநாதன் தழுதழுத்தக் குரலில். "மேடம், என்னை மன்னிச்சுருங்க... என் வீட்ல இருக்கிற பிரச்சனைகளால ஏதோ அறிவில்லாம நடந்துட்டேன்... இனி இப்படி நடக்காம பாத்துக்கறேன்" என்றார்.

மார்கரெட் அம்மையாரின் முகத்திலிருந்த கோபம் சற்றுத் தணிந்தது. ஆனாலும் குரலில் வேகம் குறையாமல், "இந்த இல்லத்திற்கு உரிமையான எல்லாப் பொருட்களையும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் வைரவநாதன். நான் கவலைப்பட மாட்டேன். ஆனால் வளர்ந்து இந்த சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நிற்க வேண்டிய ஒரு சிறுவனை, திருட்டுத் தொழிலில் பழக்கி இருக்கிறீர்களே...! அதைத்தான் என்னால் மன்னிக்க முடியவில்லை. இப் போதே போலிச் சாவி தயாரித்துத் திருடுவது எப்படி என்று கற்றுக் கொண்டிருப்பவன், நாளை என்னவெல்லாம் செய்ய மாட்டான்? ஒரு திருடனை உருவாக்குவதற்காகவா நான் இவ்வளவு சிரமப் படுகிறேன்...? அவனை எப்படியும் திருத்தி விடலாம் என்ற நம்பிக்கையில் நான் எடுக்கும் முயற்சிகளெல்லாம் ஏன் பாழாகி வருகின்றன என்பது இப்போதுதான் புரிகிறது" என்றபோது அவர் குரல் மட்டுமல்ல, உடல் முழுவதுமே நடுங்கிக் கொண்டிருந்தது.


ஒன்றும் பேசாமல் தலை குனிந்து நின்ற வைரவநாதனைப் பார்த்த அவர் கண்களில் சட்டென்று ஒரு பரிதாபம் தோன்றியது. "சரி, நீங்கள் போகலாம். மறுபடியும் இதுபோல் நேராமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார்.

அன்று மாலை வைரவநாதன் தன் வீட்டிற்கு வந்தபோது அவரது மனைவி, "மேடத்துக்கிட்ட உதவி கேட்டீங்களா?" என்று ஆவலுடன் அவரிடம் கேட்டாள்.

வைரவநாதன் உடைந்து போன குரலில், "இனி இந்த இடத்தில் நான் வேலை பார்ப்பேனா என்பதே சந்தேகந்தான்... இனி மேல் இங்க வேலை செய்ய முடியாது போல இருக்கு" என்றபோது என்ன நடந்தது என்று புரியாமல் திகைத்து நின்றாள் அவரது மனையாள்.

(தொடரும்)





வெற்றி....

விடிந்து மணியும் ஐந்தாச்சு
விழித்து நானும் எழுந்தாச்சு
விருப்புடன் பாடம் படிச்சாச்சு

காலைக் கடன்கள் முடிச்சாச்சு
கல்விச் சாலை வந்தாச்சு
கலைகள் பலவும் படிச்சாச்சு

மாலை நேரம் வந்தாச்சு
மகிழ்ந்து ஆடி முடிச்சாச்சு
மனையை நோக்கி விரைந்தாச்சு

இரவு நேரம் வந்தாச்சு
எல்லாக் கடமையும் முடிச்சாச்சு
உறங்க நானும் போயாச்சு

விடியல் மீண்டும் வந்து விடும்
விழிப்பை எனக்குத் தந்து விடும்
வெற்றி பெறுவேன் நிச்சயமாய்!

— அழ.சகாதேவன்,
இராமசாமி நகர்.

வாழை மரம்

வனிதா வீட்டுத் தோட்டத்தில்
வகை வகையாய் வாழைமரம்

வரிசை வரிசையாய் நிற்குதே
வந்து இங்கே பாருங்கள்

வாழைப்பூவில் பொடியலாம்
வடைகறியும் செய்யலாம்

வாழைத் தண்டு நறுக்கலாம்
வகையாய்ப் பொரியல் செய்யலாம்

வாழைக் காயில் வறுவலும்
வாய்க்கு ருசியாய் இருக்குமே

அடியிலுள்ள 'கிழங்கையும்
அரிந்து கறியும் செய்யலாம்

வீட்டில் வந்த விருந்தினர்
விரும்பி உண்ணும் வாழையிலை

வாழைப் பழமும் கொடுத்திடும்
வாழிய வாழிய வாழைமரம்!

— சு. கண்ணகி, மிட்டூர்.



புத்தகம்

அறிவுக் கண்ணைத் திறந்திடும்;
அகந்தை தன்னை ஒழித்திடும்;
சீரும் சிறப்பும் தந்திடும்;
செம்மை வாழ்வு அளித்திடும்!

அம்மா அப்பா படித்தது;
அண்ணன் அக்கா தந்தது;
இம்மா வுலகில் உயர்ந்தது;
எந்நாட் டவர்க்கும் பிடித்தது!



ஏழை செல்வர் யாருமே,
ஏற்று விரும்பி வாங்குவர்;
கூழைக் காய்ச்சிக் குடிக்கினும்,
குன்றென உயர்ந்திட உதவிடும்!

வண்ண வண்ணப் படத்திலே,
வழுவழுப் பான தாளிலே,
உள்ளங் கொள்ளை கொள்ளுமே;
உயர்ந்த நமது புத்தகம்!!

— தேவந்தி துரைராஜ்,
திருப்பத்தூர் - 2.

இராட்டினம்!


இராட்டினமாம் இராட்டினம்!
இன்பம் ஊட்டும் ராட்டினம்!
போட்டிபோட்டு நாமெல்லாம்
பாய்ந்து ஏறும் ராட்டினம்!



மஞ்சள் குதிரை இருக்குதாம்!
முரட்டுக்காளை இருக்குதாம்!
அஞ்சாநெஞ்சம் கொண்டநம்
அருமைப் புலியும் இருக்குதாம்!

மரத்தினாலே செய்ததாம்!
மகிழ்ச்சி பொங்க வைக்குமாம்
விருப்பம் போல ஏறி நாம்
விரைவாய்ச் சுற்றி மகிழலாம்!

— எஸ். முத்துச்செல்வி,
சென்னை - 82.



FOOL'S DAY
Look out for
'All Fool's Day'
Stories and poem
and lots more
in the
April '97 issue!
Rs. 5/-
GOKULAM
The monthly magazine for children
GOKULAM - EKKADUTHANGAL - CHENNAI - 97
AF
KALA



தாடகை ஆடிய தாயம்!

திக்... திக்... திக்... கதைகள்! | **பயமின்றிப் படியுங்கள்!**

சென்ற இதழ் தொடர்ச்சி....

உதவிப் பூசாரி பொன்முடியை நோக்கித் தன் கையைக் கொண்டு வந்தார். பொன்முடி நடுங்கினான்.

"ஏம்ப்பா இப்படி நடுங்கறே! என்னைப் பார்த்தே இப்படி நடுங்கி வெடவெடக்கிறியே... தேவி தாயக் கட்டம் ஆடறதைப் பார்த்தா செத்தே போயிடுவே போல இருக்கே? நீ எல்லாம் எதுக்கப்பா இங்கே வரே?" என்று ஏளனமாகக் கேட்டு, பயங்கரமாகச் சிரித்தார் பூசாரி. பருத்த மொச்சைக் கொட்டைப் பல் வரிசையும், புஸ்தி மீசையும், இரத்தச் சிவப்பான கண்களும், நெற்றியில் பாதியை மறைத்த குங்குமப் பொட்டுமாக அவர் தோற்றம், காண்பவர் எவரானாலும் மனதில் கலக்கத்தை உண்டாக்குவதாகத்தான் இருந்தது. பொன்முடி பயந்ததில் வியப்பில்லை.

"அட தம்பி, நான் உன்னை ஒன்றும் பண்ணிற மாட்டேன். உன் தோளிலே தொங்குதே காமிரா, அதைக் கழற்றி அந்த மாடப் பிறையிலே வை. அதை எடுக்கத்தான் வந்தேன்," என்று கூறிய உதவிப் பூசாரி, "ரெண்டு பேரும் போலீஸ்காரய்யாவுக்குப் பின்னால உட்காருங்க. திரையை விலக்கி, பூஜையை ஆரம்பிச்சிட்டாக்கா, பூஜை முடிந்து, தேவி தாயக்கட்டையைக் கையில ஆட எடுக்கும் வரை யாரும் போகக் கூடாது," என்று எச்சரித்துவிட்டு உள்ளே நகர்ந்தார்.

பொன்முடி, காமிராவைக் கழற்றி அருகே இருந்த மாடப் பிறையில் வைத்தான். செல்வமணியும் அவனும் போலீஸ்காரருக்குப் பின்னால் அமர்ந்து கொண்டனர். போலீஸ்காருக்குச் சிறிது முன்னால் சபாபதி அவன் குடும்பத்தார் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கும் முன்னால் ஒரு திரை தொங்கிக் கொண்டிருந்தது. அது நல்ல சிவப்பு, நடுவில் ஜரிகை வேலைப்பாட்டுடன் வட்ட வடிவில் கோரைப் பற்களும், பறக்கும் கூந்தலும் கொண்ட ஒரு அரக்க முகம், அதைப் பார்த்தபோது, கிராம தேவதைகளான ஐயனார் பரிவாரங்களின் நினைப்புத்தான் தோன்றியது.

மணியடிக்கும் சத்தமும், பூசாரி மந்திரம் ஜெபிப்பதும் கேட்டன. சாம்பிராணி, சந்தன வாசனை மனதை என்னவோ பண்ணியது. சிறிது நேரமானதும், உடுக்கை அடிக்கும் சத்தம் வந்தது. எல்லோரும் மூச்சைக் கூட பலமாக விடாமல் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒருவழியாகத் திரையை விலக்கினார்கள்.

ஒரு காலை மடக்கி, ஒரு காலைப் பூமியில் ஊன்றிய தோற்றத்தில், தாடகா


சின்னபாபு

தேவி தரிசனம் தந்தாள். மிகப் பெரிய ஐயனார் சிலைக்குப் பெண் வேடமிட்டால் எப்படி இருக்குமோ, அந்த மாதிரியான தோற்றத்தில் பயங்கரமாகக் காட்சி தந்தாள் தேவி. தேவிக்கு நான்கு கைகள். மூன்று கைகளிலும் என்ன இருந்தன என்பதைப் பொன்முடியால் கண்டுபிடிக்க முடியவில்லை. செல்வமணிக்கும் அதே நிலைதான். ஒரு கை மட்டும் (வலது கரம்) அபயம் தரும் தோற்றத்தில் கீழிறங்கி இருந்தது.

"தாடகாதேவி சர்வ வல்லமை பொருந்தியவள். மலைகளை, அம்மானை ஆடுவது போல் எடுத்து வீசி ஆடும் வலிமை பெற்றவள். அதனால்தான் மூன்று கைகளிலும் மலைகள் இருக்கின்றன. நான்காவது கைதான் வேண்டியவர்களுக்கு வேண்டும் வரமளிக்கும் கருணைக்கரம். பூஜையின் முடிவில், பக்தர்களின் வேண்டுகோளுக்கு மனமிரங்கி, தேவி தாயம் ஆட இந்த அபயகரத்தைத் தாழ்த்துவாள். இரும்பு தாயக்கட்டைகளை ஆட எடுத்துக் கொள்ளுவாள். கலியுகத்தில் நடக்கும் இந்த அற்புதத்தை நீங்கள் உங்கள் கண்களால் கண்டுகளிக்கப் போகிறீர்கள்." என்று விளக்கினார் தலைமைப் பூசாரி.

சர்க்கரைப் பொங்கல், அதிரசம், பாயசம், வடை எல்லாம் படைத்தார்கள். இரண்டு திவட்டிகளைத் தவிர மற்றவை அணைக்கப்பட்டன. தேவியின் அருகில் இரண்டு பெரிய குத்துவிளக்குகள் எரிந்தன. மிகப் பெரிய வெள்ளித் தட்டை உதவிப் பூசாரி எடுத்து வந்து எல்லோரிடமும் காட்டினார். அதில் தாயக் கட்டம் வரையப்பட்டிருந்தது. இடையே இரண்டு இரும்பு தாயக் கட்டைகள் உருட்டி விளையாட!

வெள்ளித் தட்டை தாயக்கட்டையுடன் அபய கரத்திற்குக் கீழே வைத்தார்கள். உடுக்கை அடிப்பவர் "தாயம் ஆடவாம்மா" என்று நீண்ட பாடலை நிறுத்தி நிறுத்திப் பாடி உடுக்கை அடித்தார். ஒவ்வொரு "தாயம் ஆடவாம்மா" முடியும் போதும் பெரிய கற்பூரக் கட்டியை ஏற்றி அந்த அபயகரத்திற்குக் காட்டி



னார்கள்.

தேவி தன் அபயகரத்தைத் தாழ்த்தி எப்பொழுது தாயக் கட்டைகளை எடுக்கப் போகிறாள் என்பதைக் காண எல்லோரும் மூச்சை அடக்கிக் கொண்டு காத்திருந்தனர். பதினைந்தாவது முறையாக "தாயம் ஆடவாம்மா" முடிந்து கற்பூரம் காட்டியதும், நீட்டியிருந்த அபயகரம் தானாகத் தாழ்ந்தது! அடுத்த வினாடி, வெள்ளித் தட்டில் இருந்த தாயக் கட்டைகள் இரண்டும் தேவியின் கையில்!

"தேவி தாயம் ஆடும் காட்சியைக் காணும் மன வலிமை நமக்கு இல்லை. தனக்குச் செய்யப்பட்ட பூஜையால் தேவி மனமகிழ்ச்சியுடன் இருக்கிறாள். இந்த நேரத்தில், யார் யாருக்கு என்னென்ன தேவையோ அதை வேண்டிக் கொள்ளுங்கள். அவை நிறைவேற தேவி மனமிரங்கி அருளுவாள்!" என்றார் பூசாரி.

மணியடிக்கப்பட்டது. திரை மறுபடியும் இழுத்து மூடப்பட்டது. எல்லோரும் குகை வாசலுக்கு வெளியே வந்தார்கள். உட்கார்ந்து பிரசாதம் சாப்பிட்டார்கள்.

"பூஜை எப்படி இருந்தது? இப்பொழுது நம்புகிறீர்களா?" என்று பொன்முடியையும் செல்வமணியையும் விசாரித்தான் சபாபதி.

"தேவி கையைத் தாழ்த்தி தாயக்கட்டைகளை எடுத்துக் கொண்டதும் எனக்கு நடுக்கமே வந்து விட்டது" என்றான் செல்வமணி.

பொன்முடி எதுவும் பேசவில்லை. தீவட்டிகள் புடைசூழ அணியினர் காட்டு வழியில் நடக்க ஆரம்பித்தனர். பாதி தூரம் வந்திருப்பார்கள்.

"ஐயையோ, காமிராவை மாடப்பிறையிலேயே வைத்து விட்டுக் கிளம்பி வந்து விட்டேனே!" என்று பதறினான் பொன்முடி.

"அடபாவி! அது என்னுது கூட இல்லை. எங்க அண்ணனோட மேலதிகாரியின் காமெரா. அவர் இரவல் தரவே மறுத்தார். கெஞ்சிக் கூத்தாடி வாங்கி வந்தேன்.



அதைப் போய் உன்னிடம் தந்தேன் பாரு?" என்று புலம்பினான் செல்வமணி.

"இப்போ என்னடா பண்றது?"

"அந்தக் காமிரா வெளிநாட்டுக் காமிரா. விலைமிக்கது. அது இல்லாம நான் வீட்டுக்குள் நுழைய முடியாது" – பொன்முடி கீழே உட்கார்ந்து விட்டான். விஷயம் தெரிந்ததும் சபாபதி வந்தான்.

"கட்டளைக்காரர்கள் வழியில் எங்கேயும் நிற்கவும் கூடாது. திரும்பி வரவும் கூடாது. கோவிலை மூடிவிட்டால் அடுத்த அமாவாசையன்றுதான் மற்றவர்களை அனுமதிப்பார்கள். ஒரு தீவட்டியையும் எண்ணெய் புட்டியையும் வாங்கித் தரேன். பத்திரமாகப் போய் விட்டுத் திரும்பி வாருங்கள். நான் வேறு எதுவும் செய்வதற்கு இல்லை" என்று உறுதியாகக் கூறிவிட்டான் சபாபதி.

பொன்முடி தீவட்டியைப் பிடித்துக் கொள்ள, செல்வமணி எண்ணெய் புட்டியைப் பிடித்துக் கொள்ள இருவரும் அந்தக் காட்டு வழியில் உயிரைப் பணயம் வைத்து நடுக்கத்துடன் நடந்தார்கள்.

"ஏண்டா தொடைநடுங்கி, தாடகா தேவி தாயம் ஆட, கையைத் தாழ்த்தி தாயக்கட்டைகளை எடுத்துக் கொண்டது பற்றி என்னடா நினைக்கிறே?" – கேட்டது பொன்முடி.

"என்னையா தொடை நடுங்கிங்கறே? பூசாரி அருகே வந்ததுமே நீ வெடவெடவென்று நடுங்கினியேடா! எனக்கு எத்தனை அவமானமா இருந்தது தெரியுமா?" என்றான் செல்வமணி.

"சரி, நம்ம சண்டையை அப்புறம் வைச்சுப்போம். நான் கேட்டதற்கு என்ன பதில்?"

"இது நடக்கக்கூடியதுதான். ஏன் தெரியுமா? தேவியின் அபயமளிக்கும் முன்கை, முழங்கை முட்டியுடன் சேரும் இடத்தில் மெழுகு அடைத்து சேர்த்திருக்கிறார்கள். ஒவ்வொரு "தாயம் ஆடவாம்மா" முடிந்ததும் தட்டில் கற்பூரம் காட்டி அந்தத் தட்டை அந்த முழங்கைக்குக் கீழேதானே அனல்படும்படி வைத்தார்கள்? கவனிக்கவில்லை? மெழுகு இளகியதும், கை தானாகத் தாழ்ந்து விட்டது."

"நானும் இதைத்தான் எண்ணினேன்."


"அப்போ, கை தாழ்ந்து தாயக்கட்டை தானா நகர்ந்து தேவியின் உள்ளங்கைக்கு வந்ததே! அது எப்படின்னு யோசனை பண்ணினியா?"

"அபயமளிக்கும் விரிந்த உள்ளங்கையின் நடுவே சக்திமிக்க காந்தத் தகடு இருக்கிறது. அதனால்தான், கை தாழ்ந்து அருகே வந்ததும், காந்தத்தின் ஈர்ப்புத்திறன் காரணமாக தாயக் கட்டைகள் தாங்களாகவே நகர்ந்து உள்ளங்கையோடு ஒட்டிக் கொண்டன."

காலம் காலமாக நம்பப்படும் நம்பிக்கையின் இரகசியத்தை அறிவியலின் அடிப்படையில் தாங்கள் அறிந்து கொண்டு விட்ட பெருமகிழ்ச்சியுடன், காட்டு வழியின் அபாயங்களைத் துரும்பென மதித்து, பெருமிதத்துடன் இரு நண்பர்களும் நடைபோட்டனர்.

(முற்றும்)

முருங்கை



'முருங்கக்காய்' எனத் தமிழில் நாம் அழைக்கும் காய் 'சஞ்சனா' சேஜாவு என ஹிந்தியிலும், நுக்கே என கன்னடத்திலும் அழைக்கப்படுகிறது. முருங்கைக் கீரையில் வைட்டமின் A, B மற்றும் கால்சியம் நிறைந்துள்ளது. இக்கீரையின் ஒரு முழு கப் சாற்றின் சக்திக்கு இணையாக மருத்துவர்கள் 2½ கிலோ மாம்பழம், 6 ஆரஞ்சுப் பழங்கள், 80 கப் பசுவின் பால் இவற்றில் ஏதாவது ஒன்றை உட்கொள்வதால் அடையும் சக்தியைப் பெறலாம் என்கின்றனர்.

– எஸ். அஹமது அலி,
மதுக்கூர்.



அடி பட்ட நாடு!

இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானின் நிலை அவல நிலையாய் இருந்தது. பெரும்பாலான பகுதிகள் அணுகுண்டுக்கு இரையாகி விட்டன. இதன் விளைவு, இப்பொழுதும் ஜப்பானில் பிறக்கும் குழந்தைகள் குறைபாடு உள்ள குழந்தைகளாகவே பிறக்கின்றன. இருந்த போதிலும் அமெரிக்க, ருஷ்யாவின் அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ள நாடு ஜப்பான்!

இந்த விந்தை எப்படி நடந்தது?

உதாரணத்திற்கு ஒரு நிகழ்ச்சி. ஜப்பானில் ஒரு எட்டு வயதுச் சிறுவன், ஒரு நாள் கரும்பு விற்பவர் தெருவில் கரும்பு கொண்டு வந்தார். கரும்பு தின்ன ஆசைப்பட்ட சிறுவன் தாயிடம் கேட்டான். தாயும் கரும்பு வாங்க அவனிடம் மூன்று ரூபாய் தந்தார். சிறுவன் மகிழ்ச்சி பொங்கக் கரும்பு வாங்கச் சென்றான். மூன்று ரூபாய்க்கு நீளமான கரும்பு ஒன்றை வாங்கினான். வீடு திரும்பி, ஒரு கத்தியைக் கொண்டு, கரும்பின் மேல்பட்டையை கவனமாக; அழகாகச் சீவி எடுத்து வைத்துக் கொண்டான். பின்பு கரும்பைச் சிறிய துண்டுகளாக ஆக்கி, உண்டு மகிழ்ந்தான். கரும்புச் சக்கைகளை ஒரு காகிதத்தில் பத்திரப்படுத்திக் கொண்டான். முழுக் கரும்பையும் தின்ற பின், கரும்புப் பட்டைகளை எல்லாம் சேர்த்து ஒரு அழகான கூடையாக்கினான். காகிதத்தில் வைத்திருந்த எச்சில் சக்கைகளைக் கழுவி எடுத்து ஒரு உரலில் போட்டு, கூழாகும் வரை அரைத்தான். சக்கைக் கூழைக் கூடையின் மேல் மெழுகினான். இப்பொழுது அது ஓர் அழகான கூடையாகி விட்டது! கூடை நன்கு காய்ந்தபின் அதற்கு அழகாக வண்ணம் தீட்டி அதை விற்கச் சந்தைக்கு எடுத்துச் சென்றான். புதுமாதிரியாக இருந்ததால் அதை ஒருவர் ஆறு ரூபாய்க்கு விலை கொடுத்து வாங்கிக் கொண்டார். சிறுவன் ஆறு ரூபாய்க்குக் கூடையை விற்ற மகிழ்ச்சியில் வீடு திரும்பினான். கரும்பும் கிடைத்தது! பணமும் கிடைத்தது!

இதைப் போலத்தான் ஜப்பானியர்கள் ஒரு சிறு துரும்பைக் கூட வீணாக்காது, பயன்படுத்துகின்றனர். அவர்களிடத்தில் உழைப்பும் கலை உணர்வும் எல்லாவற்றையுமே நன்மைக்காகப் பயன்படுத்தும் நுண்மதியும் இருக்கும்போது, அந்த நாடு ஏன் முன்னேறாது?

— எஸ். கல்யாணி.



கனவு பலிக்கட்டும்!

ஈஸ்வரா உன்றன் திருவடியை
இதயம் வைத்தே பணிகின்றோம்.
ஈஸ்வர வருடம் முதலேனும்
எங்கள் கனவு பலிக்கட்டும்!

வறுமை அறவே ஒழியட்டும்
வளங்கள் எங்கும் நிறையட்டும்
ஒருமைப் பாட்டின் மேம்பாட்டை
உலகம் முழுக்க உணரட்டும்!

உடலின் உழைப்பும் அறிவுழைப்பும்
ஒன்றுக் கொன்று துணையாகி
கடமை என்றே உயிர்க்குலத்தை
காக்கும் திறனை வளர்க்கட்டும்!

அழிவுக் கென்றே செலவாகும்
அத்தனை பொருளும் சேமித்து -
ஆக்கப் பணிக்கே பயனாக்க
அறிஞர் கூட்டம் முனையட்டும்!

உலகுக் கெல்லாம் பண்பாட்டை
உணர்த்தும் நிலையை நம் நாடு
என்றும் பெற்றுத் திகழ்ந்திருக்க
ஏற்ற முறைகள் காணட்டும்.

ஈஸ்வரா உன்றன் திருவடியை
இதயம் வைத்துப் பணிகின்றோம்.
ஈஸ்வர வருடம் முதலேனும்
எங்கள் கனவு பலிக்கட்டும்!

- ரா. பொன்ராசன்


மாணிக்கம் தந்தவர்!

திருநின்றவூர் என்று ஓர் ஊர். அதில் ஒரு வள்ளல் வாழ்ந்து வந்தார். பெயர் காளத்தியப்பன். காளத்தியப்ப முதலியார் என்பது முழுப் பெயர்.

பசி என்று வருபவர்களுக்கெல்லாம் காளத்தியப்பரின் வீடு புகலிடமாக இருந்தது. புலவர்களுக்கு என்றால் தனிச்சிறப்பும் பரிசுகளும் இருக்கும்.

வருபவர்களுக்கெல்லாம் இப்படிக் கை வலிக்கக் கொடுத்துக் கொண்டே இருந்தால் என்னவாகும்? வள்ளல் காளத்தியப்பரின் செல்வம் கரைந்தது. வறுமையைப் பற்றிக் கூட அவர் வருந்தவில்லை. தேடி உதவி கேட்டு வருபவர்களுக்கு எதுவும் கொடுக்க இயலவில்லையே என்றுதான் காளத்தியப்பர் மனம் நொந்தார்.

உள்ளூரில் வசித்தவர்களுக்கு வேண்டுமானால் காளத்தியப்பரின் செல்வம் கரைந்து விட்ட நிலை தெரியும். மற்றவர்களுக்கு எப்படித் தெரியும்?




வெளியூரிலிருந்து வறியவர்களும், புலவர்களும் உதவி கேட்டு அவரை நாடி வந்த வண்ணம் இருந்தனர். வருபவர்களுக்கு எதுவும் கொடுக்க இனி வழியே இல்லை என்ற நிலை வந்தவுடன் காளத்தியப்பர் ஒரு முடிவுக்கு வந்தார். வருபவர்களிடம் உங்களுக்கு வழங்க என்னிடம் எதுவுமே இல்லை என்று கைவிரித்து ஏமாறச் செய்வதை விட, நாமே இவ்வூரை விட்டுப் போய் விடுவது நல்லது என்பதுதான் அந்த முடிவு.

அந்த முடிவின்படி காளத்தியப்பர் வீட்டைவிட்டு ஒருவரும் அறியாமல் இருட்டில் கிளம்பி விட்டார். ஊர் எல்லையில் ஒரு சத்திரம். இரவைக் கழிக்க அங்கே தங்கினார்.

அவருக்கு அருகே ஒரு புலவர் தங்கியிருந்தார். அவர் வெளியூரிலிருந்து காளத்தியப்பரைக் காண வந்திருந்தவர். சத்திரத்தில் இரவைக் கழித்து விட்டுக் காலையில் காளத்தியப்பரைக் காணச் செல்ல இருந்தார்.

காலையில் காளத்தியப்பரைக் கண்டதும் தான் பாட இருந்த பாடலை புலவர் வாய் விட்டுப் பாடிப் பார்த்துக் கொண்டார். அதில், தன்னுடைய வறுமைத் துன்பமெல்லாம் காளத்தியப்பரைக் கண்டு பரிசு பெற்றதும் அடியோடு ஒழிந்து விடும் என்ற கருத்தை மிக அழகாகத்



தெரிவித்திருந்தார் புலவர்.

பாடலைக் கேட்டதும் காளத்தியப்பர் மனம் உருகினார். நம்பிக்கையுடன் வந்துள்ள புலவரை ஏமாற்றக் கூடாது என்று எண்ணினார். அதனால், தனது முடிவை மாற்றிக் கொண்டு, உடனே வீடு திரும்பி வந்து புலவருக்காகக் காத்திருந்தார்.

மறுநாள் புலவர் வந்தார். காளத்தியப்பர் அவரை வரவேற்று உபசரித்தார்; பாடலைக் கேட்டு உருகிப் போனார்; அவரை இருக்கச் சொல்லிவிட்டு, பின்பக்கம் போனார். அங்கே ஒரு பாம்புப் புற்று இருந்தது. உதவி கேட்டுத் தன்னை நாடி வந்த புலவருக்குத் தன்னால் எதுவும் தர இயலவில்லையே என்று மனம் நொந்து பாம்புப் புற்றில் கையை விட்டார். பாம்பு கடித்து இறப்பதே மேல் என்ற முடிவுக்கு அவர் வந்து விட்டார்.



கொடுத்துக் கொடுத்துத் தழும்பேறிய கொடை வள்ளலின் கை இது என்பதை அறிந்து கொண்ட பாம்பு கடிக்கவில்லை! அவரது கொடைத் தன்மைக்குத் தனது காணிக்கையாக இருக்கட்டும் என்று தன்னிடம் இருந்த மாணிக்கத்தைக் கையில் கக்கியது. காளத்தியப்பர், அந்த மாணிக்கத்தைப் புலவருக்குக் கொடுத்துப் பெருமகிழ்ச்சியடைந்தார்.

வறுமையில் வாடுவோருக்கு உதவுவதை சான்றோர் கடமையாகக் கொண்டிருந்தனர். ஆனால், கொடுத்துக் கொடுத்துத் தனக்கு வறுமையை வரவழைத்துக் கொண்ட காலத்திலும் கூடத் தன்னையே அழித்துக் கொண்டு இறுதிவரை மற்றவர்களுக்கு உதவுவதை இலட்சியமாகக் கொண்ட காளத்தியப்பரைப் போன்ற உன்னதமான உள்ளம் கொண்டவர்கள் அருமையிலும் அருமை!

ஒப்புரவினால் வரும் கேடு எனின் அஃது ஒருவன்
விற்றுக்கொள் தக்கது உடைத்து (குறள் 220)






அடுத்த வீட்டில் புதிதாகக் குடி வந்திருக்கிறார்கள். அவர்களில் இரு சிறுவர், ஒரு சிறுமி.

சிறுவர் இருவரும் அச்சாக ஒரே மாதிரி இருந்தனர். தலை வாரிப் படியச் சீவுவதிலிருந்து, நடை, பாவனை, திரு திரு என்று பெரிய கண்களுடன் விழிப்பது வரை வார்ப்படமாகக் காணப்பட்டார்கள். உடைகள்கூட ஒரே மாதிரியாக அணிந்தாலும், எப்போதாவது மாற்று வண்ணங்களிலும், ஒருவன் அரை நிஜார் போட்டிருந்தால், மற்றவன் முழு நிஜாரிலும் திரிந்தனர். எதனால் அப்படி அடையாளம் காண முடியாதபடி இருக்கிறார்கள் என்று சங்கர் அவர்களிடம் கேட்டபோது, தாங்கள் இரட்டைப் பிள்ளைகள் என்று சொன்னார்கள்.

சங்கருக்கு அது புரியவில்லை. அவனுக்கு எட்டு வயதுதான் ஆகிறது. மூன்றாவது வகுப்பில் படிக்கிறான். ஆனாலும் அந்த இரட்டையரிடம் தான் புரிந்து

சைக்கிள் தரயா?



கொள்ளவில்லை என்பதாக அவன் காட்டிக் கொள்ளவில்லை.

தாயிடம் கேட்டபோது, அவர் விளக்கினார். சாதாரணமாக மனிதர்களிடையே ஒரு குழந்தைதான் பிறப்பது வழக்கம். சிலருக்கு இரண்டு குழந்தைகள் பிறப்பதும் உண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்பதாகக்கூட குழந்தைகள் பிறந்துள்ளதாக பத்திரிகைகள் தெரிவித்ததாகத் தாய் சொன்னார்.

பக்கத்து வீட்டு அந்த இரு சிறுவர்களின் பெயர் ராமன், கிருஷ்ணன் என்று சங்கர் அறிந்து கொண்டான்.

முதல் சில நாட்கள் வெகு நட்புடன் ராமனும், கிருஷ்ணனும் சங்கருடன் பழகினார். அப்படிப் பழகும்போதுகூட, அவ் இருவரில் ராமன் யார், கிருஷ்ணன் எவன் என்பதை சங்கரால் அனுமானிக்க முடியவில்லை. ஆனாலும் தன் அறியாமையை அவன் வெளிக் காட்டிக் கொள்ளாமல், வெகு எச்சரிக்கையாக அவர்களுடன் பழகினான். கூடிய மட்டும் பெயர் சொல்லி அவர்களை அழைக்காமல் இருந்தான். தவறிப் போய் எப்போதாவது ராமனைக் கிருஷ்ணன் என்று கூப்பிட்டு விட்டானானால், உண்மையை உணர்ந்ததும், ஏதோ அந்த நேரத்துக்கான காரணத்தைச் சொல்லிச் சமாளித்தான்.

சங்கரிடம் ஒரு சைக்கிள் இருக்கிறது. சின்ன ரெண்டு சக்கர சைக்கிள். சமீபத்தில் டெல்லியிலிருந்து வந்த அவனுடைய பெரியப்பா அந்த சைக்கிளை வாங்கிக் கொடுத்து விட்டுச் சென்றிருந்தார். வாங்கிய புதிதில் சைக்கிளின் பின்புற சக்கரத்துக்கு இருபுறமும் இரு சிறு ரப்பர் சக்கரங்கள் இணைக்கப்பட்டு, ஓட்டப் பழகும்போது சாய்ந்து விழுந்து விடாமல் இருப்பதற்கு ஏதுவாக இருந்தது. சுமார் ஒரு மாத காலத்தில் மிகத் திறமையாக ஓட்டக் கற்றுக் கொண்டு விட்டதால், அந்த இரு சக்கரங்களையும் சங்கர் கழற்றி வைத்து விட்டான்.

ராமனும், கிருஷ்ணனும் நல்ல சிறுவர்கள்தான். வெகு அன்புடன் அவர்கள் சங்கருடன் பழகினார்கள். தாங்கள் கற்றிருந்த பல விளையாட்டுக்களை அவனுக்குச்



சொல்லிக் கொடுத்தார்கள். அவர்களின் நட்பு சங்கருக்கு மகிழ்ச்சி தருவதாக இருந்தது.

முதலில் சில நாட்கள் சங்கரிடம் சைக்கின் கேட்க நாணம் கொண்டிருந்த அந்தச் சிறுவர்கள், பின்பு அவனைக் கேட்காமலேயே சைக்கிளை எடுத்து ஓட்டத் தொடங்கினர். இந்த மூவரின் அட்டகாசம் தாங்காத சைக்கிள் ஒருநாள் வேலை நிறுத்தம் செய்தது. அதாவது, மட்கார்டு கீழ் றங்கி, பின்பக்கச் சக்கரத்துடன் ஒட்டி உறவாடியது.

சங்கருக்கு வெகுவாக வருத்தம். இந்த இருவரில் எவரோ ஒருவரால்தான் இப்படி சைக்கிள் கெட்டு விட்டது என்பதாக அவர்கள் பேரில் கோபம்கூட வந்தது. 'கடும்புயல் மழை காட்டும், கடு நட்புப் பகை காட்டும்' என்பதாக கவி காளமேகத்தின் ஒரு வெண்பா கூறுகிறது. அதுபோல் ஆகிவிட்டது அவர்களுடைய நட்பு.

"சைக்கிளை ஏண்டா உடைச்சே?" என்று சங்கர் அந்த இரு சகோதரர்களில் ஒருவனிடம் கேட்டான். அப்படி உடைத்தது ராமனா, கிருஷ்ணனா என்பது அவனுக்குத் தெரியவில்லை.

திருவாழத்தான்

"நான் எங்கேடா உடைத்தேன்? உன் சைக்கிள் ரொம்ப லேசு. அதான் உடைஞ்சுடுத்து"

தன் சைக்கிளைக் குறை கூறியது சங்கருக்குப் பொறுக்கவில்லை. "சரி, இனிமேல் சைக்கிள் கேட்டு வராதே" என்றான் எதிரில் இருந்தவனிடம்.

"யாருக்கு வேணும் உன் சைக்கிள்?" என்று கூறி விட்டு அகன்றான், ராமனோ, கிருஷ்ணனோ, அவர்களில் அந்த ஒருவன்.

அடுத்த நாள் அந்த சகோதரர்களில் ஒருவன் வந்தான். "சங்கர், சைக்கிள் தரியா?" என்று கேட்டான்.


முந்தைய நாள் மாலையே அருகில் உள்ள சைக்கிள் ஒக்கிடும் கடையில் தன் சைக்கிளைக் கொடுத்து சரி செய்து வைத்திருந்தான் சங்கர்.

எதிரே நிற்பவனை ஏற இறங்கப் பார்த்தான் சங்கர். தன்னிடம் மனஸ்தாபம் கொண்டு சென்றவனா அல்லது மற்றவனா என்பது தெரியவில்லை. தெளிவாக மறுக்கவும் முடியவில்லை! ஏற்கவும் முடியவில்லை.

ஆகவே சொன்னான். அவனுடைய வாயிலிருந்து அறிந்தோ அறியாமலோ சொற்கள் வெளிப்பட்டன. சொல் என்பது மனதின் வெளிப்பாடுதானே!


"இதோ பார். நீ ராமனாக இருந்து உனக்கும் எனக்கும் சண்டை என்றால், உனக்கு சைக்கிள் தர முடியாது. நீ கிருஷ்ணனாக இருந்து உனக்கும் எனக்கும் சண்டை என்றாலும், உனக்கு சைக்கிள் தர முடியாது. நீ ராமனாக இருந்து, என்னுடன் சண்டை போடவில்லை என்றால், உனக்கு சைக்கிள் தருகிறேன். நீ கிருஷ்ணனாக இருந்து என்னுடன் சண்டை போடவில்லை என்றாலும் உனக்கு சைக்கிள் தருகிறேன். ஆனால் நீ ராமனாக இருந்துகொண்டு, உன்னை நீ கிருஷ்ணன் என்று சொல்லிக் கொண்டு சைக்கிள் கேட்டாயானால், கொடுக்க மாட்டேன். இல்லை, நீ கிருஷ்ணனாக இருந்து, உன்னை ராமன் என்று சொல்லிக் கொண்டு சைக்கிள் கேட்டாலும், கொடுக்க மாட்டேன்!"

வந்தவன் ஏதும் புரியாமல் விழித்தான். சற்று நேரம் சங்கரைப் பார்த்தபடி நின்றுவிட்டு, ஏதும் பேசாமல் திரும்பிச் சென்றான். சங்கர் எதிர்பார்த்ததும் அதைத்தானே?



விடை: இல்லை. முதல் கட்டத்தில் 11 ஆமைகள், 2வது கட்டத்தில் 8 ஆமைகளே!

மதியால்...!



கொடுமையான மழைக்குப் பின் வானம் அமைதி காட்டியது.

தவளைகள்... தங்கள் குரலை எழுப்பியபடியே வெளியில் வந்து நடமாடத்துவங்கின.

இவற்றின் குரலின் மூலம்... நடமாட்டத்தை உணர்ந்த பாம்பு ஒன்றும் தன் பொந்தை விட்டு வெளியே வந்தது.

தூரத்தில் நடமாடிக் கொண்டிருந்த தவளையை நோக்கி வேகமாக நகர ஆரம்பித்தது.

பாம்பின் வருகை தவளைகளுக்குத் தெரியாமல் இருக்குமா?

அதனால் அவை... தம் வேகத்தைத் தாவித் தாவிச் செல்வதின் மூலம்... ரகசியமாய் ஒளிந்து கொள்ள இடம் தேடி நழுவின.

பாவம்... ஒரு தவளையினால் மட்டும்... பாம்பின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியவில்லை. அதனால் தன் புத்திசாலித் தனத்தாலேயே, பாம்பைச் சமாளிக்கத் தீர் மானித்தது.

இதனிடையே பாம்பு தவளையை நெருங்கி விட்டது.

"பாம்பே உனக்கு நல்ல உணவாக ஆவதில் எனக்கும் விருப்பம்தான். ஆனால்..." என்று இழுத்தது புத்திசாலித் தவளை.

"ஆனால் என்ன...?"

"நான் சாதாரணத் தவளை அல்ல. என் இனம் சொறி. என் தண்ணீர் பட்டாலே சொறி வந்து விடும். ஆக என்னை முழுங் குவதின் மூலம் அந்த சொறி உனக்கும் வந்து விடும். பிறகு நீ வாழ்நாள் முழுவதும் இரை பிடிப்பதற்கு பதில் சொறிந்து கொண்டே இருக்க வேண்டி யதுதான்" – தவளை எச்சரித்தது.

"என்னிடம் பொய் விடாதே. உன்னை மாதிரிப் பல தவளைகளை முழுங்கி ஏப்பம் விட்டவன் நான். இந்த இடத்தில் சொறித் தவளை கிடைக்காமல்... ஆஸ்திரேலிய தவளையா கிடைக்கும்? ஆக நீ கூறியபடி நடந்திருந்தால் இவ்வளவு நாழி நான் சொறிந்து கொண்டேயல்லவா இருக்க வேண்டும்? அப்படிச் செய்யவில்லையே...? ஆகவே உன்னை விழுங்கப் போகிறேன்" – என்றது பாம்பு.

"விழுங்க வேண்டாம் எனக் கூற வில்லை. ஆனால் அதற்கு முன் எனக்கு ஒரு ஆசை உண்டு. அதை மட்டும் நிறை வேற்றி விடு. பிறகு உன் விருப்பம் போல் சாப்பிடு..."

"சரி.. உன் ஆசையை சொல்லித் தொலை..."

"நாம் தற்போது பேசிக் கொண்டிருக் கும் இடத்தின் அருகில் உள்ள வீட்டினர், நேற்று இரவு வீட்டுக்கு வெளியே நின்று பேசுவதைக் கேட்டேன்."

"என்ன பேசினார்கள்?"

"ஏதோ பிரிட்ஜ்ஜாம்! வாங்கியுள்ளார்

வி.ஆர். கிருத்திகா

களாம். அது இன்று காலை வந்து இறங்கியது. நானும் அதைப் பார்த்தேன். அதைத் திறந்தால் குளிர்ச்சியாக இருக்குமாம்... குளிர்ச்சிதான் நமக்குப் பிடித்த விஷயமாயிற்றே... அதனால் அதைப் பார்க்க விருப்பம். அத்துடன் அதனுள் பொந்து கிடைத்தால் அங்கேயே வாழ விருப்பம்... அந்தகைய குளிர்ச்சியான சாதனைத்தை நீயும் பார்க்க வேண்டாமா?"

"கட்டாயம் பார்க்கணும். இந்தத் திடீர் வெய்யில் திடீர் மழை கிளைமேட் எனக்கு ஒத்து வரவில்லை. அதனால் இப்படி ஒரு குளிரான இடம் கிடைக்கிறது என்றால் விடுவேனா...? நானும் ரகசியமாய் அங்கேயே தங்க முயற்சி செய்வேன்..."

"நீ இரைக்காக வெளியில் அலைய வேண்டிய அவசியமும் இல்லை. காரணம், அதனுள்ளேயே பதப்பட்ட மீன், மாமிசம் உட்பட எல்லாம் வைக்கப்பட்டிருக்குமாம்."

"பேஷ்... பேஷ்... நல்ல இடத்தைக் காட்டியதற்கு உனக்கு நன்றி... அதைப் பார்ப்பேன்... எனக்குப் பிடித்து விட்டால்... அங்கேயே தங்கிக் கொண்டு... உன்னைப் போனால் போகிறது என்று தப்ப விட்டு விடுவேன்."

"பெரிய மனிதர்கள்... பெரிய மனிதர்கள்தான்.... இந்த நல்லெண்ணம் உங்களிடம் மனம் திறந்து பேசியதால்தானே ஏற்பட்டது...? நீங்க இதுநாள் வரை இருந்த புற்றுகளில் விளக்கே இருக்காது. ஆனால் இந்தக் குளிர் அறைக்குள்ளோ என் நேரமும் விளக்கு எறிந்து கொண்டு இருக்குமாம்... மொத்தத்தில் உங்க சந்தோஷத்திற்காக என் வாழ்வை இழக்கத் தயார்..."

"நானும்... என் வாழ்நாளில் உன்னைப் போன்ற ஒரு புத்திசாலித்தனமான தவளையைக் கண்டதில்லை... ஆக அந்த வீட்டினுள் செல்லும்போது எனக்கும் ஒரு குரல் கொடு... நானும் வருகிறேன்."

"அப்படியே ஆகட்டும்..." என்ற தவளை அப்போதைக்கு நிம்மதிப் பெருமூச்சு விட்டது. அதே சமயம் அதன் மனம், இந்த முட்டாள் பாம்பை... தந்திரமாகக் கொன்று விட வேண்டும் எனவும் முடிவு செய்தது...! அருகில் கிடைத்த சிறு புழுக்களை பிடித்துத் தின்றபடியே



யோசிக்க ஆரம்பித்தது...!

அந்த வீட்டின் வாசற்கதவு திறந்திருந்தது...! நடமாட்டமும் குறைவாக இருந்தது.

இதுதான் சந்தர்ப்பம் என்று தவளை... பாம்புக்குக் குரல் கொடுத்து விட்டு... வீட்டினுள் தாவித் தாவிச் சென்றது.

உடனே பின்தொடர்ந்து பாம்பும்... சர்...சர்... என ஊர்ந்து வந்தது.

முதல் அறையிலேயே பிரிட்ஜ் இருந்தது. அதைத் திறக்கும் போது பார்க்க வசதியாகவும், மறைந்து கொள்ள வசதியாகவும் எதிரில் சற்றுத் தூரத்தில் ஸ்கூட்டர் நிறுத்தப்பட்டிருந்தது.

தவளை, ஸ்கூட்டர் அருகில் சென்று... ரகசியமாய் ஒரு இடத்தில் பதுங்கியபடி நின்று, பிரிட்ஜையே எப்போது திறப்பார்கள் என ஆவலாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது.

பாம்பும் ஸ்கூட்டரின் அருகில் வந்து, மறைவான இடத்தில் ஒளிந்து பிரிட்ஜையே பார்த்துக் கொண்டிருந்தது.

சற்று நேரத்தில் அந்த வீட்டு அம்மா வந்து... பிரிட்ஜை நன்றாகத் திறந்து வைத்துக் கொண்டு... அதனுள் வைக்கப்பட்டிருந்த தயிர்... மோரை எடுத்தபடி, 'எல்லாரும் சாப்பிட வாங்க' எனக் குரல் கொடுத்தாள்.

அதே சமயம்... தவளை பாம்பிடம் கிசுகிசுத்தது, "உள்ளே பார்த்தாயா? திறக்கும்போதே "குளுகுளு"வெனக் காற்று வீசுகிறது. உள்ளே எந்நேரமும் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது.... அத்துடன் உனக்கு சாப்பிட்டுப் பொழுதுபோக்க... ஏராளமான பதார்த்தங்களும் வைக்கப்பட்டுள்ளன...!"

"நீ கூறியது ரொம்ப சரி. இனி இந்த பிரிட்ஜ்தான் என் வீடு... ஆனால் அதனுள் எப்படி நுழைவது? நீதான் யோசனை வழங்க வேண்டும்..."

"நான் இப்போதைக்கு பாத்ரூமில் ஒளிந்து கொள்கிறேன்... நீயும் வந்து விடு... நடமாட்டம் குறைந்து இரவு.. அனைவரும் தூங்கும்போது, இந்த பிரிட்ஜின் வெளி அடிப்பகுதியில் ஒரு செவ்வகமான இடைவெளி தெரிகிறதே... அதனுள் சென்று முதலில் ஒளிந்து கொள். பிறகு மறு சந்தர்ப்பம் கிடைக்கும்போது, பிரிட்ஜ் கதவை உன் பலம் கொண்ட மட்டும் நைசாகத் தள்ளி உள்ளே நுழைந்து விடு."

"அருமையான யோசனை. அப்படியே செய்கிறேன். தற்போது இருவரும் பாத்ரூம்



செல்லலாம் வா..."

அடுத்த நிமிடம் தவளை தாவித் தாவிச் சற்றுத் தூரத்தில் இருந்த பாத்ரூமை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

பாம்பும் பின்தொடர்ந்தது.

தவளை... பாத்ரூமுக்குள் சென்று விட்டது.

ஆனால் பாம்பு நுழையும் முன்... சமையலறையில் இருந்த வீட்டு அம்மா யதேச்சையாகத் திரும்ப... மறு விநாடி... பாம்பைப் பார்த்துவிட்டு... "பாம்பு... பாம்பு..." என்று கத்தினார்."

"எங்கே..? எங்கே..?" எனக் கேட்டபடியே அருகில் இருந்த அறைகளிலிருந்து ஆண்கள் ஓடி வந்தனர்.


இதற்குள் பாம்பு பாத்ரூமுக்குள் நுழைந்து அங்கிருந்த தண்ணீர் நிரம்பியிருந்த டிரம்மின் பின்னால் போய்ப் பதுங்கிக் கொண்டது. அதன் உடம்பெல்லாம் நடுங்கியது. "இந்த மோசக்காரத் தவளையின் பேச்சைக் கேட்டுக் கொண்டு வீட்டினுள் நுழைந்தது தவறோ..." என எண்ணி வருந்தியது.

அதே சமயம் வெளியே வந்த ஆண்கள், பாத்ரூம் கதவை வெளிப்பக்கம் மூடித் தாளிட்டனர். பிறகு தீயணைப்புப் படையினருக்குப் போன் செய்தனர். உடனே அவர்கள் வந்தனர். தீயணைப்பு சாதனத்திற்குள் ஒரு கலவை உண்டு. அந்தக் கலவையை இயக்க... தீயணைப்பின் மீது உள்ள பட்டனை அழுத்தினால் போதும்... உடனே அவை இணைந்து நுரையாக வெளியே வரும். அந்த வாசனை பாம்புக்கு அலர்ஜி... அதனால் நடமாட முடியாமல் மயங்கி... நிலைகுலைந்து நிற்கும். உடனே அடித்துக் கொன்று விடுவார்கள்.

பாத்ரூமைத் திறந்து வைத்துக் கொண்டு பாம்பு இருந்த இடத்தில் அந்த நுரையைப் பீய்ச்சினர். அதன் நெடி தாங்க முடியாமல் வெளியே வந்த பாம்பை தயாராகக் கையில் வைத்திருந்த கம்பினால் அடித்துக் கொன்றனர்.

இவ்வளவையும் கதவின் பின்னால் பதுங்கியிருந்த தவளை பார்த்து நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

ஆட்டின் புலம்பல்!



சின்னப் பாப்பா! என் கதையை
சற்றே நீயும் கேட்டிடுவாய்!
அன்பை நம்பி இறுதியிலே
அழுது புலம்பும் ஆடானேன்!

காலையில் சென்று மேய்ந்திடுவேன்!
காவிரி நீரைக் குடித்திடுவேன்!
மாலையில் வீடு திரும்பிடுவேன்
மறந்தும் வேறிடம் நான்
செல்லேன்!

வளர்த்த நன்றி மறக்கவில்லை
வயலுக்கு உரத்தை
அளித்துவந்தேன்!
நலத்தைக் கொடுக்கும் சத்துள்ள
நல்ல பாலைக் கொடுத்து
வந்தேன்!

என்னைச் சற்றும் இரக்கமின்றி
இறைச்சிக் காக கொல்வதுவும்
மண்ணில் நீதி ஆகிடுமோ?
மாந்தரின் அன்பே பொய்தானோ?

— புலேந்திரன்



மாம்பழம்!

ஒரு பணக்காரனுக்கு அபூர்வமான ருசியையுடைய இரண்டு மாம்பழங்கள் கிடைத்தன. அதேசமயம் அவனுடைய நண்பனும் வந்திருந்தான்..

செல்வந்தர் வீட்டினுள் சென்று சமையல்காரனிடம் மாம்பழங்களைக் கொடுத்து, "சீவி துண்டு போட்டு வை. நண்பருடன் சாப்பிடும்போது பரிமாறு" என்று சொல்லிச் சென்றார்.

சமையல்காரன் தோல்சீவி துண்டமிட்டான். கொட்டையில் ஒட்டியிருந்ததைச் சாப்பிட்டான். அதன் ருசி............ அப்பப்பா...........!

"ஒரு துண்டு சாப்பிட்டால் தப்பில்லை" என ஒரு துண்டு சாப்பிட்டான். அப்புறம் ஒன்று, ஒன்று என்று சபலப்பட்டு பூராவையும் தின்று தீர்த்து விட்டான்!

அந்தச் சமயம் செல்வந்தர் வந்து "பழம் நறுக்கியாயிற்றா?" என்று கேட்டார்.

"கத்தி மழுங்கிப் போயிருக்கிறது" என்று பதில் சொன்னான் சமையலாள்.

கத்தியை வாங்கிக் கொண்டு போய் புறக்கடையிலுள்ள கல்லில் மணல் போட்டுத் தீட்டினார் செல்வந்தர்.

சமையல்காரன் முன்னறைக்குச் சென்று, காத்திருக்கும் நண்பரிடம் "ஐயா, தங்கள் மேல் பரிதாபப்பட்டு ஒரு உண்மையைச் சொல்கிறேன். இன்று தங்களுக்கு விருந்திட்டு, உறங்க வைத்து உங்கள் காதுகளிரண்டையும் அறுத்து விடுவதாக எங்கள் முதலாளி திட்டமிட்டிருக்கிறார்" என்றான்.

"என் காதுகளையா? எதற்கு?". திகைத்தான் நண்பன்.

"அவரது குழந்தைக்கு அடிக்கடி வலிப்பு வருகிறது. அதற்கு மனிதனின் காதுகளை வேகவைத்த நீரைப் புகட்டினால் குணமாகும் என்று சொல்லி இருக்கிறார் மருத்துவர். நீங்கள் நன்கு தூங்க தயிர் சாதத்தில் மயக்க மருந்து கலந்திருக்கிறோம். உங்களுக்கு என் வார்த்தையில் சந்தேகமிருந்தால் உங்கள் நண்பர் புறக்கடையில் கத்தி தீட்டுவதைப் பாருங்கள்" என்று ஜன்னல் வழியே காட்டினான்.

ஆராயாத நண்பன், தப்பினால் போதுமென்று ஓடினான்.

சமையல்காரன் எஜமானனிடம் சென்று, "சீவுவதற்காக இரண்டு மாம்பழங்களையும் எடுத்தேன். ஒன்றைக் கடித்து ருசி பார்த்தவர் இன்னொன்றையும் தூக்கிக் கொண்டு ஓடுகிறாரே" என்று அப்பாவி போல் சொன்னான்.

செல்வந்தர் வெளியே வந்து பார்த்த போது நண்பன் ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். சமையல்காரன் சொல்வதை நிஜமென்று நினைத்து பின்னாலேயே "ஒன்று மட்டுமாவது கொடு... நீயே இப்படிப் பண்ணினால் எப்படி?" என்று கத்திக் கொண்டே துரத்தினார்.

"ஒரு காதையாவது கொடு; நண்பனே உதவாமல் ஓடிப்போனால் எவர் முன் வருவர்"? என்பதாக அதை அர்த்தம் பண்ணிக்கொண்டு, காற்றைப்போல் விரைந்து மறைந்தான் நண்பன்.

சமையல்காரனோ விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தான்.

— ஆர். பொன்னம்மாள்

கேட்கட்டுமா டாக்டர்?

● பி. மீனாட்சி, மன்னார்குடி.

? காம்ப்ளான், ஹார்லிக்ஸ் போன்றவற்றை அப்படியே சாப்பிடுவதால் பயன் உண்டா? மேலும் இவற்றைச் சாப்பிடுவதால் விளம்பரங்களில் கூறப்படுவதைப் போல நம் உடலுக்கு சக்தி கிடைக்கிறதா?

! காம்ப்ளான், ஹார்லிக்ஸ் போன்றவை சத்து பானங்களே! அவற்றை அப்படியே சாப்பிட்டால் பயன் கிடைப்பது உண்மைதான். இவற்றையே பாலில் கலந்து சாப்பிட்டால் கூடுதல் பலன் கிட்டும். மேலும் இம்மாதிரியான பானங்களை அருந்துவதால் நம் உடலுக்கு சக்தியும் வலிமையும் கிடைப்பதும் உண்மையே; ஆனாலும்பல விளம்பரங்கள் உண்மையை மிகைப்படுத்துவதுண்டு.

● கோ. மதிவாணன், புத்திராம்பட்டு.

? நாம் உட்கொள்ளும் உணவில் உப்புச்சத்து எவ்வளவு இருக்க வேண்டும்?

மூளையை மாற்ற முடியுமா?



! இது வயதுக்கு வயது, உடம்பின் எடைக்கு ஏற்ப வேறுபடும். என்றாலும் ஒரு சராசரியாக நம் தினசரி உணவில் 2 கிராம் உப்பு சேர்த்துக் கொள்ளலாம். இது ஒரு தேக்கரண்டி அளவுக்கு சமம்.

● இரா. அருண்மொழி, விழுப்புரம்.

? துருப்பிடித்த கம்பிகளால் காயம் ஏற்பட்டால் அது பல நாட்களுக்கு ஆறாமல் சீழ்பிடித்துத் தொல்லை கொடுப்பது ஏன்? இக்காயங்களுக்கு எந்த மருந்தைப் பயன்படுத்தினால் நல்லது, டாக்டர்?

! துருப்பிடித்த கம்பிகளில் 'டெட்டனஸ்' கிருமிகள் இருக்க வாய்ப்புண்டு. இவை சீழ்பிடித்த புண்களில் நன்கு வளர்ச்சி பெறும். ஆகவே தான் இந்தப் புண்கள் சீக்கிரம் ஆறுவதில்லை. என்றாலும், காயம்பட்டவுடனேயே அதை நன்றாகக் கழுவி சுத்தம் செய்து 'போவிடின் அயோடின்' (POVIDINE IODINE) என்ற மருந்தைத் தடவி கட்டுப் போட்டு விட்டால் காயம் விரைவில் ஆறிவிடும். அத்துடன் காயம் பட்ட தினமே 'டெட்டனஸ் டாக்சாய்டு' (TETANUS TOXOID) என்ற தடுப்பூசியைப் போட்டுக் கொள்ள வேண்டியது முக்கியம். காயம் பெரிதாக இருந்தால் மருத்துவர் யோசனைப்படி தகுந்த நுண்ணுயிர்க் கொல்லி (ANTIBIOTIC) மருந்துகளையும் உட்கொள்ள வேண்டும். அப்போதுதான் இம்மாதிரியான காயங்கள் சீக்கிரத்தில் குணமாகும்.

● வி. கௌரி, சீர்காழி.

? மனிதனின் மூளையை மாற்ற முடியுமா?

! இப்போதைக்கு 'முடியாது'

என்பதுதான் உன் கேள்விக்குப் பதில். மூளை மாற்று அறுவை சிகிச்சை விலங்குகளிடத்தில் செயல்முறையில் உள்ளது. இப்போது இது ஆராய்ச்சி நிலையில் உள்ளதால், இதன் முடிவுகள் தெரிய வருடங்கள் பல ஆகலாம்.

● **என். ராஜலட்சுமி,**
மேலப்பாதி.

? கண் மாற்று அறுவை சிகிச்சையின் போது ஒருவரது இடது கண்ணை எடுத்து அடுத்தவரின் வலது கண்ணில் பொருத்தலாமா?

! கண் மாற்று அறுவை சிகிச்சையின் போது, இறந்தவரின் கண்ணை அப்படியே முழுவதுமாக எடுத்து, அடுத்தவருக்குப் பொருத்துவதில்லை. கண்ணில் உள்ள 'கார்னியா' (CORNEA) என்ற கருப்புநிற வட்டப் பகுதியை மட்டுமே பொருத்துவார்கள். ஆகையால் இடதுகண்ணின் கார்னியாவை வலது கண்ணுக்கும் பொருத்தலாம்; இடது கண்ணுக்கும் பொருத்தலாம். இது போல் வலது கண்ணின் கார்னியாவை எந்தக் கண்ணுக்கும் பொருத்தலாம்.

● **பார்கவி, ஏ.**
கலையம்பத்தூர்.

? ஒரு நாளில் எத்தனை மணி நேரம் படிக்கலாம்?

! ஒருநாளில் நமக்கு 8 மணி நேரம் ஓய்வு - அதாவது தூக்கம் தேவை. மற்ற நேரங்களில் எல்லாம் படிக்கலாம்! அதற்காகப் படிப்பே கதி என்று இருந்து விடக் கூடாது. விளையாட்டு, பொழுது போக்கு, நூலகம் செல்வது போன்ற பல பயனுள்ள செயல்களுக்கும் நீங்கள் நேரம் செலவிட வேண்டும். அப்போதுதான் மற்ற நேரங்களில் நீங்கள் படிக்கும் பாடங்கள் மனத்தில் நன்றாகப் பதியும்.

● **எஸ். நாகராஜன்,**
மேலப்பாதி.



? காது, பல் இவைகளை சுத்தம் செய்து கொள்வதைப் போல, கண்களையும் அடிக்கடி சுத்தம் செய்து கொள்ளலாமா? அதனால் ஏதாவது ஆபத்தா?

! கண்களை அடிக்கடி சுத்தப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அது இயற்கையாகவே தன்னைத் தானே சுத்தப்படுத்திக் கொள்ளும் திறனுடையது. கண்களில் கண்ணீர் சுரப்பது அதற்குத்தான். காலை, மதியம், இரவு மூன்று வேளைகளில் மட்டும் கண்களை சுத்தப்படுத்தலாம். அடிக்கடி கண்களை சுத்தப்படுத்தினால், தண்ணீரில் உள்ள கிருமிகள் கண்ணில் அழற்சியை உண்டாக்கி விடும். இதன் விளைவாக கண்கள் சிவந்து, எரிச்சல் ஏற்படும்.

● **எம். செந்தில்குமார்,**
சந்தை புதுப்பாளையம்.

? மனித வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைச் சத்துக்கள் என்னென்ன?

! மாவுச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச்சத்து, வைட்டமின்கள், மற்றும் தாதுச்சத்துக்கள்.

● **வை. சண்முகவேல்,**
விழுப்புரம்.

? சர்க்கரை நோய் குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு தான் வருமா?

! இல்லை. பிறக்கும் குழந்தையிலிருந்து குடுகுடு கிழவி அல்லது கிழவனார் வரை எந்த வயதினருக்கும் சர்க்கரை நோய் வரலாம்.

● **ஜி. ஜி. கிருஷ்ணன்,**
விசலூர்.

? அருகம்புல் ஜூஸ் சாப்பிடுவது உடலுக்கு நல்லதா, டாக்டர்?

! நல்லதுதான்.

டாக்டர்.
கு. கணேசன்

வழி தவறு..!

அழகனுக்கு நம்பவே முடியவில்லை. அது யார்? தன் தாயா? இல்லையே! அம்மா இறந்து இரண்டு வருடங்களாகி விட்டதே! கண்களை நன்றாகக் கசக்கிவிட்டுப் பார்த்தான்.

"அழகா... பயப்படாதே! நான்தான் தர்மதேவதை. உனக்கு ஒருவரும் இல்லைதான். உன் தாத்தா எங்கே இருக்கிறார் தெரியுமா?" என்று கேட்டார் தர்மதேவதை.

"ஓ... தெரியும் தாயே! என் தாத்தா முதுகுளத்தூரில் இருக்கிறார்..." என்றான், அழகன்.

"முதுகுளத்தூரில்தானே இருக்கிறார்? இந்தா... இதில் விலைமதிக்க முடியாத பொருள் ஒன்று இருக்கு. இதை, உன் தாத்தாவிடம் ஒப்படைப்பது, உன் பொறுப்பு. உன் தாத்தா இருக்கும் ஊருக்கு, நீ நடந்தேதான் செல்ல வேண்டும். உன் வழிச் செலவுக்கு, இந்தப் பையில் தனியாகப் பணம் இருக்கு. நீ நடந்து போக ஒரு மாதம் கூட ஆகலாம். இந்தச் சுவடியில், போகும் பாதையைக் குறித்திருக்கிறேன். இதில் குறித்திருக்கும் பாதையை நீ மாறிவிட்டால், கஷ்டமான பாதையில் பயணிக்க நேரிடும். ஜாக்கிரதை..." என்று சொல்லி எச்சரித்து விட்டு மறைந்தாள், தர்மதேவதை.

அழகனும், தாத்தா உள்ள முதுகுளத்தூரரை நோக்கி நடக்கலானான். முதல் நாள் பயணம் தர்மதேவதை சொன்னது போல் உற்சாகமாகவே கழிந்தது. ஓரிடத்தில் ஓய்வெடுத்தான். அங்கு, சிறுவர்கள் சிலர், கோலி விளையாடிக் கொண்டிருந்தனர்.

தர்மதேவதை, தாத்தாவுக்குக் கொடுத்த பொக்கிஷத்தையும், ஊருக்குப் போவதற்காகக் குறித்துத் தந்த காகிதத்தையும் கீழே வைத்து



அருப்புக்கோட்டை செல்வம்

விட்டு, அவர்களோடு சேர்ந்து விளையாட ஆரம்பித்தான் அழகன்.

வெகுநேரம் விளையாடி விட்டுத் திரும்ப வந்தான் அவன். கீழே வைத்திருந்த காகிதம், காற்றில் எங்கேயோ பறந்து போய விட்டிருந்தது!


அழகனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. "ஆனால்... இந்தப் பொக்கிஷத்தைத் தாத்தாவிடம் ஒப்படைக்க வேண்டுமே! இந்தப் பக்கம்தானே போக வேண்டும்? என்று ஒரு யூகமாய் நடக்க ஆரம்பித்தான்.

ஓரளவு சரியான பாதையில் நடந்தாலும் மனத்தில் திகிலுடனேயே நடந்தான். 'பாதை மாறினால் கஷ்டமான பாதையில் பயணம் செய்ய நேரிடும்' என்று தர்மதேவதை எச்சரித்தானே! பயந்து கொண்டே நடந்தான்.

பாதை ஓர் இடத்தில் பிரிந்தது.







"உன் பையனை கண்டிச்சு வை..."
"ஏன்... என்ன பண்ணினான்?"
"அவன் கடிச்சு என் பையனுக்கு மலேரியா வந்துடுச்சு..."

— சி. சங்கர்

அழகனுக்கு எந்தப் பக்கம் போவதென்று புரியவில்லை. குருட்டாம்போக்கில் ஏதோ ஒரு பாதையில் நடக்க ஆரம்பித்தான். ஆனால்... நிச்சயமாக அவன் பாதையை மாறி விட்டான்.

அவனால் மேற்கொண்டு நடக்க முடியவில்லை. பாதையெங்கும் ஒரே முட்கள். பயமுறுத்தும் சிறு சிறு விஷப்பூச்சிகள்.

பயம், அவன் மனதைக் கவ்விப் பிடிக்க ஆரம்பித்தது. கைச்செலவுக்கு தர்மதேவதை தந்த பணம் காலியாகிப் போனது. இன்னும் தாத்தாவின் ஊர் வரவில்லை. அழகனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

உணவும் இல்லாமல், ஓய்வும் இல்லாமல், களைத்துத் தடுமாறிக் கீழே விழுந்தான். தர்மதேவதை அவன் முன் தோன்றி, அவனை எழுப்பினாள்.

"அழகா... கலங்காதே! நான் இருக்கிறேன்..."

"அம்மா... நீங்கள் கொடுத்த வேலையை நான் முழுவதுமாகச் செய்து முடிக்கவில்லை. என்னை மன்னித்து விடுங்கள்..." என்று கலங்கி அழுதான், அழகன்.

"ஏன் முடியவில்லை...?" தர்மதேவதை கேட்டாள்.

"நான் பாதை மாறி விட்டேன் அம்மா..."- அழுதுகொண்டே சொன்னான் அழகன்.

"பாதை தவறிய கால்கள். சரியான இடம் போவதில்லை என்பது உனக்குத் தெரியாதா...? பாதை மாறியமைக்குக் காரணம் உனது கவனக்குறைவுதானே? உன்னிடம் நான் கொடுத்தது அரிய பொக்கிஷம். உன் பயணத்திற்குத் தேவையான பணம் கொடுத்தேன். நீ போக வேண்டியது, உன் தாத்தா இருக்கும் முதுகுளத்தூர். உன் அஜாக்கிரதையால் வழிக் குறிப்பைத் தவற விட்டு விட்டு துன்பம் அனுபவிக்கிறாய். அது போல்தான்... சிறு வயதில் ஒவ்வொருவருக்கும் நற்பண்புகள், நன்னெறிகள் போன்ற பல செல்வங்களை ஆண்டவன் கொடுத்து அனுப்புகிறான். அதைக் கவனிக்காமல் அஜாக்கிரதையாக இழந்து விட்டு, முதுமை என்ற ஊருக்குப் போய்ச் சேரும் போது, இன்பம், மகிழ்ச்சி எதுவுமே இல்லாமல் தடுமாறுகிறீர்கள்..." என்று கூறிவிட்டு மறைந்தாள், தர்மதேவதை.

தூக்கத்தில் இருந்து 'படக்'கென்று விழித்தான், அழகன். அனைத்தும் கனவு. கனவில் நடந்த அனைத்துமே அவனுக்கு நினைவில் இருந்தது.

'ஆம்... தர்மதேவதை சொன்னது சரிதான். ஆண்டவன், நமக்கு எல்லாவற்றையுமே கொடுத்திருக்கிறார். நாம்தான், அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதில்லை. இப்போதே, நாம் நல்ல முறையில் வாழக் கற்றுக் கொண்டால், முதுமையில் நிம்மதியாய் இருக்கலாமே?' என்று, தனக்குள் நினைத்துக் கொண்டான், அழகன்.


நேற்று வரை அவனிடம் இருந்த சிறு சிறு தவறான பழக்கவழக்கங்கள் அன்றோடு மாறி விட்டன!

எட்டு நாடுகள் ஏக காலத்தில் எதிர்த்து வந்தாலும் கடுகளவும் கலக்கம் காட்டாத மன்னன், மகாவஜ்ரநந்தி தன் ஒரே மகள் அதிருபசுந்தரி நோய்ப் படுக்

வெற்றியின் இரகசியம்!

கையில் விழுந்ததும் ஒரேயடியாகக் கலங்கி விட்டார். நிறைந்த அனுபவசாலியான வைத்தியர், தயங்கித் தயங்கி இந்தச் செய்தியைச் சொன்னார்.

ராஜகுமாரியின் உயிர், எண்ணெய் தீர்ந்த தீபம் போல மெல்ல மெல்ல ஒடுங்கி வருகிறதாம்! யாராவது ஒருவர் மகாலிங்க மலையின் உச்சிக்குச் சென்று மூன்று நாட்களுக்குள் அமிர்த சஞ்சீவினி மூலிகையைக் கொண்டு வந்தால் மட்டுமே எமன் வாயிலிருந்து இளவரசியை மீட்க முடியுமாம்.



பேரா.க. இராமச்சந்திரன்

அந்தக் காலத்தில் போர்க்களத்தில் ராம லட்சுமணர்கள் மயங்கி விழ, அனுமார் சஞ்சீவி மலையையே தூக்கி வந்து அவர்களைக் காப்பாற்றியதாகக் கதை. இப்போது அந்த அமிர்த சஞ்சீவியை யார் கொண்டு வருவது?

மகாராணியின் அண்ணன் மகன் வேங்கை மாறனும், அரசனின் தங்கை மகன் அருளானந்தனும் எப்படியும் குறித்த காலத்துக்குள் அந்த மூலிகையைக் கொண்டு வருவதாகச் சபதமிட்டனர். வைத்தியரிடம் அந்த மூலிகையின் அடையாளங்களைத் தெரிந்து கொண்டு பறந்தனர்.

ஒருநாள் ஊர்ந்து நகர்ந்தது. மறுநாளும் பையப் பையக்

கரைந்து கொண்டிருந்தது.

இளவரசியின் கையைப் பிடித்துப் பார்த்த வைத்தியர் மெதுவாக நாடி ஒடுங்கி வருவதை இரகசியமாக அமைச்சரிடம் சொன்னார்.

'இன்னும் அறுபது நாழிகைக்குள் - எவராவது அந்த அமிர்த சஞ்சீவினியைக் கொண்டு வராவிட்டால்...' என்று வைத்தியர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அரண்மனை வாசலில் பரபரப்புச் சத்தம்!

அங்கே, நினைவற்ற நிலையில் வேங்கை மார்பன் அரண்மனை முன்னரங்கத்தில் கிடத்தப்பட்டிருந்தான்.

அரசனைத் தொடர்ந்து ஓடி வந்த அரண்மனை வைத்தியர் அவனைப் புரட்டிப் புரட்டிப் பார்த்ததும் மூலிகை அகப்படவில்லை. மருந்து கொண்டு வரப் போனவனுக்கே மருந்தும் சிகிச்சையும் தேவைப்பட்டதை அரசன் உணர்ந்தான். ஏறத்தாழ இரண்டரை நாழிகை அவனுக்குத் தீவிர சிகிச்சை கொடுத்தபின் பைய அவன் மயக்கம் தெளிந்து - தான் பட்ட அவஸ்தைகளைத் திக்கித் திணறிச் சொன்னான்.

மலையின் வடக்குப் பக்கம் கொஞ்சம் அதிகச் சரிவாகவும் ஏறுவதற்கு வாய்ப்பாகவும் தோன்றியதாம். இவன் முதலில் அந்தப் பகுதியில் சிறிது தூரம் ஏறினானாம். மலையில் விறகு பொறுக்கப் போபவர்கள் இந்தப் பகுதியைவிட வேறொரு பகுதி, மேலே ஏறிச் செல்ல வசதியாக இருக்கும் என்று சொல்ல, ஏறிய வழியே இறங்கி, அவர்கள் குறிப்பிட்ட இடத்திலிருந்து மறுபடி ஏறத் தொடங்கினானாம்.

பாதி மலைக்கு மேலே, கட்டி வைத்த சுவர் போல நட்டுக்குத்தலாக மலை இருக்க, அதிலிருந்து இரண்டு காத தூரம் கூட மேலே போக முடியாமல் இறங்கி விட்டானாம். மறுபடி இன்னுமொரு பாதை வழியாக மேலே போனானாம். இந்தப் பாதை சற்றுச் சரிவாக இருந்தாலும் அடி வைத்த இடத்தில் எல்லாம் பொடிக் கற்கள் இருந்து காலைப் பொத்துவிட, அப்படியே மூர்ச்சையாகி நடு மலையிலேயே விழுந்து விட்டானாம்!

அந்தப் பக்கம் வந்த மலைப்பளியர்கள் இவனை அடிவாரத்துக்குச் சுமந்து வந்து ஆசுவாசப்படுத்தி, மூர்ச்சை தெளிந்த பின் இந்த அரண்மனைக்குக் கொண்டு வந்தார்களாம்!

இதைக் கேட்டுக் கொண்டிருக்குமளவு அரசருக்குப் பொறுமை இருக்கவில்லை. "உன்னோடு வந்தானே அருளானந்தன், அவன் எங்கே?" என்று பரபரத்தார்.

"நானாவது மலையின் பாதி தூரம் ஏறினேன். அவனால் கால்வாசித் தூரம்கூட ஏறி இருக்க முடியாது. அவன் இன்னும் கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்து விடுவான். அல்லது மலையின் அவன் ஏறின தெற்குப் பகுதியில் எங்காவது விழுந்து கிடப்பான்" என்றான் வேங்கை மார்பன்.



அரசருக்குத் தன் மகளை மரண தேவனிடமிருந்து மீட்க முடியும் என்னும் நம்பிக்கை போய் விட்டது. தன் மகளுக்காக, அநியாயமாய்த் தன் தங்கை மகனையும் பறிகொடுத்து விட்டோமே என்னும் வேதனை அவர் நெஞ்சை நெருப்பாக்கியது. மிக மிகக் கலங்கினார். நேராக பூஜையறைக்குப் போய்ப் பணிந்து விழுந்தார்.

வேங்கை மார்பன் ஏறத்தாழ அரை யானைப் பலம் உள்ளவன். இவனாலேயே அந்த மலையின் உச்சிக்கு ஏற முடியவில்லை என்றால், அந்த அப்பாவி அருளானந்தனால் மட்டும் எப்படி ஏற முடியும்...?

"போச்சு, எல்லாமே போச்சு. என் வம்சமே வேரும், வேரடி மண்ணும் இல்லாமல் அழிஞ்சு போச்சு" என்று சொல்லிக் கொண்டே மயக்கமாகி விட்டார் மன்னர்.

சுய நினைவு வந்து எழுந்தபோது தன் தலைமாட்டில் ராணியும் எதிரே அருளானந்தனும் பக்கத்திலேயே அரண்மனை வைத்தியரும் இருப்பதைப் பார்த்தார் மன்னர்.

"மீண்டு வந்து விட்டாயா ஆனந்தா? என்று மன்னர் கனிந்த குரலில் கேட்டார்."

'தம்பி மீண்டு வந்தது மட்டுமல்ல. இளவரசியை மரணத்தின் பிடியிலிருந்து மீட்டும் ஆயிற்று மன்னா" என்றார் வைத்தியர். மன்னரின் மயக்கம், சோர்வு எல்லாம் பஞ்சாய்ப் பறந்தன! துள்ளி எழுந்தார்.

"வாருங்கள் அப்பா" என்று அகமும் முகமும் மலர வரவேற்றாள் அரசகுமாரி. பழைய களைப்பு கொஞ்சம் இருந்தாலும் மரணப் பிடியிலிருந்து அவள் மீட்டு ...



விட்ட தெளிவு துல்லியமாகத் தெரிந்தது.

"இது எப்படி சாத்தியமாயிற்று?" என்று மன்னர் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த போதே அந்த இடத்துக்கு அரசியும் வைத் தியரும் வந்தனர். அவர்கள் கூடவே அமைச்சரும் அருளானந்தனும்.

''உடல் வலிமை மிக்க வேங்கை மார்பனால் முடிக்க முடியாது திரும்பி விட்ட இந்த அரிய செயலை உன்னால் மட்டும் எப்படிச் செயய முடிந்தது! என் னால் இதை நம்பமுடியவில்லையே!'' என்று கேட்டார் அரசியார்.

''உன்னால் மட்டும் எப்படி உச்சி மலைக்கு ஏற முடிந்தது?'' என்று ஆச்சர யத்தோடு கேட்டார் அரசரும்.


அருளானந்தன் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. இலேசாகப் புன்னகைத்தான்.

அருகிலிருந்த அமைச்சர்தான், பதி லளித்தார். ''வேங்கை மார்பனுக்கு இல்லாத மதி நுட்பமும், செயல் திட்பமும் அருளானந்தனுக்கு இருந்தது. அதனால் தான் இவனால் அமிர்த சஞ்சீவினியைக் கொண்டு வர முடிந்தது'' என்றார்.

அரசருக்குப் புரியவில்லை. அதனால் அமைச்சர் விளக்கினார்.

"வேங்கை மார்பன் எந்த வழியாகப் போனால் உச்சி மலைக்கு விரைவாகப் போகலாம் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளாமல், ஒவ்வொரு பாதையாக ஏறி இறங்கிக் களைத்துச் சோர்ந்தான். அருளானந்தனோ, எந்தப் பாதையில் போவது என்பதை முதலிலேயே தெளிவு படுத்திக் கொண்டான். அதில் சந்திக்க வேண்டிய தடைகள், அவைகளைக் கடக்க வேண்டிய முறைகள் எல்லா வற்றிற்கும் தயார் படுத்திக் கொண்டு ஏறி னான். பயணப் பாதையில் குறிக்கிட்ட தடைகள் எல்லாமே இவன் ஊக்கத்தால் வெற்றிப் படிகள் ஆயின. முன் வைத்த காலைப் பின் வைக்காமல் லட்சிய வெறி யோடு மேலே, மேலே சென்றதனால் அமிர்தசஞ்சீவினியைக் கொண்டு வர முடிந்தது"

"எல்லாவற்றிற்கும் மேலே இறைவன் அருளும் இருந்தது'' என்று பணிவாக முடித்தான் அருளானந்தன்!



மேலோர் சொன்னது...

சின்னச் சின்ன சின்னஞ் சிறு
விதைக் குள்ளே - ஒரு
பெரிய மரம் முளைக்கும் திறன்
இருக்குதே...

என்ன என்ன என்ன திறன்
நமக்குள்ளே — மறைந்து
இருக்கு தென்று எடுத்துக் காட்ட
முடியுமா?

நமக்குள் மறைந்து இருக்கும் திறன்
முழுதையும் — நாம்
நன் முறையில் வளர்த்துப் பயன்
படுத்தினால் —

கணக்கில் லாத நன்மை நாளும்
விளையு மாம் — இது
காலம் வென்ற மேலோர் சொன்ன
உண்மை யாம்!

— விஜயசூர்யா

மீன்கொத்தி திறமையா?



மரக் கிளையில் உட்கார்ந்திருந்த மீன் கொத்தி அலகைச் சாய்த்துக் கீழ்க் கிளையில் உட்கார்ந்திருந்த கணவனைப் பார்த்தது.

"வங்கு பறிச்ச உடனே முட்டை யிட்டுட முடியுமா? அது பாது காப்பா இருக்கான்னு பார்க்க வேண்டாமா? மேல் பக்கம் மண்ணு சரிஞ்சு சரிஞ்சு விழுது. மீன் எலும்பையோ, மரப்பட்டையோ கொண்டு வந்து கூரை மாதிரி வைச்சப்புறம் தான் நான் முட்டை யிடுவேன்'' என்று கணவனுடன் கடு கடுப்பாகப் பேசி யது பெண் மீன் கொத்தி.

''அதுக்கு ஏன் இப்படிக் கடுகடுக் கறே? பனை மரக்காட்டு ஏரில, மீன்களெல்லாம் வளத்தியா கொழு கொழுன்னு இருக்கு. நீயும் வா. மீனைப் புடிச்சுத் தின்னுட்டு எலும்பை உடைக்காம கொண்டு வந்து வங்குக் கூடுக்குக் கூரை போட்டுட லாம்'' என்று யோசனை கூறி யது ஆண்.

''ச்சிச்சி, ச்சி ச்சி'' என்று பறந் தது பெண். அதே மாதிரிக் கத்திக் கொண்டு பின்னாலேயே பறந்தது ஆண்.

பனை மரக்காட்டு ஏரியில் நீர் தளும்பி, அலையடித்துக் கொண்டிருந்தது.

"நீ மரக்கிளையில் உட்கார்ந்து பார். நான் கொழுத்த மீனா புடிச்சுக்கிட்டு வரேன்'' என்றது ஆண் மீன்கொத்தி.

"இத பாரு, ஏரியிலே தண்ணி இன்னும் வந்துக்கிட்டே இருக்கு. அதனால தண்ணில நீரோட்டம் மாறிக்கிட்டே இருக்கு. குறி தவறி மீனைக் கோட்டை விட்டே அதைவிட அவமானம் எதுவுமே இல்லை. நம்ம இனத்தார் எல்லாம் அங்கங்கே இருந்து பார்த்துக்கிட்டே இருக்காங்க. எனக்கு வெளில தலை காட்ட முடியாது. அதனால. அவசரப்படாம கொஞ்சம் பொறுமையா இரு. நீரோட்டம் நிக்கட்டும். அப்புறமா மீனைப் பிடி'' என்றது பெண்.

''ஐயாவோட திறமையை நீ ரொம்பக் கேவலமா எடை போட்டுட்டே. எத்தனை நீரோட்டம் இருந்தாலும் சமாளிச்சு குறி தப்பாம மீன் பிடிப்பவன் நான். கடல் அலையிலேயே மீனைக்கொத்தி தங்கப் பதக்கம் வாங்கிய பரம்பரை எங்க குடும்பம்'' என்று வீராவேசமாகப் பேசிய ஆண், நீர்மட்டத்திற்கு மேல் பறந்தது.

பைனாகுலருடன் அரச மரக்கிளையில் அமர்ந்திருந்த தம்பு, ராஜாத்தியிடம் குறிப்பெழுதிக் கொள்ள விவரித்தான்.

"சிட்டுக் குருவியை விடக் கொஞ்சம் பெரிசு. நீண்ட அலகு. கறுப்பு நிறம். கண் விழிப் படலம் கறுப்பு வண்ணம். கால்கள் அரக்குச் சிவப்பு. உடம்பின் மேல் பக்கம் நல்ல நீல

— ரேவதி



வண்ணம். அலகின் கீழ்ப்பக்கத்தின் ஓரத்தில், கரை போட்டது மாதிரி ஒரு கோடு. இந்தக் கோடு பறவையின் கழுத்துவரை போகிறது. காதுக்குப் பக்கத்தில் வெண்மை படர்ந்திருக்கு. உடம்பின் அடிப்பக்கம் இரும்பில் துருப்பிடிச்ச வண்ணம். வால் குறுகிப் போய் தடிமனா முடிஞ்சிருக்கு. அதில்கூட மேலே நீலம், கீழே துருப்பிடிச்ச வண்ணம். தொண்டைப் பக்கம் வெண்மை நிறம்''

விவரித்துக் கொணடே வந்த தம்புவிடம் பரபரப்புக் காணப்பட்டது.

''ராஜாத்தி, அந்த மீன்கொத்தி தொடர்ந்து பறக்கலே, நீருக்கு மேல, இரண்டு மீட்டர் உயரத்தில் அப்படியே நிற்கப் பார்க்குது. வாலை ஆட்டி தலையை அசைத்து சிறகை விரித்துச் சுருக்கி என்னமோ பண்ணி, பேலன்ஸ் பண்ணி அந்தரத்தில் மிதந்து நின்று கீழே நீர்ப் பரப்பை ஆராயுது! அடே அப்பா! அடடா...! இப்போ இறக்கைகளை மடக்கிக்கிட்டு அம்பு மாதிரித் தண்ணிக்குள் பாயுது! அட! டைவ் அடிக்கும் நீச்சல் வீரன் வெளியே வரமாதிரி எத்தனை லாவகமா வெளியே வரது! அதன் அலகில் எத்தனை நீளமான மீன்!''

ஆண் மீன் கொத்தி, வெற்றிக் களிப்புடன், கொத்தியிருக்கும் மீனுடன், பெண் உட்கார்ந்திருந்த கிளைக்கு அருகே சென்று அமர்ந்தது. பெருமிதத்துடன் கணவனுக்கு அருகே வந்தது பெண். இரண்டும் மீனைக் கொத்தித் தின்ன ஆரம்பித்தன. அரைமணிக்குப் பிறகு நீளமான எலும்பு மட்டுமே மிஞ்சியிருந்தது! அதை வங்கின் கூரையாக்கி, மனைவியை முட்டையிட வைக்க ஆண் கவனமாகத் தூக்கிச் சென்றது. பெண் பெருமிதத்துடன் பின் தொடர்ந்தது முட்டையிட.

''மீன்கொத்திக்கு இலக்கணம் அவன் தான்! ஏரிநீர் ஓட்டம், வரும் நீர் ஓட்டம், மீனின் ஓட்டம் இத்தனையையும் நீருக்கு மேலே பறந்து நின்று ஆராய்ந்து, மின்னல் வேகத்தில் மூழ்கி, குறி தவறாம மீனைப் புடிச்சிட்டுப் போயிட்டானே!'' என்று கணவனைச் சாடியது மற்றொரு கிளையில் அமர்ந்திருந்த இன்னொரு மீன் கொத்தி!

''என்னமோ அவனுக்குக் குருட்டு அதிர்ஷ்டம். மீன் கிடைச்சிடுத்து. அவன் மட்டும் குறியைத் தவரவிட்டு வெளியே வெறும் அலகுடன் வந்திருந்தால் அவனை என்னமா கேலி பண்ணியிருப்பீங்க?'' என்று காட்டமாக பதில் கொடுத்தது ஆண்.

''ஆனாலும் உங்களுக்கெல்லாம் வர வர வீர சாகசம் செய்யும் ஆர்வம் குறைஞ்சு போச்சு. நிற்கும் நீரில் நீந்தும் மீனைப் புடிப்பது பெரிய காரியமா?'' என்று குறை

பட்டுக் கொண்டது பெண்.

அறிவியல் உண்மைகள்

● மீன்கொத்தி (KINGFISHERS) CORACILL FRMOS வரிசையில் ALCEDINIDAE குடும்பத்தைச் சேர்ந்தவை. இந்திய மீன்கொத்தி, கேரள வெள்ளை மீன்கொத்தி, சிறிய நீல நிற மீன்கொத்தி, மூன்றுவிரல் கொத்தி, பருத்த அலகு மீன் கொத்தி, சிவப்பு மீன் கொத்தி, வெண் மார்பு மீன்கொத்தி, கடுந்தலை மீன் கொத்தி, வெண்பட்டைக் கழுத்து மீன் கொத்தி பட்டை அலகு மீன்கொத்தி என்று பலவகை. அதிக அளவில் காணப் படுவது சிறிய நீல நிற மீன்கொத்திதான்.

● பெண்ணும் ஆணும் ஒரே அளவு. ஒரே மாதிரித்தான் இருக்கும். ஆனால் பெண்ணின் அலகின் அடியில் சற்று ஆரஞ்சு வண்ணம் இருக்கும்.

● தந்திக் கம்பம், மரக் கிளைகள், நீர் நிலைகளுக்கு அருகே உள்ள தரை வங்குகளில் இவை காணப் படும்.

● முக்கிய உணவு மீன் தான். ஆனால் இது கிடைக் கவில்லை என்றால் கவ லைப் படாது. தவளை, நீர் நிலம் வாழ் பூச்சி கள் என்று எதை வேண்டுமானாலும் உணவாக்கிக் கொள்ளும்.

● ஒருமுறை உட்கார்ந்து பறக்க எழுந்தால் 'ச்சிச்சி' என்று தொடர் குரல் தரும்.

● ஆற்றங் கரைகளில் நீர்ப்பசை உள்ள இடங்களில் ஒரு மீட்டர் வரை நிலத்தைக் குடைந்து வங்கு தோண்டி, மீன் எலும்புகளால் கூரை அமைத்து 4 லிருந்து 6 முட்டைகள் வரை இடும். பளபளப்பான வெண்மை வண் ணம். ஆணும் பெண்ணும் அடைகாத்து குஞ்சு பொரிக்கும். பொறுப்பாக இரண் டுமே குஞ்சுகளைப் பேணும்.

● மீன் கொத்திகள் மீன் பிடிப்பது தனி யான அழகு. இவை குறி தவறாமல் மீன் பிடிக்கும். இவைகளின் குறி தவறி விட்டால், அதற்குக் காரணம் மறைமுக மாக மனித னாகத்தான் இருக்கும்!





✉ இராக் கொக்குதான் வக்காவா! மாலை மயங்கியதும் கூட்டம் கூட்டமாகப் போகும். அவை பற்றி இத்தனை செய்திகளா! ஆசிரியரை எத்தனை முறை பாராட்டினாலும் போதாது! – சின்ன தாராபுரம் வி. மாணிக்கராஜு, சாத்தூர் க. தாமோதரம் பிள்ளை, விராலிமலை கு. சாரதாமணி, கோட்டையூர் மாணிக்க பூபதி, ராணிப்பேட்டை கா. பாத்திமா, மேலப்பாதி என். ராஜி, திருச்சி 14 ராஜி ராதா, விருத்தாசலம் வி. பிரபாகர்.

✉ "விவேகானந்தரை ஏன் பிடிக்கும்?" தொகுப்பு அருமையானது. அவர் இந்துக்களுக்கு மட்டுமே உரித்தானவர் என்று நிலவி வரும் தவறான கருத்தை இளம் குருத்துகள் உடைத்தெறிந்து விட்டார்கள்! இந்தப் பரந்த கண்ணோட்டம் எல்லோருக்கும் வரவேண்டும். அதற்கு எல்லோரும் முயல வேண்டும். கோகுலத்தின் தொடக்கம் நல்ல தொடக்கமாக இருக்கட்டும். அவர் உலக சகோதரத்துவத்தைக் கண்டவர். உலகம் முழுதுக்கும் பொதுவானவர் என்பதை எல்லோரும் உணர வேண்டும் – கோவை க. சத்யராஜ், ஸ்ரீவைகுண்டம் நா. சபாபதி, சிதம்பரம் கா. கிருஷ்ணகுமாரி, சாத்தூர் நா. பாக்கியராஜ், திருமணி வெ. அம்பலம், சென்னை – 1 கே. ஆர். உதயகுமார், விருத்தாசலம் வி. பிரபாகர், காயக்காடு ப. ராமகிருஷ்ணன், திருச்சுழி சுந்தர் அழகேசன், அருப்புக்கோட்டை வீ.கி. வேணி.

✉ 'உங்கள் நூலகம்' பகுதியை மீண்டும் தொடங்கியதற்கு நன்றி. இதே போல "கேளுங்கள் சொல்லப்படும்" பகுதியையும் மீண்டும் தொடங்கவும். கோபி. நா. சுப்புமணி, திண்டுக்கல் எஸ். ரத்னகுமார், திருவானை மா. கோபு, காயக்காடு ப. ராமகிருஷ்ணன், தேனி முருகேசன்.

✉ பூனை ராஜா படக்கதை, "இறுதியில் நீதியே நிலைக்கும்" என்ற கருத்தை மிக வலுவாகக் கூறியது. அதோடு, நீதிமான்களுக்கு சோதனைகளைத் தாங்கிக் கொள்ளும் மன உறுதியும் வேண்டும் என்பதை வலியுறுத்தியது. படங்கள் அருமை! – திண்டுக்கல் மா. பெர்னாண்டஸ், செஞ்சி வா. மாணிக்கம், மேட்டுப்பாளையம் வி. பெரியநாயகி, சென்னை – 1 கே. ஆர். உதயகுமார், வடக்கநந்தல் எஸ். வெங்கடேசன், மேலப்பாதி எஸ். நாகராஜன், காயக்காடு ப. ராமகிருஷ்ணன், தெற்கு பிச்சாவரம் கோ. ஐயப்பன், திருச்சுழி சுந்தர் அழகேசன்.

✉ "எந்நாட்டவர்க்கும்" கதை உதவி செய்யத் தூண்டியது! – வள்ளிமலை எஸ். நாகமணி, பள்ளிக்கட்டு எம். சுந்தரம், விருத்தாசலம் வி. பிரபாகர்.

✉ அழகுக்கே முதலிடம் கொடுத்துப் பழகுபவர்களுக்கு "பூனை குரு" நாடகம் சரியான அடி சார். – சென்னிமலை தா. சரண்யா, சத்தியமங்கலம் வா. பாவாஜி, திருமெய்யம் வி. சத்தியமூர்த்தி, பழனி மா. கந்தப்பன், திருக்கடவூர் வி. சத்தியசீலன், மதுக்கூர் கா. அல்லா பிச்சை, எட்டயபுரம் வி. கவிராஜன், தஞ்சை கு. பொன்முடி, விருத்தாசலம் வி. பிரபாகர், காயக்காடு ப. ராமகிருஷ்ணன், தெற்கு பிச்சாவரம் கோ. ஐயப்பன்.

✉ "நானா அழைத்தேன்?" – பரிசுக் கதை. அரசியல்வாதிகளின் செல்வாக்குக்கு மயங்கி, அவர்கள் பின்னால் ஓடும் மாணவ சமுதாயத்தின் சீரழிவைக் காட்டுகிறது. பயன்மிக்க படைப்பு! – கொள்ளேகால் ரா. பொன்ராஜ், திண்டிவனம் மா. லட்சுமி நாராயணன், தென்காசி. இல. முத்தையன், காயக்காடு ப. ராமச்சந்திரன்.

✉ என்ன சார் இந்த "சின்னபாபு", தாடகை ஆடிய தாயத்தை சட்டுப்புட்டென்று முடிக்காமல், அடுத்தது என்ன ஆகுமோ என்று இப்படிப் பதைபதைக்க வைக்கிறார்! இது நியாயமே இல்லை! – புதுகை வெ. ராமரத்னம், திருச்சி பெல்நகர் இரா. வேதவல்லி, திருப்பூர் மா. மருதமலை, சுவாமிமலை கா. கார்த்திகேயன், மதுரை – 4 மா. தண்ணீர்மலை, தேனி. வி.தம்புசாமி, காயக்காடு ப. ராமகிருஷ்ணன்.

✉ "தேர்வு வருது" பாடல் சூப்பர் சார் – தில்லைத்தானம் க. லட்சுமிபதி, எட்டுக்குடி கி. ராஜசேகரன், வில்லியனூர் நா. இராமபத்ரன், காயக்காடு ப. ராமகிருஷ்ணன்.

✉ குழந்தைகளுக்கு விருந்து வைத்த குழந்தைக் கவிஞரை நினைக்கும்போது கண்கலங்குகிறது! – புதுவை. எஸ். மணிமாறன், வண்டியூர் நா. சபாபதி, திருக்காளூர் எம். பரமசிவம், காரைக்குடி மா. எதிராஜன், சைதை ஜி. கே. அசோக்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக ஆசிரியர் பொறுப்பேற்று, அச்சிட்டு வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; பிரதம நிர்வாக அதிகாரி : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - விமானத் தபால் : ரூ. 200/-.



விடை: 8-ல் (20 மலர்கள்)

Registered with the Registrar of Newspaper of India Registered No. TN / MS (S) 281 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka